**ஞான தீபம் (மிஷ்காத்துல் அன்வார்) - Divine Vision (Mishkathul Anwar)**

*மூல நூலாசிரியர்:* **ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.** *In Arabic:* **Hjjathul Islam Imam Gazzali Radiallahu Anhu**

*தமிழில்:* **மௌலவி பாஸில் செய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி, ஸித்தீகி, காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.** *In Tamil:* **Moulvi Fazil Shaikh Abdul Quadir Alim Sufi, Siddiquee, Kahiri Radiallahu**

**மகுடம்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

மெய்ஞ்ஞானத் தேட்டவான்கள் இரண்டு பார்வையிலும் விழி மருண்டு, மதிமயங்கி, ஒளியிழந்து, அவனை மறந்து, இருளறை புகாவண்ணம், ஒளியீந்து, கைதந்து மெய்ப்பொருள் ஹக்குத்தஆலாவில் வஸ்து பெற மெய்வழிகாட்டி, ஞானத்தந்தை ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களது 'மிஷ்;காத்துல் அன்வார்'.

சுவைக்கச் சுவைக்க இனிமை மாறா இன்பததேன் அது. படிக்கப் படிக்க இதய இருள் நீங்கி ஒளிபிரகாசிக்கச் செய்யும் ஞானதீபம் அது. சங்கைக்குரிய அரபி மொழி கொண்ட அந்நூலை முக்கிய குறிப்புகளுடன் இந்நூல் - 'ஞான தீபம்' ஆக ஆக்கி எவரும் இலகுவில் புரிந்துணர்ந்து பயன் பெறக்கூடிய தன்மையில் தமிழில் மொழிபெயர்க்க அடியேனுக்கருள் செய்த ஹக்குத்தஆலாவுக்கே சர்வ புகழும்.

இதனை மொழி பெயர்த்து, பிரதிபண்ணி, அச்சிட்டு வெளியிடும்வரை எனக்குப் பற்பல துறைகளிலும் ஒத்துழைப்புத் தந்த சகல சகோதர அன்பர்களுக்கும், இதனை அச்சிட்டு வெளியிட முன்வந்த 'ஹிஸ்புல்லாஹ் ஸபை' அங்கத்தவர்களுக்கும், இதனை வாங்கிப்படித்துப் பயன்பெறும் சகல முஸ்லிம்களுக்கும் எமது நெஞ்சகந்த நன்றியை இத்தால் உரித்தாக்குவதுடன் கிருபையுள்ள றப்புல் ஆலமீனான ஹக்குத் தஆலா அவனது நூர் -ஒளி கொண்டு பரிணமிக்கச் செய்வானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன் என்று துவா கேட்கிறேன். வஸ்ஸலாம்.

கொழும்பு, இவ்வண்ணம்,

(இலங்கை) **மௌலவி ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி, காஹிரி.**

**ஞான தீபம்**

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே. ஒளிகளை வருஷிப்பவனும் பார்வைகளைத் திறந்து வைப்பவனும், இரகசியங்களை வெளியாக்கி வைப்பவனும், திரைகளை அகற்றி உயர்த்துபவனுமான அவனுக்கே சர்வ துதியும் உரித்தாகுக. ஸலவாத்தெனும் கருணையும்

ஸலாமெனும் சாந்தியும் ஒளிகளுக்கெல்லாம் ஒளியும், உத்தமர்களுக்கெல்லாம் நாயகரும், ஜப்பாரின் (ஒடிந்த மனதைப் பொருத்தி வைக்கும் வல்ல நாயனின்) தோழரும், கப்பாரின் (பாவங்களையெல்லாம் மன்னித்தருளும் பரம தயாளன் ஆகிய இறைவனின்) நன்மாராயம் கூறுபவரும், கஹ்ஹாரின் (அடக்கி ஆளும் வல்ல நாயனின்) புறத்தால் அச்சமூட்டுபவரும், காபிரீன்(அவிசுவாசி)களை முறியடித்தவரும், துஷ;டர்களை ஒடுக்கித் தலை குனியச் செய்தவருமான எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது கிளைஞர்கள் மீதும், பரிசுத்தமுடைய சான்றோர்களான அவர்களது தோழாகள் மீதும் உண்டாவதாக.

*கண்ணியமிகு சகோதரனே!*

முக்திபெறும் மாபெரும் சீர்வதித்தனத்தின் தேட்டத்தை அல்லாஹ் உனக்கு அருள்வானாக! உயர் பதவியில் உன்னை உயர்த்தியாக்கிப் பக்குவப்படுத்துவானாக. ஞானப் பிரகாசங்கொண்டு உனது அகக் கண்ணை ஒளியுறச் செய்வானாக. மெய்ப்பொருளான ஹக்கல்லாத்ததை விட்டும் உனது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவானாக!

தெய்வப் பிரகாசங்களின் அகமியங்களையும், அல்லாஹ் வானங்களுடையவும், பூமியுடையவும் ஜோதிப் பிரகாசமாய் இருக்கிறான். அவனது ஜோதிப் பிரகாசத்திற்கு உவமை ஒரு மாடக் குழியாகும். அதில் ஒரு விளக்கு, அது ஒரு பளிங்குக் கண்ணாடிக்குள்ளிருக்கிறது. அந்தக் கண்ணாடி முத்துப் போன்ற நட்சத்திரத்தைப் போல் இருக்கிறது. பாக்கியம் பெற்ற ஒரு மரத்திலிருந்து கிழக்கையோ, மேற்கையோ சேராத ஒரு ஸைத்தூன் மரத்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்யால் அது எரிகிறது. அந்த எண்ணெய்pல் நெருப்புப்படாமலே வெளிச்சம் தருகிறது. வெளிச்சத்திற்கு மேல் வெளிச்சம் உண்டாகிறது.' (திருக்குர்ஆன் 24:35) என்பன போன்ற திருமறை வசனங்களின் அந்தரங்கங்களையும், மேற்சொன்ன வாக்கியத்தில் வந்துள்ள வெளிச்சம், மாடக்குழி, கண்ணாடி, விளக்கு, எண்ணெய், மரம் ஆகியவைகளைக் கொண்டு உவமை காட்டியதால் கருத்து யாது என்பதையும், ஹதீது ஷரீபில் - 'அல்லாஹ்வுக்கு ஒளிவாலும், இருளாலுமான எழுபதுனாயிரம் திரைகள் உண்டு. அத்திரைகளை அவன் அகற்றுவானாயின் அவனது வஜ்ஹின் (சன்னிதானத்தின்) ஜாஜ்வல்யம் தம் கண்ணால் அவனைத் தரிசிக்கும் யாவரையும் எரித்துப் பொசுக்கி விடும்.' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியிருப்பதன் விளக்கமென்னதென்றும் என்னிடம் வினவுகிறாய்.

ஆனால் நீ இவ்விதம் கேட்பதன் மூலம் பார்க்கிறவர்களின் கண்பார்வை என்னும் அம்புகளும் கூட அதன் உச்சியை எட்டிப் பார்க்க இயலாது கீழே திரும்பிவிடக் கூடிய வருத்தமான மிகவும் உன்னதமான உயர் சிகரத்தையே எட்டிப் பிடிக்க முயலுகிறாய். ஞானத்தில் ஸ்திரமான பெரும் அறிவாளிகளுக்கேயல்லாது வேறெவருக்கும் திறக்கக் கூடாத – பூட்டப்பட்ட ஒரு கதவையே தட்டுகிறாய். பின்னர் எல்லா இரகசியங்களும் வெளிப்படுவதற்குமில்லை. எல்லா அந்தரங்கங்களும் எடுத்தியம்புவதற்குமில்லை. எனினும், சான்றோர்களின் இதயங்கள்

அகமியங்களை அடக்கம் செய்யப்படும் புதை குழியாகும்.

ஞானிகளிலொருவர் கூறுகிறார் - 'தெய்வீகத்தின் இரகசியத்தை வெளியாக்குவது குப்ராகும் - நன்றிக்கு மாறு செய்வதாகும்' என்று.

முன்னோர், பின்னோர் யாவர்க்கும் நாயகமான எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அருள் செய்துள்ளார்கள் - 'மறை முகமாகவே இருக்கக் கூடிய அம்ச அடக்கமான பொருளைப் போன்ற சில ஞானங்களுமுண்டு. அத்தகையதை அல்லாஹ்வை அறிந்த மெஞ்ஞானிகளைத் தவிர்த்து வேறெவரும் அறியமாட்டார். அத்தகையதை அவர்கள் சொல்லிக் காட்டுவார்களேயானால், அதைப் பற்றி அல்லாஹ்வை அறியாமல் மருண்டு கிடக்கக் கூடிய ஜனங்களேயல்லாது மற்றப்படி யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.'

அல்லாஹ்வை அறியாத மருட்சியாளர்கள் அதிகமாக ஆகிவிட்ட வேளையில் அந்தத் தீயவர்களின் முகத்தை விட்டும் இரகசியங்களைப் பேணி பாதுகாத்தல் கடமையாகிவிட்டது.

ஆனால் அன்பனே! ஜோதிப் பிரகாசத்தால் உனது அகம் விகாசமடைந்ததாகவும், மருட்சியெனும் இருளை விட்டும் நீ பரிசுத்தம் அடைந்தவனாகவும், உன்னைக் காணுகிறேன். ஆகையால், ஞான ஒளியைப் பற்றி சயிக்கினை செய்து அகமியங்களைப் பற்றி சுட்டிக் காட்டி உனக்கு விளக்கம் செய்வதில் நான் கஞ்சத்தனம் செய்யமாட்டேன். ஏனென்றால், தகுதியற்றவர்களிடம் ஞானத்தை வெளிப்படுத்துவது சின்ன அநியாயம் என்றால், தகுதியுடையவர்களுக்கு ஞானத்தை எடுத்துக் கூறாமல் விலகிக் கொள்வது அதைவிடப் பெரிய அநியாயமாகும்.

கவிராயர் ஒருவர் கூறுகிறார்:- 'அறிவிலிகளிடம் அருமந்த ஞானத்தை அள்ளிக் கொடுப்பவன் அதைப் பாழ்படுத்தி விட்டான். உற்ற தகுதியாளர்களுக்கு உயர் ஞானத்தை உரைக்காமல் மறுப்பவன் உண்மையில் (அதற்கு) அநியாயமே செய்து விட்டான்'.

நான் சுருக்கமாக சயிக்கினை செய்து எடுத்துரைப்பதைக் கொண்டு நீ திருப்தியடைந்து கொள்வாயாக! பூரணமாக இதுபற்றித் தெளிவுபடுத்திச் சொல்வதென்றால் ஏராளமான மூல அத்தாட்சிகளையும், பீடிகைகளையும், பற்பல அத்தியாயங்களையும் சொல்ல வேண்டும். அதற்கு எனக்கு இப்போது அவசகாசம் போதாது. என் கவனமும், கருத்தும் வேறு திசையில் ஈடுபட்டிருப்பதனால் இப்போது அதன் பக்கம் செல்லவும் செய்யாது.

எல்லா இதயங்களின் திறவு கோல்களும் ஏக வல்ல அல்லாஹ்விடமே உள்ளன. அவ்விதயங்களை அவன் தான் விரும்பிய நேரத்தில், தான் விரும்பியது போல், தான் விரும்பியதைக் கொண்டு திறந்தருள்வான். இது சமயம் (இவ் விசயம் பற்றி) மூன்றே மூன்று அத்தியாயங்களில் தான் திறவுபடியாகியுள்ளது.

**முதல் அத்தியாயம்**

எதார்த்தமான ஒளியாகிறது அல்லாஹுதஆலாவேயாகும். அவனல்லாதனவற்றிற்கு ஒளியென்று பெயர் சொல்வதெல்லாம் வெறும் இரவல் கற்பனையாகச் சொல்வதேயல்லாமல் அவற்றிற்கு எதார்த்தமில்லையென்பதை விவரிப்பதாகும்.

'ஒளி' என்ற பதத்திற்கு முதலில் அவாமுகள் (சாதாரண ஜனங்கள்) என்ன கருத்து வைத்துள்ளார்கள் என்பதனையும், இரண்டாவதாக கவாஸ்ஸுகள் (விசேசமான ஜனங்கள்) என்ன அர்த்தம் கொண்டுள்ளார்கள் என்பதனையும், மூன்றாவதாக கவாஸ்ஸுல் கவாஸ்ஸுகள் (குறிப்பிடத்தக்க விசேசமான ஜனங்கள்) என்ன கருத்து வைத்துள்ளனர் என்பதனையும் நீ அறிந்து கொள்ள வேண்டும்.

பின்னர், விசேஷமானவர்களிடத்தில் சொல்லப்படுகிற ஒளியின் தரங்களையும், அந்தரங்கங்களையும் நீ அறிய வேண்டும். அதன் தரங்கள் உனக்கு வெளியாகும் போது அல்லாஹ் தஆலாவே மேலான, முடிவான ஒளியாகும் என்பதும், ஒளியின் அந்தரங்கம் வெளியாகும் போது அவன் ஒருவனே உண்மையான, எதார்த்தமான ஒளியாக இருக்கும். அதில் அவனுக்கு கூட்டு எதுவும் இல்லை என்பதும் வெளியாகும்.

முதல் சாரார், சாதாரண மக்கள் ஒளிபற்றி வைத்துள்ள (கருத்தை நோட்டமிடுவோம். அவர்கள் கொண்டுள்ள) கருத்தாவது, ஒளி என்பது ஒரு பொருள் வெளியாவதற்கு – தோன்றுவதற்கு சொல்லப்படும். வெளியாவது என்பதோ ஒன்றோடு கவனித்துப் பார்ப்பதனால் ஆகக் கூடியதாகும். ஏனென்றால், ஒரு பொருள் ஒருவருக்குக் கண்டிப்பாக வெளியாகியும், மற்றவருக்கு வெளியாகாமல் மறைந்தும் இருக்கும். அப்போது அந்தப் பொருள் ஒருவரைக் கவனிக்கும் போது வெளியானதாகவும், மற்றவரைக் கவனித்தால் மறைந்ததுவுமேயாகும். புலன்களில் சக்தி வாய்ந்ததும் உயர்வானதும் சாதாரண மக்களிடத்தில் வெளிப் புலன்களேயாகும். அதிலொன்றுதான் பார்வை (பார்த்தறிவது). பொருட்களெல்லாம் இந்தப் பார்வையெனும் புலனோடு சேர்த்துப் பார்த்தால் மூன்று வகைகளாகும்.

1. **அதைப் பார்க்க முடியாது.** இருளான வஸ்துக்களைப் போல.

2. **அதைப் பார்க்க முடியும்.** அதைக் கொண்டு பிறிதொன்றைப் பார்க்க முடியாது. பிரகாசமான வஸ்துக்களைப் போல். உதாரணமாக:- நட்சத்திரங்கள், ஜுவாலையற்ற எரியாத நெருப்பு கங்குகளைப் போல்.

3. **அதைப் பார்க்கவும் முடியும். அதைக் கொண்டு மற்றதையும் காணவும் முடியும்.** உதாரணமாக சூரியன், சந்திரன், பிரகாசிக்கக் கூடிய தீபங்களைப் போல். நூர் (ஒளி) என்று இந்த மூன்றாவது வகைக்குத்தான் சொல்லப்படும். சில சமயம் இந்தப் பிரகாசிக்கும்படியான வஸ்துக்களிலிருந்து ஜொலித்துக் கண்டிப்பான பொருளின் பேரில் விழக் கூடிய பிரகாசத்திற்கும் ஒளியென்று சொல்லப்படும்.

பூமி வெளிச்சமாகிவிட்டது. சூரியனின் பிரகாசம் பூமியில் விழுந்து விட்டது. தீபத்தின் பிரகாசம் சுவரின் மீது வஸ்த்திரத்தின் மீது விழுந்தது என்று சொல்வார்கள். வேறு சமயம் அந்தப்

பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த வஸ்துவுக்கே சொல்வார்கள். ஏனெனில், அது தன்னிலே பிரகாசித்துக் கொண்டிருப்பதனால்.

பொதுவாக, ஒளி என்றால், எது பார்க்கப் படக் கூடியதாகவும், அதைக் கொண்டு மற்ற பொருளையும் பார்க்கப்படுமோ அதற்கே சொல்லப்படும். இதுதான் ஒளியென்பதற்கு முதலாம் வகுப்பாரிடத்தில் பொருளாம்.

**நுட்பம்**

ஒளியின் தத்துவமும், அந்தரங்கமும் எட்டிக் கொள்வதற்கு வெளியாகுவதேயாகும். எட்டிக் கொள்வதோ ஒளியின் பேரில் தரிபட்டதாக இருப்பது போல் கண்பார்வையின் பேரிலும் தரிபட்டதாகவே இருக்கிறது. ஏனென்றால், ஒளி என்பது தானும் வெளியாகி பிற பொருளையும், வெளியாக்கக் கூடியதேயாகும். சூரியன், சந்திரன், தீபங்களைப் போல்.

இந்த ஒளிகளில் ஒன்றுமே குருடர்களுக்கு வெளியானதாகவோ, வெளியாகக் கூடியதாகவோ இல்லை. எனவே, எட்டிக் கொள்வதற்கு இன்றியமையாத, அவசியமான, அம்சம் என்பதில் ஒளியோடு கண் பார்வையும் சமமாகி விட்டது. (இதுவும் அவசிய அம்சமாகி விட்டது) மேலும், கண் பார்வை அதை விடவும் மேலே முக்கியத்துவம் பெற்று விட்டது. ஏனென்றால், கண் பார்வை தான் எட்டக் கூடியதும் அதைக் கொண்டே தான் எட்டிக் கொள்ளவும் படுகிறது. ஒளியோ அது தான் எட்டக் கூடியதுமில்லை. அதைக் கொண்டு எட்டிக் கொள்ளவும் படாது. ஆனால், அது இருக்குமிடத்தில் எட்டிக் கொள்வது உண்டாகும். எனவே, பிரகாசித்து ஜொலிக்கும் பொருளுக்கு ஒளியென்று சொல்வதைப் பார்க்கிலும் கண் பார்வைக்குத் தான் ஒளி என்ற பெயர் தகுதியாகும்.

ஆகவே பார்க்கக் கூடிய கண்ணொளிக்கே நூர் - ஒளியென்று வைத்து வௌவாலைப் பற்றி அதன் கண்ணொளி பலஹீனமானது என்றும், கூசிக் கண்ணனைப் பற்றி இவன் கண்ணொளி குறைந்தவன் என்றும், கபோதியைப் பற்றி இவன் கண்ணொளியை இழந்தவன் என்றும் சொல்கிறார்கள்.

மேலும், கறுப்பு நிறம் கண்ணொளியை ஒன்று சேர்த்து அதைக் கெட்டிப் படுத்துகிறது. கண் இமைகளில் ரோமங்களை கருநிறமாக கண்ணைச் சுற்றி வைத்ததும் ஹிக்மத்தே இலாஹி (தெய்வீக உபாயம்) ஆகும். வெண்மையோ கண்ணொளியைப் பிரித்து சிதற வைத்து ஒளியைப் பலஹீனப்படுத்துகிறது. பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு பொருளையோ, சூரியனையோ கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதனால் கண்பார்வை மழுங்கிப் போகிறது, பலசாலியிடத்தில் பலஹீனன் மடிவது போல் என்றும் சொல்கிறார்கள்.

இப்போது கூறி வந்ததிலிருந்து கண்பார்வைக்குத்தான் ஒளி என்று சொல்லப்படும் என்பதையும், இப்படிப் பேர் சொல்லப்படுவதற்கு அது ஏன் தகுமானது என்பதையும் நீ நன்கு அறிந்திருப்பாய். இதுவேதான் நூர் - ஒளி என்பதற்கு இரண்டாவது பொருள். இதுதான் கவாஸ்ஸுகளிடத்தில் சொல்லப்படுகிறது.

**எதார்த்தம்**

அறிந்துகொள்! கண் பார்வை பல வகையான குறைபாடுகளையும் உடையதாகும்:-

1. அது பிற வஸ்துவைப் பார்க்கும். ஆனால் தன்னை பார்க்காது.

2. அது அதிக தூரமானதையும், மிகச் சமீபமானதையும் பார்க்காது.

3. அது திரைக்கு அப்பாலுள்ளதைப் பார்க்காது.

4. அது பொருட்களின் வெளிப்பகுதியையே பார்க்கும். அதன் உட்பகுதியை பார்க்காது.

5. அது மவ்ஜூதாத்தில் (சிருஷ;டிப் பொருளில்) சிலவற்றையே (நிற, கோலத்தையே) பார்க்கும்.

6. அது ஒரு எல்லைக்குட்பட்டதையே பார்க்குமேயல்லாது எல்லைக்குட்படாததைப் பார்க்காது.

7. அது பார்ப்பதிலும் அனேக வேளைகளில் பிழையாகி விடுகிறது. பெரியதைச் சிறியதாகவும், தூரத்திலுள்ளதைச் சமீபமாகவும், நிலையிலுள்ளதை அசைவதாகவும், அசைவதை நிலையிலுள்ளதாகவும் பார்க்கிறது.

இந்த ஏழு குறைபாடுகளும் கண் பார்வையை விட்டகலாது.

எனவே, கண்களில் இந்த ஏழு குறைபாடுகளையும் விட்டுப் பரிசுத்தமானது ஒன்றிருக்குமேயானால் அதுவல்லவா நூர்-ஒளி என்று பெயர் சொல்லப்படுவதற்குத் தகுமானதாகும்?

ஆகவே மனிதனுடைய இருதயத்தில் இத்தகைய குறைபாடுகளைக் கொண்டுமில்லாது சம்பூரண இலட்சணத்தையுடைய ஒரு கண் இருக்கிறது என்பது விளங்கப்படுகிறது. அதற்குத்தான் ஒரு சமயம் அக்லு (புத்தி) என்றும், ஒரு சமயம் றூஹ் (உயிர்) என்றும், ஒரு சமயம் நப்ஸு இன்ஸானீ (மனிதாத்துமா) என்றும் சொல்லப்படுகிறது. நீ இந்தப் பற்பல பதப்பிரயோகங்களையும் விட்டுவிடு. ஏனென்றால், பல பதங்களைச் சொல்வதனால் பொருட்;களும் பலவாக இருக்கலாமோ எனப் பலவீனமாக அறிவுடையவனைச் சந்தேகத்தில் ஆக்கிவிடவும் கூடும். எனவே, நாம் இந்தப் பதங்களைக் கொண்டு எதனால் புத்திமான், சிறுமதளை, பயித்தியக்காரன், மிருகம் முதலானவற்றை விட்டும் பிரத்தியோகமாகப் பிரிகிறானோ அந்த ஒரு பொருளையே கருதுகிறோம். அதற்குப் பெரும்பாலானோர் சொல்வதைப் போல நாமும் அக்லு என்று பெயர் சொல்கிறோம். ஆகவே இந்த அக்லே மேற் சொன்ன ஏழு குறைபாடுகளை விட்டும் பரிசுத்தமானதாக இருப்பதனால் அதுவே வெளிக் கண்ணை விடவும் நூர்-ஒளி என்று பெயர் சொல்லப்பட மிகவும் தகுமானது என்கிறோம். அதற்குச் சில அத்தாட்சிகள்:-

1. வெளிக் கண் தன்னையே பார்க்காது. அக்லோ தன்னல்லாதவற்றையும் பார்க்கிறது. தன்னையும் பார்க்கிறது. இன்னமும் அத தன்னை அறிவுடையதாகவும், சக்தியுடையதாகவும்

அறிகிறது. மேலும் அது, தன்னை அறிந்ததையும், தன்னை அறிந்ததை அறிந்ததையும் இப்படியே எல்லையில்லாமல் அறிகிறது. அது இதற்கே சொந்தமானதாகும். ஸ்தூலக் கருவிகளைக் கொண்டு உள்ள (புற கரணங்களால்) இப்படி அறிவது சாத்தியமாகாது. மேலும், இதற்கப்பாலும் அனேக இரகசியங்கள் உள்ளன. அவற்றை விவரிக்கப் புகின் நீண்டுவிடும்.

2. கண் தனக்கு அதிக சமீபமானதையும், அதிக தூரமானதையும் அறியாது. அக்லோ அதனிடத்தில் சமீபம் என்பதும், தூரம் என்பதும் சமமானதேயாம். ஒரு நொடியில் ஒரே ஏற்றமாக சகல வானங்களுக்கும் மேலாக ஏறிவிடும். மறு கணத்தில் ஒரே இறக்கமாகப் பூமியின் அதள பாதாளத்திற்குக் கீழும் இறங்கி விடும். மேலும் எதார்த்தத்தை நோக்கில், சடப் பொருள்களுக்கு இடையிலுண்டாகும் தூரம், சமீபம் என்பது அக்லின் உயரிய தன்மைக்குப் பக்கத்தில் கூட வருகிறதை விட்டுமே அது பரிசுத்தமானதாக இருப்பது விளங்க வரும். அதுவோ அல்லாஹ்வின் ஞான சமுத்திரத்தின் ஒரு மாதிரி நமூனாவாகும். நமூனா அசலோடு பூரணமாக ஒப்பாகிற உச்சத்திற்கு ஏற முடியாதிருந்தாலும் அசலோடு ஓரளவாவது ஒப்பாகுவதை விட்டும் நீங்காது. இந்த வார்த்தை, '*அல்லாஹ் ஆதமை தனது ஸூரத்தில் படைத்தான்*' என்ற நாயக வாக்கியத்தின் இரகசியத்தை அறிய வேண்டுமென உன்னை எழுப்பி விடக் கூடும். ஆனால், இது சமயம் அந்த விஷயத்தில் மூழ்கி விவரிக்கிறதை நான் விரும்பவில்லை.

3. திரைக்கப்பால் உள்ளதை வெளிக்கண் பார்க்காது. அக்லோ தனக்குச் சொந்தமான ஆலத்திலும், தனக்குச் சமீபமான தனது ஆட்சிக்குட்பட்டதிலும் ஆட்சி செய்வது போல் அர்ஷpலும், குர்ஸிலும், வானங்களின் திரைகளுக்கப்பாலும், மேலுலகத்திலும், மலக்கூத்துடைய ஆலத்திலும் ஆட்சி செய்கிறது. மேலும், ஹகாயிகுகள் (பொருட்களின் அகமியங்கள்) எதையுமே அக்லை விட்டும் மறைக்கப்படுவதில்லை. அக்லுக்குத் திரை வந்ததெல்லாம், அது தன்னைப் பார்க்க முடியாது, அதை மறைக்கக் கூடிய அதோடு வந்து சேர்ந்து கொண்ட லட்சணங்களாலேயேயாம். கண் இமைகளை மூடும்போது கண்ணுக்கு அதனிடத்திலிருந்தே திரை உண்டாவது போல். இதுபற்றிய மேல் விளக்கத்தை இந்நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் அறிந்து கொள்வாய்.

4. கண் பொருட்களின் வெளிப்பாகத்தையும், மேல்பாகத்தையும், அதன் தூலத்தையும், உருவத்தையுமேதான் எற்றிக் கொள்ளுமேயல்லாது அவற்றின் உள்ரங்கத்தையும், எதார்த்த தத்துவங்களையும் நோட்டமிடாது. அக்லோ, பொருட்களின் அந்தரங்கம் - இரகசியங்களுக்குள்ளாலெல்லாம் ஊடுருவிச் சென்று பார்க்கும். அவற்றின் எதார்த்தங்களையும், தத்துவங்களையும் விளங்கிக் கொள்ளும். அவைகளின் காரணங்களையும், அவைகளைப் பற்றிய மார்க்கத் தீர்ப்புகளையும், அவை எதிலிருந்து உண்டானவை, எப்படிப் படைக்கப்பட்டவை, அவைகளில் அமைக்கப்பட்ட கருத்துக்களென்ன, சிருஷ்டிப் பொருள்களில் அவற்றின் தரம் என்ன? அவைகளுக்கும் மற்றப் பொருள்களுக்குமிடையில் என்ன சம்பந்தம் என்ற இவ்விஷயங்களையும் வேறு பல விஷயங்களையும் அறிந்து கொள்கிறது. அவைகளை

வவிவரித்துச் சொல்வதென்றால் நீண்டு விடும். ஆகவே சுருக்கிக் கொள்வதையே உசிதமாகக் காண்கிறோம்.

5. சிஷ்ருடிப் பொருள்களிலும் சிலவற்றையே கண் பார்க்கிறது. அந்தக் கரணங்களால் அறியப்படுபவைகள் அத்தனையை விட்டும், வெளிப்புலன்களால் கிரகிக்கப்படுபவைகளிலும் அநேகமானவற்றையும் எட்டிக் கொள்வதை விட்டும் கண், மாட்டாங்கியாகிக் கிடக்கிறது. அது சப்தங்களை ஏற்காது, வாடை, சுவை, சூடு, குளிர்ச்சி, உணர்ச்சி ஆகியவற்றையும், எட்டிக் கொள்ளும் புலன்களையும், அதாவது கேட்கும் சக்தி, நுகரும் சக்தி, ருசிபார்க்கும் சக்தி ஆகியவைகளையும் அறியாது. சுகதுக்கம், இன்ப துன்பம், ஆசை, காமம், தத்துவம், நாட்டம், அறிவு போன்ற நபுஸின் அந்தரங்க லட்சணங்களிலும், இவையல்லாத மட்டிலடங்காத சிருஷ;டிகளிலும் கண்ணுக்குச் செல்ல வழியில்லை. அங்கு அதன் ஓட்டம் தடுக்கப்பட்டிருக்கிறது. நிற கோல உலகை விட்டும் அப்பால் செல்ல அதற்கு இயலாது. இவ்விரண்டுமோ சிருஷ்டிகளிலெல்லாம் மிகவும் அர்ப்பமானதாகும். ஏனென்றால் சட உலகமே சர்வ சிருஷ்டிகளின் வகைகளிலெல்லாம் தாழ்ந்ததாகும். நிறங்களும், கோலங்களும் சடத்தின் ஆதேயப் பொருள்களில் மிகக் கேவலமானதாகும்.

அக்லுக்கோ, சர்வ சிருஷ்டிகளிலும் நாம் எடுத்துக் காட்டியவற்றிலும், எடுத்துக் காட்டாதவை அநேகமிருக்கின்றன. அவற்றிலும் அதிகாரமிருக்கிறது. அவையனைத்திலும் அது ஆட்சி செய்கிறது. அவையனைத்திலும் உண்மை எதார்த்தமான தீர்ப்பாகத் தீர்ப்பு கூறுகிறது. மறைந்த இரகசியங்களெல்லாம் அதனிடத்தில் வெளியானதாகும். ஆழ்ந்த கருத்துக்ளெல்லாம் அதனிடத்தில் தெளிவாகப் பிரஸ்தாபமானவையாகும்.

எனவே நூர் - ஒளி என்ற பெயருக்குப் பாத்தியதை கொண்டாடுவதில் கண்ணுக்கு அக்லோடு சம அந்தஸ்து எங்கே இருக்கிறது? ஒரு வகையாலும் இல்லவே இல்லை.

முகக் கண் மற்றதோடு சேர்த்துப் பார்க்க ஒளிதான். ஆனாலும், இத்தோடு (அக்லோடு) கவனித்துப் பார்த்தால் இருளேதான். மேலும், அது அக்லின் உளவாளிகளில் ஒரு உளவாளியேயாகும். அதை அக்லு தனது கஜானாக்களில் நின்றும் நிறம், கோலங்களான தாழ்ந்த கஜானாவில் தனக்குத் தகவல்கள் எடுத்துக் கொடுப்பதற்காகச் சாட்டி வைத்திருக்கிறது. அதில் தனது நேர்மையான யோசனை, செல்லுபடியான தீர்ப்பு தேடுவதே போல் கட்டளையிடுகிறது.

இன்னமும், அக்லுக்கு இதுவல்லாமல் கியால், வஹ்மு, பிக்று, திக்று, ஹிப்ழு (கற்பனை, சந்தேகம், சிந்தனை, ஞாபகம், மனனம்) களாகிய மற்றப் புலன்களும் அதன் உளவாளிகளேயாகும். இவற்றிற்கப்பாலும் அதற்கு ஊழியர்களும், பட்டாளங்களும் உள்ளன. அவைகளும் அதற்குப் பிரசன்னமான உலகத்தில் வசப்படுத்தப்பட்டவைகளாகும். அரசன் தனது அடிமைகளை வசப்படுத்துவதுபோல் அவற்றை அது வசப்படுத்திக் கொண்டுள்ளது. அதைவிடக் கடுமையாகவும் வசப்படுத்தியுள்ளது. இதுபற்றி இன்னமும் விபரித்தால் நீளும். '**இஹ்யா**

**உலூமுத்தீன் அஜாயிபுல் கல்பு'** (உள்ளத்தின் விந்தைகள்) என்ற பாடத்தில் அது பற்றி விபரித்துள்ளோம்.

6. கண் எல்லையில்லாதவற்றைப் பார்க்காது. அது அறியப்பட்ட சடங்களின் லட்சணங்களையே பார்க்கும். சடங்களோ எல்லைக்குள்ளானதாகவேயல்லாது காணமுடியாது. அக்லோ, மஃகூலாத்து (அக்லால் அறியப்பட்டவை) களையும் எட்டிக் கொள்ளும். உள்புலன்களிலான அக்லால் அறியப்படுபவை ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டவைகளாக இருப்பது அசாத்தியமாகும். மெய்தான் அக்லால் அறியப்பட்டவைகளைக் கவனித்தால் அதனிடம் தற்போதுண்டான அறிவு, அதனால் அறியப்பட்டவைகள் வரம்புக்குள்ளானவையாகவே அல்லாமல் இருக்காது. ஆனாலும், அதற்குள் (அக்லுக்குள்) எல்லையற்றவைகளை எல்லாம் அறியக் கூடிய சக்தி மறைந்து கிடக்கிறது. அதை விவரிக்கப் புகின் விரிவாகும். அதற்கு ஒரு உவமானம் வேண்டுமானால் கணிதத்தை எடுத்துக் கொள்.

அக்லு எண்களையெல்லாம் எட்டிக் கொள்ளும். எண்களுக்கோ எல்லையில்லை. மேலும், இரண்டு, மூன்று இன்னமும் மற்ற எண்களுடைய இரட்டிப்புகளையும் அறியும். அவைகளுக்கோ ஒரு முடிவுமில்லை. மேலும் அது (அக்லு) தான் ஒரு பொருளை அறிந்ததையும், அறிந்ததை அறிந்ததையும் இந்த வகையிலும் அதன் சக்தி ஒரு எல்லையில் கட்டுப்பட்டுப் போய் நிற்காது.

7. கண் பெரியதைச் சிறியதாகக் காண்கிறது. சூரியனை ஒரு சிறு கல்லின் அளவிலும், நட்சத்திரங்களை நீல நிறமுடைய சமக்காளத்தில் சிந்திச் சிதறி கிடக்கும் வெள்ளி நாணயத்தின் ரூபத்திலும் பார்க்கிறது. ஆனால் அக்லோ சூரியனும், நட்சத்திரங்களும் பூமியை விட பன்மடங்கு பெரியது என்று அறிகிறது.

கண், நட்சத்திரங்களை அசைவற்று நிற்பதாகவும், நிழலைக் கூட தனக்கு முன்னால் அசைவற்று நிற்பதாகவும் சிறுவன் அவனது அளவிலேயே நிலையாக இருக்கிறான் என்றும் பார்க்கிறது. ஆனால், அக்லோ சிறுவன் எப்போதும் வளர்ச்சியிலும், விருத்தியிலும் இயங்கிக் கொண்டிருக்கிறான். நிழல் சதாவும் அசைந்து கொண்டேயிருக்கிறது. நட்சத்திரங்கள் எல்லாம் ஒவ்வாரு கணத்திற்கும் எத்தனையோ மைல் தூரம் அசைந்து ஓடிக் கொண்டிருக்கின்றனவென்றும் அறிகிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் 'சூரியன் (நடு உச்சியை விட்டு) அகன்று விட்டதா?' என்று வினவினார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'இல்லை, ஆம்' என்று பதிலளித்தார்கள். அதோடு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அது எப்படி?' என்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், 'நான் இல்லையென்று சொல்லி அடுத்து ஆம் என்று சொல்வதற்குள் சூரியன் ஐநூறு வருஷ தொலை தூரத்தைக் கடந்து விட்டதே' என்று சொன்னார்கள். எனவே, கண் பார்வையில் பிழைகள் பல. அக்லு அவற்றை விட்டும் பரிசுத்தப்பட்டதாகும்.

புத்திமான்களும் கூட அவர்களது ஆராய்ச்சியில் தவறிவிடுகிறார்களே என்று ஒருக்கால் நீ கேட்கக் கூடும். அறிந்து கொள்! அவர்களுக்கு அவர்களது கற்பனைகளும், பேத புத்தியும் சில கொள்கைகளைக் கற்பித்துக் கொடுத்தன. அதை அவர்கள் அக்லு கொடுத்த முடிவு எனக் கருதி கொண்டார்கள். ஆகவே, தவறு அவர்களது பேத புத்தியைச் சேர்ந்ததேயாகும். இது பற்றி நமது **'மிஃயாருல் இல்மி' 'மிஹக்குன்னஸ்ர்'** என்னும் நூற்களில் விவரித்துக் கூறியுள்ளோம்.

ஆகவே அக்லை விட்டுப் பிரேமை, கற்பனையின் முகமூடியை அகற்றிவிட்டால் அக்லு தவறு இழைப்பது சாத்தியமாகாது. என்கிலும், அது எல்லா வஸ்துக்களையும், அததன் சுயவடிவிலேயே பார்க்கும். ஆனால் அதைவிட்டு அந்தத் திரையை நீக்குவதில் பெரும் சிரமம் உண்டு. இத்தகைய திரைகளை விட்டும் பூரணமாக நீங்கிக் கொள்வது மரணத்திற்கு அப்பாலேயாகும். அப்போது திரைகளெல்லாம் நீங்கி விடும். இரகசியங்களெல்லாம் வெளியாகிவிடும். ஒவ்வொருவரும் தான் தேடிக்கொண்;ட நன்மையையோ, தீமையையோ பிரசன்னமாக பார்ப்பார்கள். அற்பமானதோ, பெரியதோ எதுவொன்றையும் கூட விட்டு வைக்காமல் எடுத்துக் காட்டக்கூடிய ஏட்டைக் கண்டு கொள்வார்கள்.

அந்நேரத்தில், 'உன்னை விட்டும் உன் திரையை நீக்கி விட்டோம். இன்று உனது பார்வை மிகக் கூர்மையானதாக இருக்கிறது' என்று அவனுக்குச் சொல்லப்படும். (திருக்குர்ஆன் 50:22)

மறைப்பு என்பதெல்லாம் வஹ்மு (பிரேமை), கியாமு (கற்பனை) என்னும் திரையேயாகும். அந்நேரத்தில் தங்களது கெட்ட கொள்கை, வீண் கற்பனைகளைக் கொண்டு மருண்டவர்கள், 'எங்கள் இரட்சகா! நாங்கள் பார்த்துக் கொண்டோம். கேட்டுக் கொண்டோம். எங்களைத் திரும்ப (உலகத்திற்கு) அனுப்பிவை. (இனி) நாங்கள் நல்ல அமல்களை செய்கிறோம். நிச்சயமாக நாங்கள் (இப்போது) உறுதிப்பாடு (எகீன்) உடையவர்களாக ஆகிவிட்டோம்.' என்று சொல்வார்கள். (திருமறை 32:12)

இதுவரை கூறி வந்ததிலிருந்து புலனால் அறியப்பட்ட ஒளியை (பிரகாசிக்கும் பொருளை) விடவும், கண்ணே 'நூர்' என்ற பெயருக்கு அருகதையுடையதென்றும், பின்னர் கண்ணை விட அக்லுதான் 'நூர்' என்ற பெயருக்குத் தகுதியுடையது என்றும் மேலும், இவை இரண்டுக்குமுள்ள ஏற்றத் தாழ்வைக் கவனிக்கின்ற போது கண்ணை விடவும் அக்லுக்கேதான் **'நூர்'** என்று பெயர் சொல்வது சரியாகும் என்றும், மேலும் எதார்த்தத்தில் மற்றவைகளன்றி அதுவேதான் 'நூர்' என்ற பெயருக்குப் பாத்தியப்பட்டது என்றும் அறிந்து கொண்டிருப்பாய்.

**நுட்பம்**

அறிந்து கொள்! அக்லுகள் பார்க்கக் கூடியனவாகவே இருந்த போதிலும், பார்க்கப்படக் கூடியவைகளெல்லாம் அதனிடத்தில் ஒரே தரத்தையுடையதன்று. என்கிலும் சில அதனிடத்தில் இப்போதே பிரசன்னமாகவே இருக்கிறது போன்றுமிருக்கிறது. உலூமளரூரிய்யாவை (சிந்திக்காமலே வரக் கூடிய ஞானங்களைப்) போல்.

உவமையில் ஒரு பொருள் பூர்வீகமானதாகவும், புதிதானதாகவும், உளதாகவும், இல்லாததாகவும், ஒரு வார்த்தை உண்மையாகவும், பொய்யாகவும் இருக்காது என்றும், ஒரு வஸ்துவுக்கு ஒரு ஹுக்மு (தீர்ப்பு) ஏற்படுமானால், அது போன்ற வஸ்துவுக்கும் அதே தீர்ப்பேயாகுமென்றும், ஒரு குறிப்பான பொருள் மவ்ஜூதாக (உளதாக) இருக்குமேயானால் பொதுவான பொருளும் உளதாகவே இருக்கும். ஆகவே, கறுப்பு (எனும் குறிப்பான நிறம்) உளதாக இருக்குமேயானால் கண்டிப்பாக நிறம் (எனும் குறிப்பில்லாதது) உளதாகவே இருக்கும்.

இன்ஸான் (மனிதன்) மவுஜூதாக இருந்தால் கண்டிப்பாக ஹயவான் (உயிருள்ளது) மவுஜூதாகவே இருக்கும். இதற்கு நேர் மாற்றம் அக்லிடத்தில் கண்டிப்பாக உண்டாகவே மாட்டாது. ஏன்? நிறம் உளதாக இருப்பதனால் கறுப்பு இருப்பது அவசியமில்லை. உயிருள்ளது உளதாக இருப்பதனால் மனிதன் உளதாக இருப்பது அவசியமில்லையே. (ஏன்? கறுப்பல்லாத பச்சை, சிகப்பு போன்றிருந்தாலும் நிறம் இருக்கிறதென்பதும், ஆடு, மாடு போன்றதிருந்தாலும் உயிரினம் இருக்கிறதென்றும் வருமல்லவா?)

இன்னும் வாஜிபாத்து (இருப்பது அவசியமானவை), ஜாயிஸாத்து (உண்மையும், இன்மையும் அவசியமில்லாதவை), முஸ்தஹீலாத்து (இன்மை அவசியமானவை)களில் நின்றும் சிந்திப்பின்றி சுலபமாக விளங்கக் கூடிய ஞானங்களையும் போல்.

இன்னும் சில அவைகளை அக்லிடம் எடுத்துக் காட்டப்பட்டதே அவைகளைப் பற்றிய ஞானம் அதற்கு வராமல் அதை உசுப்பி விடவும், அதில் மறைந்த கனலை மூட்டி அதற்கு உணர்த்தி வைப்பதுவும் தேவைப்படும்படியானதுகளும் உண்டு. நள்ரிய்யாத்து (சிந்தித்து தெரிய வேண்டிய ஞானம்) களைப் போல். அதை உணர்த்தி வைக்கக் கூடியது தத்துவ ஞானிகளின் வார்த்தைகளேயாம். அவர்களின் (தத்துவ ஞானிகளின்) தத்துவார்த்த ஜோதி பிரகாசித்ததும் மனிதன் அமைப்பில் பார்க்கக் கூடியவனாக இருந்தவன் இப்போதே பாhர்க்கக் கூடியவனாகி விடுகிறான்.

தத்துவ ஞானங்களிலெல்லாம் மிக்க வலுப்பமுடையது அல்லாஹ்வின் திருவசனங்களாகும். அத் திருவசனங்களின் தொகுப்பில் குறிப்பானதுவே திருக்குர்ஆன். ஆகவே, அக்லுடைய கண்ணினிடத்தில் திருக்குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளின் ஸ்தானம் வெளிக் கண்ணினிடத்தில் சூரியனுடைய ஒளியைப் போன்றகும். ஏனென்றால், அதைக் கொண்டு தானே வெளிக் கண்பார்வை பூரணமாகிறது. எனவே சூரிய பிரகாசத்திற்கு நூர் - ஒளி என்று சொல்வது போல குர்ஆன் ஷரீபும் நூர் - ஒளியென்று பெயர் சொல்லப்பட மிக்கத் தகுமானதாகும்.

குர்ஆனுக்கு உவமானம், சூரியப் பிரகாசமாகும். அக்லுக்கு உவமானம், கண்ணின் ஒளியாகும். இதனால் பின்வரும் இறை வசனங்களின் கருத்தும் வெளியாகும்.

'அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய தூதரைக் கொண்டும், நாம் இறக்கிய ஒளியை (நூரை) க் கொண்டும் ஈமான் கொள்ளுங்கள்' (64:8)

'உங்கள் நாயனிடமிருந்து நிச்சயமாக அத்தாட்சி வந்து விட்டது. தெளிவான வெளிச்சத்தை (நூருல் முபீனை) நாம் இறக்கியருளியுள்ளோம்'. (4:175)

**நுட்பத்தைப் பற்றிய தொடர்ச்சி**

இதுவரை கூறியவற்றிலிருந்து கண்கள் புறக்கண், அகக் கண் ஆகிய இருவகைகள் உண்டு என்பதனையும், புறக் கண் புலனுலகைச் சேர்ந்தது. அகக் கண் மற்றொரு உலகமான ஆலமுல் மலகூத்தைச் சேர்ந்தது என்பதனையும், இவ்விரு வகைக் கண்கள் ஒவ்வொன்றுக்கும் சூரியனும் பிரகாசமும் உண்டு. அதனிடத்தில் தான் அவை சம்பூரணப் பார்வையுடையவனாகின்றன. ஒன்று வெளியானது, மற்றொன்று மறைவானது. வெளியானது ஆலமுஷ்ஷஹாதத்து (சாக்கிர) உலகைச் சேர்ந்தது. அது கட்புலனால் அறியப்பட்ட சூரியன். மறைவானது ஆலமுல் மலகூத்து (தெய்வீக) உலகைச் சார்ந்தது. அது குர்ஆன் ஷரீபு மற்றும் அல்லாஹ்வின் வேதங்களாகும் என்று விளங்கிக் கொண்டாயானால் - இது உனக்கு நன்கு தெளிவுபட சம்பூரணமாக வெளியாகிவிடுமானால், உனக்கு ஆலமுல் மலகூத்துடைய வாசல் திறக்கப்பட்டு விட்டது என்றே அர்த்தம்.

அவ்வுலகிலோ, அபூர்வ, ஆச்சரியகரமானவைகளெல்லாம் உள்ளன. அதனளவில் இவ்வுலகைச் சேர்த்துப் பார்த்தால் இவ்வுலகை ஒரு துச்சமாகவே மதிக்கப்படும். எவனொருவன் அந்த உலகுக்கு யாத்திரை போகாமல் திறமைக்குறைவு அவனை இந்த ஆலமுஷ் ஷஹாதத்து எனும் கீழ்ப்பாகத்தில் அமரச் செய்து விட்டதோ அவன் மிருகத்தைப் போன்றவனாவான். மனிதத் தத்துவத்தை விட்டும் பேறு (அதிர்ஷ;டம்) கெட்டவனாவான். மேலும் அவன் மிருகத்தை விடவும் வழி கெட்டவன், ஏன்? மிருகத்திற்கு அவ்வுலகத்தில் பறப்பதற்கு இறகுகள் கொடுக்கப்படவில்லையே. இதனாலேதான் இறைவன், தனது திருமறையில், 'அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள், இன்னும் அவர்கள் மிகவும் வழிகெட்டவர்கள்' என்று (7:179) குறிப்பிட்டுள்ளான்.

அறிந்து கொள்! (வெளிப்புலன்களால் கிரகிக்கக் கூடிய தூல உலகாகிய) ஆலமுஷ;ஷஹாதத்தை (அந்தகரணம், ஞானேந்திரியங்களால் அறியக் கூடிய சூழ்ச்சும, ஆன்ம உலகாகிய) ஆலமுல் மலகூத்துடன் கவனித்துப் பார்க்கும்போது பருப்போடு பார்க்க தோட்டைப் போலும், ஆன்மாவோடு பார்க்க தூலமும் உருவமும் போலும், ஒளியோடு ஒப்பிட்டுப் பார்க்க இருளைப் போலும், உயர்வோடு பார்க்க தாழ்வைப் போலுமாகும். இதனாலேயே ஆலமுல் மலகூத்துக்கு உயர்ந்த உலகம், ஆன்ம உலகம், ஒளியுலகம் என்றும் அதற்கு எதிரிடையான ஆலமுஷ் ஷஹாதத்திற்கு தாழ்ந்த உலகம், தூல உலகம், இருளுலகம் என்றும் சொல்லப்படுகிறது.

நாம் மேலுலகம் என்று சொன்னதைக் கொண்டு வானங்களைக் கருதினோம் என்று நினைக்காதே. அவை தூல உலகில் சிலவற்றிற்கு மேலாகவே தான் இருந்த போதிலும் அதை எட்டிக் கொள்வதில் மனிதனோடு மிருகங்களும் ஒத்திருக்கின்றன. மனிதனோ அவன் விஷயத்தில் பூமி. இந்த பூமியும் வானங்களுமல்லாத வேறொன்றாக (அதாவது) புலனுணர்வுக்கும், கற்பனைக்கு முட்பட்டவைகளெல்லாம் பூமியாகவும், அதன் தொகுப்பில்

பட்டதுவேதான் வானங்கள். இன்னும் புலனுணர்வுக்கு அப்பாலுள்ளவைகள் அவனுக்கு வானமாகவும் ஆகிற வரையிலும் அவனுக்கு மேலுலகின் வாசல் திறக்கப்பட மாட்டாது. அவன் மேலுலகைச் சேர்ந்தவனாயும் ஆகமாட்டான்.

இதுதான் தெய்வீகச் சமூகத்தளவில் வழி நடக்கும் ஒவ்வொருவனுக்கும் முதலாவது ஏற்றம் (மிஃறாஜ்) ஆகும். ஆகவே, மனிதன் தாழ்ந்தவைகளிலெல்லாம் மிகத் தாழ்ந்தது அளவில் தள்ளப்பட்டுக் கிடக்கிறான். இங்கிருந்துதான் மேலுலகத்திற்கு ஏற வேண்டும். ஆனால், மலாயிகத்துகளோ அவர்கள் மேலுலகத்தின் தொகுப்பில் படைக்கப்பட்டவர்கள். பரிசுத்தச் சமூகத்தைப் பற்றி பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்துதான் இந்தத் தாழ்ந்த உலகை ஏறிட்டுப் பார்க்கிறார்கள். இதனால்தான், 'அல்லாஹுத்தஆலா சிருஷ்டிகளை இருளில் படைத்து அவர்கள் மீது தனது ஒளிவில் நின்றும் ஒளிபடச் செய்தான்' என்றும், 'அல்லாஹுத்தஆலாவிற்கு சில மலக்குகள் இருக்கிறார்கள். அவர்கள் ஜனங்கள் செய்யும் வேலைகளை அவர்களை விடவும் மிக அறிவார்கள்' என்றும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

நபிமார்கள் மலக்கூத்துடைய ஆலத்தளவில் அவர்களின் மிஃறாஜ் (ஏற்றம்) ஏற்பட்டால், அவர்கள் மிகவும் உயர்ந்த ஏற்றத்திற்கும் போய்ச் சேர்ந்து மறைவான உலகத்தில் ஒரு பெரும் தொகுதியை எட்டிப் பார்ப்பார்கள். ஏனென்றால், மலகூத்துடைய ஆலத்திலிருப்பவர்கள் அல்லாஹ்விடத்திலேயே இருக்கிறார்கள். அவனிடத்திலேயே தான் மறைவான விஷயங்களின் திறவுகோல்களிருக்கின்றன. அதாவது, அவனிடத்திலிருந்தே தான் ஆலமுஷ் ஷஹாதத்திலுள்ள சிருஷ்டிகளின் காரணங்கள் இறங்குகின்றன. (அதாவது, ஆலமுல் மலகூத்து இறங்குகிறது) ஏன்?

ஆலமுஷ; ஷஹாதத்து அந்த (ஆலமுல் மலகூத்து) உலகின் குணபாடுகளின் ஒரு குணபாடே ஆகும். இது (ஆலமுஷ் ஷஹாதத்து) அவ்வுலகினுடன் ஒரு பொருளின் நிழலைப் போலும், மரத்தின் கனியைப் போலும், காரணத்திற்குக் காரியத்தைப் போலுமாகும். காரியாதிகளைப் பற்றிய அறிவின் திறவு கோல்களைக் காரணங்களிலிருந்தே தான் எடுக்கப்படும். இதனாலேயே ஆலமுஷ் ஷஹாதத்து ஆலமுல் மலகூத்துக்கு ஒரு மிதால் (நமூனா) ஆக இருக்கிறது. இது பற்றிய விவரம் பின்னால் மாடக்குழி, பந்தம், மரம் இவைகளைப் பற்றி விளக்கம் சொல்லுமிடத்தில் வரும். ஏனென்றால், உவமானம் (எதைக் கொண்டு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறதோ அது) உபமேயத்தோடு (எதற்கு ஒப்பிடப்படுகிறதோ அத்தோடு) தூரமாகவோ, சமீபமாகவோ ஆகிய ஒரு வகையான ஒப்புமையை விட்டும் ஒளியாது. இதில் இப்போது மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதிருக்கிறது. இதன் எதார்த்த சுயவடிவத்தை எவன் தெரிந்து கொண்டானோ அவனுக்கு குர்ஆனில் காட்டக் கூடிய உவமானங்களின் எதார்த்த சுய ரூபம் மிக்க எளிதாக விளங்க வரும்.

**ஒளியின் எதார்த்தம் பற்றியதொரு நுட்பம்**

தன்னையும், தானல்லாததையும் பார்க்கக் கூடியதே 'நூர்' என்ற பெயருக்கு மிகவும் அருகதையானது என்று நாம் சொல்லி வந்திருக்கிறோம். அம்மாதிரியான கூட்டத்தில்

தன்னையும், தன்னல்லாததையும் பார்ப்பதோடு, அதைக் கொண்டு (பிறரால்) வேறொன்றைப் பார்க்ககப்படக் கூடிய விதத்தில் பிரகாசம் கொடுக்கக் கூடியதாக ஒன்று இருக்குமேயானால், மற்ற வஸ்துவில் குணபாடு செய்யாததைப் பார்க்கிலும் அதுவேதான் நூர் என்ற பெயருக்கு மிகவும் அருகதையானதாகும். மேலும், அதன் ஒளி மற்றதில் ஜொலித்து ஒளிப்பதினால் (பிரகாசிப்பதினால்) அதற்கு **'ஸிராஜன் முனீறா'** (பிரகாசிக்கும் தீபம்) என்று சொல்லவும் தகுமானதாகும். இந்தத் தன்மையானது பரிசுத்த நபித்துவ ஆன்மாக்களில் தான் கண்டு கொள்ள முடியும். ஏனென்றால், அதன் (அவ்வான்மாக்களின்) பொருட்டினால் தான் ஒளிகளெல்லாம் சிருஷ;டிகளில் படுகின்றன. இதனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா ஸிராஜன் முனீரன் என்று பெயர் வைத்திருப்பதன் இரகசியம் விளங்க வருகிறது. ஏனைய எல்லா நபிமார்களும், அது போலவே உலமாக்களும் தீபங்களாகவேயிருக்கிறார்கள். இருந்தாலும், அவர்களுக்கிடையில் அளவிட முடியாத ஏற்றத் தாழ்வுகளுண்டு.

**ஒரு நுட்பம்**

கண்பார்வை எதைக் கொண்டு பிரயோசனம் அடைகிறதோ (எதன் பொருட்டால் வஸ்துக்களைப் பார்க்கிறதோ) அதற்கு 'ஸிராஜன் முனீறன்' என்று சொல்லத் தகும் என்றிருந்தால், தீபம் தன்னை எதனால் பொருத்தப்படுகிறதோ அதற்கு நெருப்பு என்று சொல்வதும் தகுமாகும். இப்பூவுலகிலுள்ள தீபங்களெல்லாம் (ஆன்மாக்களெல்லாம்) அதன் எதார்த்தத்தில் மேலுலகிலுள்ள ஒளிகளாளேயே தான் பொருத்தப்படுகின்றன. பரிசுத்த நபித்துவ ஆன்மாவோ அதன் எண்ணெய்யை நெருப்புத் தொடாது போனாலுங் கூட பிரகாசிக்கறதாகவே இருக்கிறது. ஆனாலும், அவை ஒளிவுக்குமேல் ஒளிவாக ஆகிறதோ நெருப்பு அதைத் தொடும் போதேயாம். ஆகவே, பூவுலகத்தின் ஆன்மாக்கள் பொருத்தப்படுவது மேலுலகத்தின் தெய்வீக ஆன்மாக்களாலேயே என்பது பொருந்தும். இதுபற்றி ஸெய்யிதினா அலி ரலியல்லாஹு அன்ஹு, ஸெய்யிதினா இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு இருவரும் விளக்கிச் சொன்னார்கள்:

'அல்லாஹ்வுக்கு ஒரு மலக்கு இருக்கிறார். அவருக்கு எழுபதினாயிரம் முகங்களுண்டு. ஒவ்வொரு முகத்திலும் எழுபதினாயிரம் வாய்களுண்டு. அவையத்தனைகளைக் கொண்டும் அல்லாஹ்வை துதி செய்கிறார்.

அவருக்கு எதிரே நேராகத்தான் எல்லா மலக்குகளையும் நிற்பாட்டப்படும். அதைப் பற்றித்தான் அந்நாளில் ரூஹு (எனும் மலக்கு)ம், மற்றும் ஏனைய மலாயிகத்துகளும் அணிவகுத்து நிற்பார்கள்' என்று (78:38)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, அதைக் கொண்டு பூலோகத் தீபங்களெல்லாம் பொருத்தப்படுகிறதைக் கவனிக்கும் போது அதற்குச் சரியான உவமானம் நெருப்பேயல்லாது இல்லை. அதுவோ, தூர்ஸீனா மலையிலிருந்தேயல்லாது மருகுதலாகாது (சிந்திக்காது).

**நுட்பம்**

பூவுலகிலுள்ள ஒளிகளையெல்லாம் பொருத்தப்படக் கூடிய வானுலகின் ஒளிகளாகிறது அவை ஒன்றிலிருந்து ஒன்றும், அதிலிருந்து மற்றொன்றுமாக பொருத்தப்படக் கூடியதாக வரிசைக் கிரமமாக இருக்கிறது. எது ஆதிமூல ஒளிக்கு மிகச் சமீபமாக உள்ளதோ, அதுவே நூர்- ஒளி என்ற பெயருக்குத் தகுமானதாகும். ஏன்? அதுதானே உயர்ந்த பதவியிலிருக்கிறது. அவை இப்படி வரிசைக் கிரமமாக இருப்பதற்கு உவமானமாக இந்த ஆலமுஷ் ஷஹாதத்தில் (சாக்கிர உலகில்) மனிதன் ஒரு வீட்டுச் சுவரில் மாட்டப்பட்ட கண்ணாடியில் பட்டு அதன் பிரதிபிம்பம் அதற்கு எதிரிலிருந்த சுவரில் விழுந்து அதிலிருந்து ஒளி பூமியில் பட்டு பூமி வெளிச்சமாக இருக்கிறது என்று வைத்துப் பார்ப்பது கொண்N;டயல்லாது உணர்ந்து கொள்ள மாட்டான்.

பூமியிலிருக்கிற பிரகாசம் சுவரிலிருப்பதைத் துயர்ந்தது. சுவரில் உள்ளது கண்ணாடியில் உள்ளதையும், கண்ணாடியிலுள்ளது சந்திரனிலுள்ளதையும், சந்திரனிலுள்ளது சூரியனிலுள்ளதையும் துயர்ந்தது என்பதை அறிவாய்.

ஏன் சூரியனிலிருந்து தானே பிரகாசம் சந்திரனில் ஜொலிக்கிறது. இந்நான்கு பிரகாசங்களும் வரிசைக் கிரமமாக இருக்கின்றன. ஒன்று மற்றொன்றை விட மேலாகவும், பூரணமாகவும் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட, அறியப்பட்ட இடமும், குறிப்பான அந்தஸ்தும் பதவியும் இருக்கின்றன. அவற்றை விட்டு அது கடக்க மாட்டாது. (இது இப்படியிருக்கும் போது) அறிந்து கொள்:

அகக் கண் திறந்த ஞானிகளுக்கு விளங்கும். மலக்கூத்துடைய (ஆன்ம லோகத்துடைய) பிரகாசங்களும் இப்படியேதான் வரிசைக் கிரமமாக உள்ளன. அவர்களில் யார் ஆதி மூலமான ஒளிவினிடத்தில் மிகவும் நெருங்கியுள்ளனரோ அவர்களே முடுகுதலானவர்கள். ஆகவே, இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பதவி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பதவிக்கு மேம்பட்டதாக இருப்பது தூரமில்லை. இன்னும், அவர்களில் எல்லா ஒளிகளுக்கும் மூல காரணமான தெய்வீக சமூகமான ஆண்டவனின் சமூகத்தில் மிக நெருங்கிய பதவியுடையவரும், ஆகக் குறைந்த பதவியுடையவர்களும், இவ்விருசாராருக்குமிடையில் மட்டிலடங்கா படித்தரங்களை உடையவர்களுமிருக்கிறார்கள் என்றும் அறிவார்கள். அவர்கள் தங்களைப் பற்றி தாங்களே, 'எங்களில் ஒவ்வொருவரும் அவருக்கு அறியப்பட்ட ஸ்தானம் இருந்தேயல்லாதில்லை. நாங்கள் வரிசைக் கிரமமாக அணி வகுத்தவர்களாகவும், (ஆண்டவனை சதாவும்) துதி செய்தவர்களாகவுமே இருக்கிறோம்' என்று. (37:164, 264, 266) ல் சொன்னது போல அவர்கள் அனந்தம் கோடிகளிருக்கிறார்கள். அவர்களெல்லாம் அணியணியாக வரிசையாக இருக்கிறார்கள் என்பது மட்டும் விளங்கும்.

**இன்னொரு நுட்பம்**

ஒளிகள் ஒன்றிலிருந்து ஒன்றாக வரிசைக் கிரமமாக இருக்கின்றன என்பதை அறிந்த பின்பு அவைகள் ஓர் எல்லையில்லாது இப்படியே மேலே போய்க் கொண்டுமிருக்காது, என்கிலும், ஓர் ஆதிமூல பிரகாசமான உற்பத்தியிடத்திலேயே போய் முடிவடையும் என்பதையும் அறிந்து கொள். அதுவே தான் தனக்குத் தானாய் தன்னாலேயே தன்னைக் கொண்டே ஒளியாக

இருக்கிறது. அதற்கு மேலால் வேறொன்றிலிருந்து அதற்கொளி வருவதில்லை. எல்லா ஒளிகளும் அதிலிருந்தே வரிசைக் கிரமமாக தகுதிக்குத் தக்கவாறு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இப்போது நீ கவனித்துப் பார்! தன்னில் நின்றுமில்லாது பிறரில் நின்றும் ஒளியை இரவல் வாங்கி பிரகாசித்துக் கொண்டிருக்கிறதே அது நூர் - ஒளி என்ற பெயருக்கு அருகதையும், பாத்தியதையுமானதா? அல்லது எது தனக்குத் தானே பிரகாசித்துக் கொண்டும், தானல்லாத மற்றவையடங்களையும் பிரகாசிக்க வைத்துக் கொண்டுமிருக்கிறதோ அதுதான் பாத்தியமானதா?

இதில் உண்மை உனக்குத் தெரியாமல் மறைந்துவிடும் என்று நானறியேன். இதனால் நூர் என்ற பெயருக்குப் பொருத்தமானதும், தகுதியானதும் எது தனக்கு மேலால் வேறொரு ஒளியுமில்லையோ மற்றெல்லாவற்றிற்கும் அதிலிருந்தே ஒளிவந்து கொண்டிருக்கிறதோ அத்தகைய மேலான முடிவான ஒளிதான் என்று நீ ஐயமறத் தெரிந்து கொள்வாய்.

**ஓர் உண்மை**

எனினும், நான் துணிந்து சொல்வேன். நிச்சயமாகவே, அந்த ஆதி ஒளியல்லாத மற்ற ஒளிகளுக்கு நூர் - ஒளி என்ற பேர் மஜாஸி மஹ்லூ (சுத்தமான கற்பனை) தானாகும். ஏனென்றால், அந்த ஆதி ஒளியல்லாதவையடங்கலும் அவை தன்னிலே கவனித்துப் பார்த்தால் அவை ஒளியேயில்லை. என்கிலும் அவைகளிலுள்ள ஒளிப்பிரகாசங்கள் வேறொருவனில் நின்றும் இரவலாக வாங்கப்பட்டதேயாகும். மேலும், அந்த இரவலாக வாங்கப்பட்ட பிரகாசத்திற்கு தன்னில் நிலையுமில்லை. அது தன்னை இரவலாக கொடுத்தவனைக் கொண்டேதானிருக்கிறது. இரவலாகக் கிடைத்த (பிரகாசத்)தை அவைகளோடு சேர்த்து (அவைகளின் பிரகாசம் என்றும், அவை பிரகாசிக்கின்றன என்றும்) சொல்வது வெறும் கற்பனையேயாகும்.

ஒருவன் உடை, வாகனம், குதிரை, சேணங்களை குறிப்பிட்ட காலம் வரையும், குறிப்பிட்ட எல்லை வரையும் சவாரி செய்வதற்காக இரவலாய் வாங்கினானேயானால் அவன் உண்மையான சீமானா? அல்லது கற்பனையான சீமானா? அல்லது அவற்றை இரவல் கொடுத்தானே அவன் தான் உண்மையான சீமானா? சொல் பார்ப்போம்!

மெய்யாகவே இரவல் வாங்கியவன் அவன் இருந்தது போல அவன் தன்னிலே ஏழையேதான். சீமானோ இரவல் கொடுத்தவனேயாவான். அவனிடமிருந்தே இரவலாக வாங்கப்பட்டது. அவனிடமே திரும்ப ஒப்படைக்கப்படும்.

ஆகவே உண்மை எதார்த்த ஒளியாகிறது எவன் கை வசம் கல்கும், அம்ரும் (மாற்றப்படக் கூடிய சிருஷ்டியும் மாற்றப்படாதிருக்கக் கூடிய சிருஷ்டிகளும்) இருக்கின்றனவோ, எவனிலிருந்து முதலாவது பிரகாசம் உண்டாகியும் இரண்டாவது அவனைக் கொண்டே அந்தப் பிரகாசம் நேமமாக நிலைத்துக் கொண்டுமிருக்கிறதோ அந்த நாயன் ஹக்குத்தஆலாவேயாகும்.

இந்த (நூர் - ஒளி என்ற) பெயரில் அவனோடு யாரும் கூட்டில்லை. என்கிலும், அரசன் தன்னடிமைக்குச் சில பொருட்களைக் கொடுத்து அடிமையை அப்பொருளுக்கு எஜமான் - சொந்தக்காரன் என்று அவனே பெயர் சொல்வது போல. அவனே இந்தப் பெயரைச் சூட்டி உபகாரம் செய்கிறான் என்ற தோரணையாலேயேயல்லாது வேறு விதத்தில் இப்பேருக்கு பாத்தியதையில்லை. எவரும் கூட்டில்லை. இவ்வுண்மை அடியானுக்கு வெளியாகுமானால் அவன் தானும் அவனுடைய சகல பொருள்களும் அரசன் ஒருவனுக்கே சொந்தமாகும். அதில் அவனோடு அறவேயாகும் கூட்டில்லை என்றும் தெரிந்து கொள்வாய்.

**அகமியம்**

ஒளி என்பது வெளியாகுதல், வெளியாக்குதல் அளவிலும் அதன்படித் தரங்களிலும் போய்ச் சேர்கிறது என்று அறியும்போது நிச்சயமாக அதமை (இல்லாமையை) விடவும் கடுமையான இருள் வேறொன்றுமில்லை என்பதாகவும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், அது இருண்டதாகும். இருண்ட பொருளுக்கு இருண்டது என்று சொல்வதெல்லாம் அதைப் பார்ப்பதற்கு அது வெளியாகாத்தனாலேயேயாம். ஏன்? அது (இருண்ட பொருள்) தன்னிலே மவ்ஜூதாக (உளதாக) வே இருந்த போதிலும் கண் பார்வையினிடத்தில் உளதாக இல்லையே- வெளியாகிறதில்லையே.

எனவே, எந்தப் பொருள் அது தானல்லாதவற்றிடமும் உளதாக இல்லாமலும் அது தன்னிலேயும் உளதாக இல்லாமலுமிருக்கிறதோ அது, ஏன், இருளிலேயே மிகத் தீர்மானமானதாகத் தகுமல்லாதிருக்கும்! இதற்கு நேர் எதுகையாகவேயிருக்கிறது வுஜூது (உள்ளமை). எனவே, அதுவேதான் ஒளியாகும். ஏன், ஒரு பொருள் தனக்குத்தானே வெளியாகாதது பிறருக்கும் வெளியாகவே மாட்டாது. மவுஜூது உண்டானவை)களோ அதற்கு வுஜூது (உள்ளமை) அதன் தாத்திலிருந்தே தன்னில் தானாகவே உண்டானது என்றும் பிறரால் உண்டானது என்றும் இரு வகைப்படும். பிறரால் உண்டானது தனக்குத் தன் வுஜூதை இரவலாகப் பெற்றதுவேயாகும். அதற்குத் தன் புறத்தில் நிலையுமில்லை. மேலும், அதைத் தன்புறத்தில் கவனித்தால் அது சுத்த அதம் (சூனியம்) ஆகவே இருக்கும். அதன் வுஜூது எல்லாம் அதைப் பிற வஸ்துவோடு கவனித்துப் பார்ப்பதனாலேயேயாகும். அது தனக்கு எதார்த்தமான வுஜூது இல்லவேயில்லை. (எனினும் அதற்கு மஜாஸிய்யான வுஜூது அதாவது, பிறவொன்றைக் கவனிப்பதனால் - அதனால் கிடைத்ததனால் உள்ளதுவேயாகும்). ஆடையை இரவல் வாங்கியவன் சீமான் என்று பெயர் பெற்ற உவமானத்தில் தெரிந்து கொண்டது போல.

ஆகவே, ஹக்கு ஸுபுஹானஹுவத்தஆலாவே மெய்யான ஒளியாக இருப்பதேபோல் அவனே மெய்யான மபுஜூது (உண்மைப் பொருள்) ஆகவுமிருக்கும்.

**அகமியத்தின் அகமியம்**

இங்கிருந்தே தான் ஆரிபீனு;கள் (மெய்ஞ்ஞானிகள்) மஜாஸியின் (ஒட்டு சாட்டு, அதாவது கற்பனையான சிருஷ்டி எனும்) கீழ்த்தட்டிலிருந்து ஹகீகத்தின் (எதார்த்தத்தின்) உச்சந்தட்டுக்கு ஏறுகிறார்கள். அவர்களின் ஏற்றம் சம்பூர்ணமாகி அல்லாஹ் ஒருவனே யன்றி

மவுஜூது(உண்மைப் பொருள்) இல்லை என்றும், அவனுடைய வஜ்ஹை (அம்சத்தை) யன்றி மற்றெல்லாப் பொருள்களும் அழிந்தவை என்றும் அவர்கள் கண்காட்சியாகக் கண்டு கொள்கிறார்கள். ஏன்? அவை ஒரு நேரத்தில் அழியக்கூடியவை தானே! இல்லை, அவை அதியிலும் அந்தத்திலும் அழிந்தவைகளே. ஏன் அப்படியல்லாமல் இருக்கவே முடியாது? ஏன் ஹக்கல்லாதவைகளை அவைகளின் தாத்து (சுயம்) தன்னில், கவனித்துப் பார்த்தால் அவை சுத்தச் சூன்யமேயாகும். இன்னும், உண்மையான ஆதி மெய்ப் பொருளில் நின்றும் அவையளவில் வுஜூது (உண்மை) பாய்ந்து விழக்கூடிய வஜ்ஹை (புறத்தை) கவனித்தால் அவைகளும் மவ்ஜூதான (உள்ளமையான) பொருட்களாகப் பார்க்கப்படுகின்றன. அவை தாத்தில்லை,. என்கிலும், அவற்றையுண்டாக்கிய ஹக்குத்தஆலாவையடுத்த வஜ்ஹினால் (புறத்தினால்). ஆகவே மவ்ஜூதாக இருப்பது அல்லாஹ்வின் வஜ்ஹு மட்டுமேயாகும்.

ஒவ்வொரு வஸ்துவுக்கும் இரண்டு வஜ்ஹுகள் (புறங்கள்) உண்டு. தன்னளவில் ஒரு புறமும், தன் நாயனளவில் ஒரு புறமுமாகும். அது, தன் புறத்தைக் கவனிக்கிறபோது அதம் (இன்மை – சூன்யம்) ஆகும். அல்லாஹ்வின் புறத்தைக் கவனிக்கிறபோது வுஜூது (உள்ளமை) ஆகும். ஆகவே, அல்லாஹு தஆலாவையும், அவனின் வஜ்ஹையுமல்லாது மவுஜூது வேறில்லை. எனவே, எல்லா வஸ்துக்களும் ஆதியிலும், அந்தத்திலும் அழிந்தனவேயாகும். ஹக்குதஆலாவின் வஜ்ஹைத் தவிர்த்து.

இவர்களுக்கு (இந்த மெய்ஞ்ஞானிகளுக்கு), 'இன்று யாருக்கு ஆட்சி? (சகலவற்றையும்) அடக்கியாளும் ஏக வல்லவனாகிய அல்லாஹ்வுக்கே உடையது' என்ற(40:16) ஆண்டவனது அழைப்பைக் கேட்பதற்கு கியாமத்து நாள் வரவேண்டுமென்று தேவையில்லை. எங்கிலும், இந்த அழைப்பு எப்பொழுதும் அவர்களின் கேள்வியை விட்டகலாது.(சதாவும் அவர்களது காதுகளில் ஒலித்தவண்ணமாகவே இருக்கும்.)

மேலும், அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்ற வாக்கியத்திற்கு, அல்லாஹ் அவனல்லாத எல்லாவற்றையும் விட மிகப் பெரியவனென்று கருத மாட்டார்கள். அல்லாஹ் அதை (அத்தகைய கருத்தை) விட்டும் மிகத் தூய்மையானவன். ஏனென்றால், அவனல்லாததை விட அவன் பெரியவன் என்று ஆவதற்கு (எதார்த்தத்தில்) அவனுடன் வேற்றுப் பொருள் எதுவுமில்லையே!

மேலும், அவனல்லாததற்கு (எதார்த்தத்தில்) அவனோடு ஒரு பொருளாக இருப்பதற்கான அந்தஸ்தும், மேலும் அவனை துயர்ந்த ஒரு பொருளாக இருப்பதற்கான அந்தஸ்தும் கூட இல்லையே. மேலும் அவனல்லாதவைகளுக்கு அவனையடுத்த வஜ்ஹின் (புறத்தின்) விதத்தினாலேயே அல்லாது வுஜூதே கிடையாது. எனவே, மவுஜூதாக இருப்பது அவனின் வஜ்ஹு மட்டுமே ஆகும். அவன் அவனின் வஜ்ஹை விடவும் பெரியவனாக இருப்பது அசாத்தியமானதாகும். எனினும், அதன் (அல்லாஹு அக்பரின்) பொருளாவது:- 'அல்லாஹ், மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தோ, ஒழுங்கிடட்டுப் பார்த்தோ பெரியவன் என்று சொல்வதை விட்டும் மிக மிகப் பெரியவன் -தூயவன். இன்னும் அவனது மகத்துவத்தின் குன்ஹை (சுய ரூபத்தை) நபியாகட்டும், மலக்காகட்டும் எவராலும்; எட்டிக் கொள்வதைவிட்டும் மஹா

பெரியவன். மேலும், அல்லாஹ்வை அறியவேண்டிய விதமாக அவனேயல்லாது எவரும் அறியார்' என்பதாகும்.

ஏன் அறியப்பட்டவையடங்கலும்,அறிபவனின் அதிகாரத்திற்குள்பட்டவையே. அ(ப்படி ஒன்றின் ஆதிக்கத்திற்குள் அமைவதாகிற)து அல்லாஹ்வின் வலுப்பத்திற்கும், அதிகாரத்திற்கும் முரணானதாகும். அதுபற்றி விரிவான விளக்கத்தை நமது, 'அல் மக்ஸதுல் அஸ்னாபீமஆனி அஸ்மாயில்லாஹில் ஹுஸ்னா' எனும் நூலில் கூறியுள்ளோம்.

**சயிக்கினை**

ஆரிபீன்கள், ஹகீகத்து (எதார்த்தம்) எனும் வானத்தளவில் ஏறிய பின்னர் உலகில் மெய்ப்பொருளான ஒரே நாயனைத் தவிர வேறொன்றுமில்லை என்று காணுவதில் அவர்கள் எல்லோர்களும் ஏகோபித்தவர்களேயாவர். ஆனாலும், அவர்களில் சிலர், இந்த நிலை தங்களுக்கு அறிவு ஆராய்ச்சியினால் உண்டானவர்களாகவும், இன்னும் சிலர் அவர்களுக்கு இது அனுபவ நிலைமையாக உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை விட்டும் பன்மை அடியோடு நீங்கி அவர்கள் கலப்பற்ற ஓர்மையிலேயே மூழ்கி தங்கள் சுய புத்தியையும் இழந்து தட்டழிந்தவர்களைப் போலாகுவார்கள். அல்லாஹ் அல்லாதவைகளை, ஏன், தங்களையும் கூட நினைத்துப் பார்க்க அவர்களில் எதுவும் எஞ்சியிராது. அவர்களிடத்தில் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்களது அறிவின் ஆதிக்கமெல்லாம் போயி ஒரேடியாக போதையாகிக் கிடக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் அனல் ஹக்கு (நான் ஹக்கு) என்று சொல்கிறார், 'ஸுப்ஹானீ மா அஃளம ஷஃனீ (நான் தூயவன், என் மகிமை எவ்வளவு மகத்தானது!)' என்கிறார் மற்றொருவர்.

'மாபில் ஜுப்பத்தி இல்லல்லாஹ்' (இந்த ஜுப்பாச் சட்டைக்குள் அல்லாஹ்வேயல்லாது வேறில்லை.) என்கிறார் இன்னொருவர்.

ஆஷிகீன்கள் பேரின்பப் போதையில் சொன்ன வார்த்தைகளையெல்லாம் சுருட்டி மறைக்கவே வேண்டும். (வெளியில்) எடுத்துரைக்கக் கூடாது. இவர்களை விட்டும் இவர்களின் போதை தணிந்து பூலோகத்தில் அல்லாஹ்வின் திராசு (துலாம் கோல்) ஆக இருக்கும் புத்தியின் ஆதிக்கத்திற்கு திருப்பப்படுவார்களேயானால் அது (இப்போது நடந்தது) உண்மையில் (ஹக்கோடு) ஒன்று சேர்ந்தது அல்ல, எனினும், ஒன்று சேர்ந்தற்கு ஒப்பானதாகும் என்று அறிவார்கள்.

ஆஷிகீன்களில் ஒருவர் பேரின்ப ஆசை மேலீட்டால் சொல்கிறார்:-

'ஆசித்தவனும் நானே, ஆசிக்கப்பட்டவனும் நானே. இரு ஆன்மாக்கள் நாங்கள் ஒரே சடலத்தில் இறங்கியிருக்கிறோம்' (என்று)

(கண்ணாடியைக் கண்டிராத) மனிதன், திடும் பிரவேசமாக கண்ணாடியின் முன்வர நேரும்போது கண்ணாடியைக் கண்ட பிம்பத்தை கண்ணாடியோடு ஒன்றாகவே சேர்ந்திருப்பதாக

நினைப்பதுவும், பளிங்கு கிளாஸில் மதுவைப் பார்த்து மதுவை கிளாஸின் நிறம் என நினைப்பதுவும் நடவாத விஷயமல்ல. (அப்படி நினைப்பதுமுண்டு). அது அவனிடம் பழக்கப்பட்டுப் போய் அதில் மூழ்கி ஸ்திரமாகிவிட்டதும் சொல்கிறான்:

'பளிங்கு கண்ணாடி மிகவும் மெதுவாகி, மதுபானமும் தெளிவாகி இரண்டும் ஒன்றோடொன்னு ஒப்பாகி விஷயம் குழப்பமாகி விட்டது. பளிங்கு கிளாஸ் இல்லை, மது மட்டும்தான் போலும், மது இல்லை, பளிங்கு கிளாஸ் மட்டும்தான் போலும் என்றிருக்கிறது'. மது, கிளாஸ் என்பதற்கும் மது, கிளாஸைப் போலிருக்கிறது என்பதற்குமிடையில் வித்தியாசமிருக்கிறது. இந்நிலை மிகைத்து விட்டால் நிலை¡யை உடையானை கவனித்து பனா (அழிவு, மேலும் பனாவுல் பனா (அழிவும் அழிவு) என்று சொல்லப்படும். ஏன்? அவர் தன்னை விட்டும் அழிந்தார், தான் அழிந்திருப்பதை விட்டும் அழிந்தார். அவர் இந்த நிலையில் தன்னையும் உணருகிறாரில்லை. தன்னுணர்வு இல்லை என்பதையும் உணர்கிறாரில்லை என்பதை உணர்ந்தால் தன்னை உணர்ந்தவராகி விடுவார். இந்த நிலைக்கு இதில் மூழ்கியவரைக் கவனித்து, மஜாஸாக (வலிந்துரையாக) இத்திஹாது (ஐக்கியம்) என்றும், ஹகீகத்தாக (எதார்த்தமாக) தெளஹீது (ஏகத்துவம்) என்றும் சொல்லப்படும். இந்த அகமியங்களுக்கப்பால் அநேக இரகசியங்களுண்டு. அதில் மூழ்குவது கூடாது.

**இறுதியான பேச்சு**

அல்லாஹுதஅலாவின் நூரை வானம், பூமிகளுடன் சேர்த்து ('அல்லாஹ் வானம், பூமிகளின் ஒளியாக இருக்கிறான் என்று) சொன்னதற்குக் காரணத்தையும், அவன் தன் தாத்திலேயே (தன்னிலேயே) வானம் பூமிகளின் ஒளிவாக இருக்கின்ற காரணத்தையும் நீ அறிய ஆர்வம் கொள்ளக் கூடும்.

அல்லாஹுத்தஆலா அவனே ஒளி, அவனையன்றி ஒளியில்லை. அவனே எல்லா ஒளிகளுமாவான். அவனே சகலவற்றிற்கும் பூரண ஒளியென்று நீ அறிந்த பின்னர் உனக்கு இது மறைந்ததல்ல. ஏனென்றால், எதைக் கொண்டு மற்ற வஸ்துக்கள் வெளியாகுமோ அதற்கே ஒளி என்று சொல்லப்படுகிறது. அதை விடவும் மேலானதாகிறது, எது மற்றவர்களுக்கு வெளியாவதோடு தனக்கும் வெளியாகுமோ அதுவேயாகும். அதை விடவும் மேலானதாகிறது, எது பிறருக்கும் வெளியாகி தனக்கும் வெளியாவதோடு அதில் நின்றுமே (மற்றது வெளியாக) ஒளியும் கிடைக்குமோ அதுவேயாகும். இந்த ஒளிகளில் எதார்த்தமானகிறது, பிறருக்கு வெளியாகி, தனக்கும் வெளியாவதோடு அதில் நின்றுமே ஒளிவருகிறதோ இன்னும் அதற்கு மேலால் தான் பொருந்தி எடுக்க வேறு ஒரு ஒளி இல்லையோ, பிறிதொன்றினிடம் இருந்தல்லாமல் தனக்குத் தன்னிலிருந்தே ஒளியாக இருக்கிறதோ அதுவேயாகும்.

பின்னர், இம் மாதிரியான இலட்சணத்தை ஆதி மூலாதார ஒளியேயன்றி பூணவில்லை. வேறொன்றிலும் இது சாத்தியப்பட மாட்டாது. மேலும், பூமியும், வானங்களும் இரண்டு இயற்கையான ஒளிகளினால், அதாவது- கண்பார்வை, அகப்பார்வை – புலன் புத்தி, இவ்விரண்டோடும் சம்பந்தமான ஒளிகளால் நிறம்பிக் கிடக்கிறது என்றும் நீ அறிந்திருக்கிறாய்.

1. நிச்சயமாக, கண் பார்வைக்குத் தெரியக் கூடிய ஒளிகளாகின்றது, நாம் வானத்தில் பார்க்கக் கூடிய நட்சத்திரங்களும், சூரிய சந்திரனும், இன்னும் பூமியிலுள்ளவைகளில் எல்லாம் பரந்து கிடக்கும் சுடரொளியும், அதனால்தான் பற்பல வகையான நிறங்களெல்லாம் தென்படுகின்றன. குறிப்பாக மழை காலத்தில் (தென்படுகிறது) இன்னும் ஜீவ வர்க்கம், தாவரம், உலோகம் மற்றும் பல வகையான சிருஷ்;டிகளிலும் படிந்து கிடக்கும் சுடரொளிகளும், இது இல்லையானால் எந்த விதமான வர்ணங்களும் தென்படாது. அது உண்டாகவும் மாட்டாது. பின்னர், வர்ணங்களைத் தொடர்ந்து புலன்களுக்குத் தென்படக் கூடிய கோலங்களும், அளவுகளும் இவைகளும் அதைக் கொண்டேயல்லாது தென்பட முடியாது.

2. புத்திக்குத் தென்படக் கூடிய அந்தரங்கமான ஒளிகளாகின்றது, மேலுலகமோ அவற்றால் நிறைந்து கிடக்கின்றது. அவை மலாயிக்கத்துகளாகும். இன்னும், கீழுலகமோ அதுவும் நிரம்பி கிடக்கிறது. அவை, ஜீவ வர்;க்க ஆன்மாக்களும், மனித வர்க்க ஆன்மாக்களுமாகும்.

மேலுலகத்தின் பரிபாலனம் மலக்குகளின் ஒளியினால் செவ்வனே நடப்பதுபோல் கீழுலகத்தின் பரிபாலனம் கீழூலகை மனித ஆன்ம ஒளியினால் செவ்வனே நடக்கிறது. இதுவே பின்வரும் இறைவசனங்களின் கருத்தாகும்.

'அவனே உங்களை பூமியில் நின்றும் படைத்து அதில் உங்களைப் பரிபாலனம் செய்ய வைத்தான்'- (11:16)

'அவர்களை (மனிதர்களை) பூமியில் பிரதிநிதியாக ஆக்குவதற்காக உங்களை பூமியில் பிரதிநிதிகளாக்குவான்.'- (27:62)

'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஆக்குவேன்.' (2:30)

நீ இவ்வளவையும் தெரிந்து கொண்டாயானால் உலகம் பூராவும் கண் பார்வைகளால் அறியக் கூடிய வெளிரங்கமான ஒளிகளாலும், புத்தியால் அறியக் கூடிய மறைவான ஒளிகளாலும் நிரம்பிக் கிடப்பதாகவும் தெரிந்து கொள்வாய். பின்னர் (புத்தியால் அறியக்கூடிய ஒளிகளில் நின்றும்) இந்த தாழ்ந்த உலகைச் சேர்ந்ததானது, தீபத்திலிருந்து ஒளி ஒலித்து வருவதுபோல், ஒண்டிலிருந்து ஒண்டு ஒலித்து வருவதாகவும், அதற்குத் தீபம், பரிசுத்த நபித்துவ ஒளியாகும் என்றும் அறிவாய். நபித்துவ பரிசுத்த ஆன்மாக்களோ நெருப்பிலிருந்து விளக்குகள் பொருத்தப்படுவது போல் மேலுலகிலுள்ள ஆன்மாக்களிலிருந்து பொருத்தப்படுகிறது. (ஒளியைப் பெற்றுக் கொள்கிறது) மேலுலகிலுள்ள ஆன்மாக்களோ ஒருவர் ஒருவரிலிருந்து ஒளியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரிசைக் கிரமமாக இருப்பது அவர்களின் (மகாமாத்து) படித்தரங்களுக்குத் தக்கவாறாகும். (இப்படியே ஒருவர் தனக்கு மேலுள்ளவர், அவர், அவருக்கு மேலுள்ளவரில் நின்றும் எடுத்து) கடைசியாக எல்லோர்களும் சகல ஒளிகளுக்கும் ஒளியான ஆதிமூல உற்பத்தி இடமான ஓர் ஒளியளவில் ஏறுவார்கள். (போய் முடிவடைவார்கள்). அந்த ஆதி ஒளிதான் அல்லாஹுத்தஆலாவாகும். அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. மேலும், சர்வ ஒளிகளும் அவனில் நின்றும் இரவலாகப்

பெற்றவைகளேயாகும். எதார்த்த ஒளி அவனுடைய ஒளி மட்டுமேயாகும். மற்றவைகளெல்லாம் அவனது ஒளியில் நின்றுமேயாகும்.

மேலும் (எல்லாம்) அவனே, அவனல்லாததுக்கு ஹுவிய்யத்தும் (அது என்று சுட்டிக் காட்டுவதும்) கற்பனையாகவே அல்லாது இல்லை. (ஏன், வஸ்துவாகவே இல்லாததை எப்படி அது எனச் சுட்டிக் காட்டுவது?) ஆகவே, ஒளி அவனேயல்லாது இல்லை. சகல ஒளிகளும் அவனை அடுக்கக் கூடிய வஜ்ஹஜனாலேயே (புறத்தினாலேயே) தான் ஒளிகளாகும். எனவே, எல்லாவற்றின் முகமும் அவன் பக்கமே முகம் நோக்கி அவன் திசையிலேயே திரும்பிக் கொண்டிருக்கிறது.

'நீங்கள் எங்கு முகம் நோக்கினாலும் அங்கு அல்லாஹ்வின் வஜ்ஹு (புறம்) இருக்கிறது'. (2:115)

ஆகவே அவனையன்றி நாயனில்லை. ஏனென்றால், எவனளவில் தேவையாகித் தாழ்மைத் தனத்தை வெளியாக்குவது கொண்டு முகங்களெல்லாம், இருதயங்களின் முகங்களெல்லாம் - ஒளிகளும் ஆன்மாக்களும் திரும்பிக் கிடக்கின்றதோ அவனேதான் (இலாஹு) நாயன் ஆவான். மேலும், அவனேயன்றி ஹுவும் (சுட்டிக் காட்டப்படுவதும்) இல்லை.

ஏனென்றால், எதைப் பற்றி சயிக்கினையாகச் சுட்டிக் காட்டப்படுகிறதோ அதற்கே ஹு (அது) என்று சொல்லப்படும். எப்படியானாலும், சயிக்கினை அவனளவிலேயே அல்லாது இல்லை. மேலும், நீ சயிக்கினை செய்யும்போதெல்லாம் எதார்த்தத்தில் சயிக்கினை அளவிலேயேயாகும். நாம் சொல்லி வந்த எல்லா எதார்த்தப் பொருளுக்கும் எதார்த்தப் பொருளை (ஹக்கை) விட்டு நீ மறதியாக இருந்ததனால் நீ இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளாது போனாலும் சரியே, சயிக்கினை சூரியனின் பிரகாசத்தளவில் இல்லை. ஆனால், சூரியன் அளவிலேதான். எனவே தெள;ளிய உவமானத்தில் உலகில் உள்ளது அத்தனையையும் அவனளவில் சேர்த்துப் பார்க்கும்போது சூரியனளவில் அதன் பிரகாசத்தைப் போலவே ஆகும்.

எனவே 'லா இலாஹ இல்லல்லாஹு' (வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர) என்பது சாமானிய மக்களுடைய தவ்ஹீதாகும்.

'லாஹு வ இல்லாஹு' (சுட்டிக் காட்டப்படும் உள்ள பொருளான அது அவனேயல்லாது இல்லை) என்பது கவாஸ்ஸுகளான விசேஷ மக்களின் தவ்ஹீதாகும். ஏனென்றால், அது (சாமானிய மக்களுடைய தௌஹீது) பொதுவானதாகும். இதுவோ (விசேஷமானவர்களின் தௌஹீது) மிகவும் குறப்பானதாகும். (யாவற்றையும்) பொதிந்ததாகும். உண்மையானதும், நுணுக்கமானதும், அதை உடையானை கலப்பற்ற தனித்துவத்திலும், சுத்தமான ஏகத்துவத்திலும் சேர்;க்கக் கூடியதுமாகும்.

சிருஷ்டிகளின் ஏற்றத்தின் முடிவான இடம் தனித்துவ ஆட்சி பீடமாக இருக்கும். அதற்குமேல் ஏற்றமில்லை. ஏன்? ஏற்றம் பன்மையைக் கொண்டேயல்லாது ரூபகரமாகாது. ஏன்? அது ஒரு வகைக் கவனிப்பும் சேர்த்துப் பார்ப்பதுவுமேயாகும். எங்கிருந்து ஏற்படுமோ அதையும், எதனளவில் ஏற்படுமோ அதையும் தேடும்.

பன்மை நீங்கி ஒருமை தரிபட்டு, ஒட்டுசாட்டு, சேர்மானம், சயிக்கினையெல்லாம் பறந்து போய்விட்டதேயானால் மேலுமில்லை, கீழுமில்லை. இறங்குகிறவனுமில்லை, ஏறுகிறவனுமில்லை. இவ்வாறானால் ஏற்றமென்பதுவும், ஏறுவது என்பதுவும் அசாத்தியமாகிப் போகும்.

ஆக உச்சாணிக்கு மேல் உயரமுமில்லை. ஒருமையுடன் பன்மையுமில்லை. பன்மை நீங்கியதும் ஏற்றமும் நீங்கி விட்டது. இனி, அதற்குமேல் நிலைமை மாறுவதென்றால் துனியாவுடைய வானத்தளவில் இறங்குவது கொண்டேயாகும். அதாவது உயரத்திலிருந்து கீழே எட்டிப்பார்ப்பதேயாகும். ஏனென்றால், ஆக உச்சிக்கு மேல் உயரமில்லையானால் அதற்குக் கீழ் என்பது இருக்கவே இருக்கிறது. இதுதான் தீர்மானத்திற்கெல்லாம் தீர்மானமாகும். தேட்டத்திலெல்லாம் முடிவானதாகும். இதை அறிந்தவன் அறிவான், அறியாதவன் மறுதளிப்பான். இது அல்லாஹ்வை அறிந்த ஞானிகளேயல்லாது வேறெவரும் அறியாத, அதன் எதார்த்தத்தை மறைக்கும்படியான அறிவில் நின்றுமுள்ளதாகும். இதைப் பற்றி அவர்கள் பேசினால் அல்லாஹ்வைக் கொண்டு மருண்டவனேயல்லாது மறுதளிக்க மாட்டான்.

(அல்லாஹுத் தஆலா) முதல் வானத்தளவில் இறங்குவது என்பதன் கருத்து மலக்கு இறங்குவதாகும் என்று உலமாக்கள் சொல்வது தூரமில்லை. ஏன், ஆரிபீன்களில் ஒருவர் இதை விடவும் தூரமான கருத்தொன்றை சந்தேகப்படுகிறார். பர்தானிய்யத்தில் (ஓர்மையில்) மூழ்கிய அவர் தனக்கும் முதல் வானத்தளவில் இறங்குதலுண்டு, அதாகிறது, அவர் தன் புலன்களை உபயோகிப்பதில் இறங்குவதுவாம். அல்லது உறுப்புகளை அசைப்பதளவில் இறங்குவதாம் என்று சொல்கிறார்.

'அவன் கேட்கும் கேள்வியாகவும், பார்க்கும் பார்வையாகவும், மொழியும் நாவாகவும் நானாகி விட்டேன்' என்ற நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருவாக்கியத்தைக் கொண்டு இதனளவில் தான் சயிக்கினையாகும்.

அவன் இவனுடைய (நாயன் அடியானுடைய) கேள்வி, பார்வை, நாவாகி விட்டால் அவனே தான் கேட்கிறவனும், பார்க்கிறவனும், பேசுகிறவனுமாகும். அப்போது அவனல்லாது வேறில்லை.

இன்னமும் அல்லாஹ் (ஹதீது குத்ஸியில்) நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் பார்த்து, 'நான் வியாதிஸ்தனாக இருந்தேன். நீர் என்னை சுகம்; விசாரிக்க வில்லை' என்று சொன்னது கொண்டு சயிக்கினையும் இதனளவிலேயேயாகும்.

ஆகவே, இந்த முவஹ்ஹிதின் (அத்துவைதியின் உசும்புதல் முதல் வானத்தைச் சேர்ந்ததாகும். இவரின் புலன்கள் அதற்கு மேற்பட்ட வானத்தில் நின்றுமுள்ளதாகும். அவரின் புத்தி அதற்கு மேல் உள்ள வானத்தில் நின்றுமுள்ளது. அவரோ புத்தியின் வானிலிருந்து சிருஷ;டிகளின் ஏற்றத்தில் ஆகக் கடைசி தீர்மானத்தளவிலும், பர்தானிய்யத்தின் (ஓர்மையின்) ஆட்சி பீடத்தளவிலும், அதன் ஏழு படித்தரங்களளவிலும் ஏறுகிறார். பின்னர், வஹ்தானிய்யத்தின் (ஏகத்துவத்தின்) அர்ஷின் (சிம்மாசனத்தின்) மேல் சரிஒத்து இருக்கிறார். அங்கிருந்து அவருடைய வானங்களின் ஏழு தட்டங்களிலும் ஆட்சி பரிபாலனம் செய்கிறார்.

சிலவேளை, அவரைப் பார்த்தவன், 'அல்லாஹ் ஆதமை (மனிதனை) றஹ்மான் உடைய ஸூரத்தில் (சயாலில்) படைத்திருக்கிறான்' என்ற அரும் வசனத்தைச் சொல்லத் தொடுக்கிறான். பின்னர் அவரில் நன்றாகக் கூர்ந்து பார்த்ததும் 'நான் ஹக்காக இருக்கும். நான் தூயவன். நான் வியாதிஸ்தனாக இருந்தேன், நீர் என்னை சுகம் விசாரிக்கவில்லை. நான் அவனுடைய கேள்வியாகவும், பார்வையாகவும், நாவாகவும் ஆகிவிட்டேன்' என்ற இவை போன்ற நாயக வாக்கியங்களுக்கெல்லாம் வலிந்துரைகள் (தஃவீல்கள்) இருப்பது போல் இவ்வசனத்திற்கும் வலிந்துரையுண்டு (நேர்ப்பதப் பொருள் வைக்கலாகாது) என்பதாகவும் அறிந்து கொள்கிறான்.

இந்தத் துறையில் இதற்கு மேல் நீ சத்தி பெறுவாய் என்று நான் காணவில்லையாதலால் இத்தகைய வியாக்கியானக் (குதிரையின்) கடிவாளத்தை இழுத்து நிறுத்துவதே உசிதமாதலால் அதை இத்துடன் நிறுத்துகிறேன்.

**(அந்த பேச்சுக்கு விளக்க) உதவி**

ஒருக்கால் நீ உனது ஊக்கத்தைக் கொண்டு இந்த வார்த்தைகள் அளவில் ஏறி பார்க்காதிருப்பாய். உனது ஊக்கமும், இப் பேச்சின் உச்சாணியைப் போய் பார்க்க முடியாமல் போகவும் கூடும். ஆகையால் உன் விளக்கத்திற்கும், உன் பலவீனத்திற்கும் ஏற்ப ஒரு வார்த்தை சொல்கிறேன், கேள்!

அறிந்து கொள்! அல்லாஹுதஆலா வானம், பூமியினுடைய ஒளியாக இருக்கிறான் என்பதன் கருத்தை கண் பார்வைக்குடைய வெளிரங்கமான ஒளியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தெரிந்து கொள்வாய். உதாரணமாக:

நீ மழை காலத்தில் பகலின் வெளிச்சத்தில் பல வர்ணங்களையும் பச்சை பசேலென்று இருப்பதையும் பார்த்தாயானால் நீ வர்ணங்களைப் பார்ப்பதில் சந்தேகம் கொள்ளமாட்டாய். சிலவேளை, வர்ணங்களோடு வேறொன்றையும் பார்க்கவில்லை என்று கூட நினைப்பாய். நான் இந்தப் பசுமையுடன் வேறொன்றையும் பார்க்கவில்லை என்றும் கூட சொல்லுவாய். இப்படியேதான் சிலசாரார் பிடிவாதமாக இருந்தார்கள். அவர்கள் ஒளியென்று ஒன்றிருக்கிறது என்ற பேச்சுக்கு அர்த்தமே கிடையாது என்றும், நிறங்களோடு நிறங்களல்லாமல் வேறொன்றுமில்லை என்றும் நம்பி ஒளியை, அதுவோ எல்லா வஸ்துக்களையும் விட றெம்பவும் வெளியானதாக இருக்க, ஏன் அப்படியிருக்காது, அதைக் கொண்டுதானே எல்லா வஸ்துக்களும் வெளியாகின்றன. அதுவோ தன்னைப் பார்க்கப்படக் கூடியதாகவும், அதைக் கொண்டே மற்றவைகளையும் பார்க்கப்படக் கூடியதாகவும் இருக்கிறது. முன் சொல்லி வந்தது போல், அப்படி இருந்துங்கூட அது உண்டென்பதையே மறுக்கிறார்கள்.

ஆனால், சூரியன் அஸ்தமித்து விளக்கும் இல்லாமல் இருந்து, நிழல் விழுகிற போது நிழலின் இடத்திற்கும், வெளிச்சத்தின் இடத்திற்கும் இடையில் வித்தியாசத்தை கண்டிப்பாக தெரிந்து கொள்கிறார்கள். அப்போது, அவர்களே சொல்கிறார்கள்:- ஒளியென்பது நிறங்களுக்கப்பாலுள்ள ஒரு பொருள் அதை நிறங்களோடு ஒன்றாக எட்டிக் கொள்ளப்படுகிறது.

அது அவைகளோடு (நிறங்களோடு) கடுமையாக ஐக்கியப்பட்டிருப்பதனால் அதை உணரப்படுகிறதில்லை. அது றொம்பவும் கடுமையாக வெளியாகியிருப்பதனால் அத மறைந்து கொள்கிறது. ஒருக்கால் அதன் வெளிப்பாட்டின் கடூரமே அது மறைவதற்குக் காரணமாகவும் ஆகிறது. ஒரு பொருள் அதன் உச்ச வரம்பைத் தாண்டி விட்டால் அதற்கு நேர் விரோதமளவிலேயே பின்னடிக்கும். நீ இவ்விஷயங்களைத் தெரிந்து கொண்டாயானால் அறிந்து கொள்! அகப் பார்வையுடையவர்கள் ஒரு வஸ்துவையும் பார்க்கிறார்களில்லை, அத்தோடு அல்லாஹ்வைப் பார்த்தேயல்லாமல். அவர்களில் சிலர் இன்னம் மேலே போய்ச் சொல்வார்கள், நான் ஒவ்வொரு வஸ்துவையும் பார்க்கவில்லை, அதற்கு முன்னால் அல்லாஹ்வைப் பார்த்தேயல்லாமல் என்று. ஏன், அவர்களில் வஸ்துக்களை எல்லாம் அவனை (அல்லாஹ்வை) கொண்டே பார்க்கிறவர்களுமுண்டு. வஸ்துக்களைக் கொண்டு அல்லாஹ்வைப் பார்க்கிறவர்களுமுண்டு. முந்தியவர்கள் அளவில்தான்,

'உம்முடைய நாயன், அவன் எல்லா வஸ்துக்களின் பேரிலும் சாட்சியாக (அறிவிக்கக் கூடியவனாக) இருப்பது போதாதா?' என்ற (41:53) திருமறை வசனம் சயிக்கினை செய்கிறது.

பிந்தியவர்களின் பேரில், 'நம்முடைய திருஷ்டாந்தங்களை கோணங்களிலும், அவர்கள் ஆன்மாக்களிலும் நாம் காட்டுவோம்' என்ற (41:53) திருமறை வசனம் சயிக்கினை செய்கிறது.

முந்தியவர்கள் காட்சியுடையவர்கள். இரண்டாமவர்கள் திருஷ்டாந்தங்களைக் கொண்டு ஆராய்பவர்கள். முந்தியது சித்தீகீன்களுடைய பதவி. இரண்டாவது ஸ்திரமான அறிவாளர்களின் பதவி. இவையிரண்டிற்கும் பின்னால் திரையிடப்பட்ட மருட்சியாளர்களுடைய படித்தரமேயல்லாது இல்லை. இதையும் தெரிந்து கொண்டால், இன்னும் அறிந்து கொள்!

கண் பார்வைக்கு எல்லா வஸ்துக்களும் வெளிரங்கமான ஒளியைக் கொண்டு வெளியாவதுபோல் மறைவான அகக் கண்ணுக்கும் எல்லா வஸ்துக்களும் அல்லாஹ்வைக் கொண்டு வெளியாகிறது. அவன் எல்லா வஸ்துக்களோடும் இருக்கிறான். அவைகளை விட்டும் பிரியவே மாட்டான். அவனைக் கொண்டே எல்லா வஸ்துக்களும் வெளியாகின்றன. ஆனால், இவ்விடத்தில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதாவது:-

வெளி ஒளியாகிறது, சூரியன் அஸ்தமிப்பது கொண்டு அது மறைவது புலனாகும். அது மறைந்ததும் நிழலும் வந்து விடும். ஆனால், எல்லா வஸ்துக்களும் எதனால் வெளியாகிறதோ அத்தகைய தெய்வீக ஒளி (அல்லாஹ்வின் ஒளி)யோ அது மறையவே முடியாது. மறைவது அசம்பாவிதமாகும். அது எல்லா வஸ்துக்களோடும் சதாவுமிருக்கும். ஆகவே, வித்தியாசம் பார்த்து (அதாவது நிழலின் இடத்திற்கும், வெளிச்சத்தின் இடத்திற்கும் இடையில் வித்தியாசம் பார்த்து) ஆதாரம் தேடும் வழியும் தறிகொண்டு விட்டது. அது மறைவது உண்டானால், வானம் பூமிகளெல்லாம் இடிந்து நொறுங்கி இல்லாமலாகி விடும். அப்போது வஸ்துக்களெல்லாம் எதனால் வெளியானதோ அதை (தெய்வீக ஒளியை)த் தெரிந்து கொள்வதற்கு அவசியமான வித்தியாசத்தையும் (இருள் வருவதையும்) எட்டிக் கொள்ளப்படும் (இதுவோ இந்த உலகமெல்லாம் அழிந்து கியாமத்து நாள் வரும்போது தான், அல்லது மெய்வழி நடப்பவருக்கு -

ஸாலிக்கிற்கு இந்த வானம் பூமியெல்லாம் அழிந்து வேறொன்றாக காட்சியாகும் போதுதான்) – ஆனால், வஸ்துக்கள், அவைகளைப் படைத்தவன் ஒருவன் என்பதைப் பற்றி சாட்சியாக இருப்பதில் எல்லாம் ஒன்றுபோல் ஒரே விதமாகவே இருப்பதனால் ஏன், அவைகளில் சில மட்டுமல்ல, எல்லாமுமே, சில நேரத்தில் மட்டுமல்ல, எல்லா வேளைகளிலுமே அவனை (படைத்தவனை) துதி செய்து கொண்டுதானே இருக்கின்றன. அதனால் வித்தியாசம் கண்டு படிப்பது எடுபட்டுவிட்டது. அப்படித் தெரிந்து கொள்ளக் கூடிய வழியும் மறைந்து விட்டது. ஏனென்றால், துலாம்பரமான வழி ஒரு வஸ்துவைக் கொண்டேயாம். எதற்கு நேர் முரணான – மாற்றமானது இல்லையோ, அதை தெரிந்து கொள்வதில் நிலைமை சங்கடமாகத்தான் ஆகும். ஆகவே, அது மறைந்திருப்பது தூரமானதல்ல. (புத்தியில் புரியாதது அல்ல). அது மறைந்து இருப்பது, அது கடுமையாக வெளியானதாலும், அதை விட்டும் மறந்திருப்பது அதன் ஒளி பிரகாசித்துக் கொண்டிருப்பதினாலுமேயாகும். ஆகவே, தனது கடுமையான வெளிப்பாட்டைக் கொண்டே தனது சிருஷ்டிகளை விட்டு மறைந்தும், தனது ஒளிப்பிரகாசத்தைக் கொண்டே அவர்களை விட்டும் திரை போட்டுக் கொண்ட (நாயன் ஹக்குதஆலா) அவன் மகா தூய்மையானவன்.

ஒருக்கால், சில மந்தப் புத்தியாளர்கள் இந்தப் பேச்சை விளங்கிக் கொள்ளாமல் 'ஒளி எல்லா வஸ்துக்களோடும் இருப்பது போல் அல்லாஹ் எல்லா வஸ்துக்களோடும் இருக்கிறான்' என்று நாம் சொன்னதைக் கொண்டு அவன் எல்லாத் தலத்திலும் இருக்கிறான் என்று விளங்கவும் கூடும். அவன் தலங்களோடு சேருவதை விட்டும் தூய்மையானவன், பரிசுத்தமானவன். ஆகையால், இப்படியான விபரீத எண்ணத்தைக் கிளறி விடுவதை விட்டு றொம்ப தூரமான வார்த்தை, 'அல்லாஹ் எல்லா வஸ்துக்களுக்கும் முன்பே இருக்கிறான். அவன் எல்லா வஸ்துக்களுக்கும் மேலாலே இருக்கிறான். அவனோ, எல்லா வஸ்துக்களையும் வெளியாக்கினவன். அகப்பார்வையுடையவரிடத்தில் வெளியாக்கியவன், வெளியாக்கப்பட்ட பொருளை விட்டுப் பிரியவே மாட்டான் என்று சொல்வதாகும். இதுவே தான், 'அல்லாஹ் எல்லா வஸ்துக்களுடனும் இருக்கிறான்' என்று நாம் சொன்னதன் கருத்துமாகும்.

பின்னர், வெளியானவன் வெளியாக்கப்பட்ட பொருளோடு ஒன்றாகவே இருப்பது போல அதற்கு முன்னாலும் இருக்கிறான், அதற்கு மேலாலுமிருக்கிறான் என்பதுவும் உனக்கு மறையாது. என்கிலும், ஒரு விதத்தில் அத்துடனும், இன்னுமொரு விதத்தில் அதற்கு மேலாலுமானவன். இது ஒன்றுக்கொன்று நேர் முரணான விஷயமே என்று நினைத்துக் கொள்ளாதே. அறிவில் உனது அந்தஸ்துக்கு தக்கதாகிய புலனுணர்வால் அறியப்பட்டதைக் கொண்டு உறுதி பெறு. இதோ, கை அசைவு கை நிழலின் அசைவோடுமிருப்பதையும் அதற்கு முன்னாடியும் இருப்பதையும் பார். இதை விளங்கிக் கொள்ளவும். எவனுக்கு நெஞ்சு விசாலமில்லையோ அவன் இம்மாதிரியான அறிவுப் பாதையை விட்டு விடவும் ஒவ்வொரு கல்விக்கும் (அதற்குத் தகுதியான) ஆட்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எதற்காக அவரைப் படைக்கப்பட்டதோ அதுவே அவருக்கு எளிதாகும்.

**இரண்டாம் பாடம்**

மாடக் குழி, விளக்கு, மரம், எண்ணெய், நெருப்பு ஆகியவற்றை விளக்கித் தருவது:

இதுபற்றி விபரிப்பதற்கு எல்லை வரம்பில்லாது பேச்சை விரிவாக ஒட்டிக் கொண்டு போக வேண்டிய இரண்டு அச்சாணி (போன்ற அடிப்படை) யை ஏற்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆனால், நான் அவ்விரண்டளவிலும் சமிக்ஞையாகவும், சுருக்கமாகவுமே சுட்டிக் காட்டுகிறேன்.

அவற்றிலொன்று:- உவமானத்தின் இரகசியத்தைப் பற்றியும், அதன் வழி வகையையும், பொருள் என்னும் ஆன்மாவுக்கு உவமானமெனும் உடலோடுள்ள தொடர்பையும், அவை இரண்டிற்கும் இடையிலான சம்பந்தத்துடர்பின் வகை விபரத்தையும், இன்னமும் உவமானமாகிய உடல் வார்ப்படத்திற்கான மண்ணெடுக்கப்பட்ட ஆலமுஷ் ஷஹாதத்து (காட்சி உலகு)க்கும், கருத்தாகிய ஆன்மா எங்கிருந்து (உவமான உடலுக்கு) இறங்கினதோ அந்த ஆலமுல் மலகூத்து (தெய்வீக உலகு) க்குமுள்ள நேர்பாட்டின் அகமியத்தைப் பற்றியும் விபரிப்பதாகும்.

இரண்டாவது அச்சாணி:- மனித வார்;ப்பட (உவமான உடலில் இறங்கிய) ஆன்மாக்களின் படித்தரங்களையும் அவற்றின் ஒளிகளின் அந்தஸ்துகளையும் பற்றி விபரிப்பதாகும். இவ்வுமானம் அந்த உவமானத்தை விபரிப்பதற்காகவே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இபுனு மஸ்வூது றலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'முஃமினுடைய கல்பில் அவனது (அல்லாஹ்வினது) ஒளிக்கு உவமானம் ஒரு மாடக் குழியைப் போல...' என்று ஓதி இருக்கிறார்கள்.

உபையிபுனு கஃபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்:-

'ஈமான் கொண்டவனது கல்பின் ஒளிக்கு உவமானம் ஒரு மாடக்குழியைப் போல்...' என்று ஓதியிருக்கிறார்கள்.

**முதல் அச்சாணி உவமான இரகசியமும், அதன் வழிகளும்.**

அறிந்து கொள்! உலகமாகிறது ஆன்ம உலகம், ஸ்தூல உலகம் என இருவகைப்படும். விரும்பினால் புலனுலகம், புத்தியுலகம் என்றோ மேலுலகம் கீழுலகம் என்றோ சொல்லிக் கொள். (எப்படிச் சொன்னாலும்) எல்லாம் (கருத்தில்) நெருங்கியவைகளே. விதர்ப்பமெல்லாம் வாசகத்திலேயேயாகும்.

அவ்விரண்டையும் அவை தன்னைப் பொறுத்துக் கவனித்தாயானால் தூல உலகம், ஆன்ம உலகம் என்றும் அவை எட்டிக் கொள்ளும் கண்களைப் பார்த்தால், புலனுலகம், புத்தியுலகமென்றும் அவ்விரண்டையும் ஒன்றோடொன்று கவனித்தால் மேலுலகம், கீழுலகம் என்றும்; சொல்வாய். சில சமயம் ஒன்றுக்கு காட்சியுலகம் என்றும், மற்றதற்கு மறைவான உலகம், தெய்வீக உலகம் என்றும் சொல்வாய்.

பதங்களைப் பார்த்து கருத்தை எடுக்கிறவன் ஒருக்கால் பதங்கள் அதிகமாக இருப்பதைக் கொண்டு பொருள்களும் அதிகம் தானோ என்று சந்தேகிக்கவும் கூடும். எதார்த்தம்

வெளியானவன் பொருளை அசலாகவும், பதங்களை அதைத் தொடர்;ந்ததாகவும் ஆக்கிக் கொள்வான். புத்தி பலஹீனமானவனோ, இதற்கு மாற்றமாவான். பதங்களிலிருந்து பொருளைத் தேடுவான். இவ்விரு சாரார் அளவிலும் தான், 'தலை குனிந்து கொண்டு முகங்குப்புற நடப்பவனோ நேரான வழியிலானவன்? அல்லது நேரான பாதையில் சீராக நடப்பவனா?' என்று (67:22) இறைவசனத்தில் சயிக்கினை செய்யப்பட்டுள்ளது.

நீ இவ்விரு உலகுகளின் கருத்தைத் தெரிந்து கொண்ட பின்னர், அறிந்து கொள்! மேலுலகமான தெய்வீக உலகமானது அது மறைந்த உலகமாகும். ஏனென்றால், அது அநேகருக்கு மறைவாகவே இருக்கிறது. புலனுலகமாகிறது அது காட்சியான உலகம். அதை எல்லாருமே காணுகிறார்கள்.

புலனுலகம் புத்தியுலகத்திற்கு ஏறிச் செல்லும் படி (ஏணி) யாகும். இவ்விரண்டிற்குமிடையில் தொடர்பு, சம்பந்தம் இல்லை என்றிருந்தால் அதனளவில் ஏறும்வழி அடைபட்டேயிருக்கும். அது முடியாதிருந்தால் ஆண்டவனின் சந்நிதானத்திற்கு யாத்திரை போவதும், அவன் சமூகத்திற்கு முடுகுதலாவதும் முடியாததாகவே ஆகிவிடும். அந்தப் பரிசுத்த சந்நிதானத்தின் மத்தியில் போய் மிதிக்காத வரையில் யாரும் அல்லாஹ்விடத்தில் முடுகுதலாகவே முடியாது.

நாம் ஆலமுல் குத்ஸி (பரிசுத்த உலகம்) என்று சொல்வதெல்லாம் புலன், கற்பனை – கியால் எட்டிக் கொள்வதை விட்டும் அப்பாற்பட்டதையேதான். அந்தப் பரிசுத்த உலகம் (ஆலமுல் குத்ஸி) அதிலிருந்து ஒன்றும் வெளியோ போகாமலும், அதற்கு அன்னியமானதொன்றும் அதில் சேராமலும், அது முழுவதையும் கவனிக்கிறபோது அதற்கு ஹளீரதுல் குத்ஸி (பரிசுத்தச் சந்நிதானம்) என்று சொல்கிறோம்.

அந்தப் பரிசுத்த சன்னிதானத்தில் நின்றும் லவாயிஹுல் குத்ஸி (பரிசுத்த ஜொலிப்புகள்) வரும் இடமான மனித ஆன்மாவுக்கு சில சமயம் வாதில் முகத்தஸ் (பரிசுத்த ஓடை) என்றும் சொல்வோம். பின்னர் அந்தப் பரிசுத்த சன்னிதானங்களில் பரிசுத்தாம்சத்தில் சில, சிலவற்றை விடவும் கடுமையான பரிசுத்தமுடையதான பல்வேறு சன்னிதானங்களும் உண்டு. ஆனால், ஹளீரத்துல் குத்ஸி என்ற பதம் அதன் எல்லாப் படித்தரங்களையுமே சூழ்ந்ததாகும். இந்த வார்த்தைகளெல்லாம் அகக் கண்ணுடையவர்களிடத்தில் புரிந்து கொள்ள முடியாத மூடலான பதங்களென்று எண்ண வேண்டாம். நான் இப்போது ஒவ்வொரு பதங்களாகச் சொல்லி அதை விபரித்துக் கொண்டே போவதானது விஷயத்திற்குப் போகவிடாது என்னைத் தடுத்து விடுமாதலால் பதங்களைப் பற்றி விளங்கிக் கொள்ள நீயே முயற்சி செய்து கொள்வாயாக. விஷயத்தளவில் நான் மீண்டு சொல்கிறேன்.

காட்சி உலகம் தெய்வீக உலகுக்கு ஏறுபடியாகும். செவ்வையான வழி நடப்பதென்பது இந்த ஏற்றத்திற்கே சொல்வதுண்டு. சில வேளை இதற்கே தீன் (மார்க்கம்) என்றும், மனாஸிலுல் ஹுதா (நேர்வழியின் தங்குமிடம்) என்றும் சொல்லப்படும். இவை (இவ்வுலகங்கள்) இரண்டிற்குமிடையில் சம்பந்தமும் தொடர்ச்சியுமில்லை என்றால் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு ஏறுவதும் சாத்தியமானதாகவுமாகாது. ஆகையினால் தெய்வ கிருபை

(ஆண்டவனது கிருபை) யானது காட்சி உலகத்தைத் தெய்வீக உலகுக்கு நேர்பாடாகவே ஆக்கி இருக்கிறது.

எனவே, இந்த உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் அந்த உலகிலுள்ள ஒரு வஸ்துவுக்கு உவமானமாகவேயல்லாதில்லை. சில சமயத்தில் ஒரு வஸ்துவே மலகூத்துடைய(அந்த) ஆலத்தின் பல வஸ்துக்களுக்கு உவமானமாகவுமிருக்கும். இன்னும் சில வேளையில் தெய்வீக உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் காட்சி உலகில் பல்வேறு உவமானங்களுமிருக்கும். இன்னும் சில வேளையில் தெய்வீக உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் காட்சி உலகில் பல்வேறு உவமானங்களிருக்கும். இஃது உவமானமாக ஆவதெல்லாம் ஏதோ ஒரு வகையில் அதற்கு ஒத்திருப்பதினாலேயேயாகும். இந்த உவமானங்களையெல்லாம் சூழ்ந்து மட்டிட்டு அறிந்து கொள்வதற்கு இரு உலகிலுமுள்ள சிருஷ்டிகள் பூராவையும் ஆழ்ந்து அறிய வேண்டும். இதற்கு மனித சக்தி போதாது. அதை விளங்கிக் கொள்ள மனித விளக்கமும் இடம் கொடாது. இதை விவரிக்க இந்தக் குறுகிய வயதும் போதாது. ஆகையால் என்னுடைய முடிவான எண்ணம் அதிலிருந்து ஒரு மாதிரியை கொஞ்சம் உனக்கு அறிவிக்க வேண்டுமென்பதேயாகும். நீ அந்த கொஞ்சத்தைக் கொண்டு மிகுந்ததை ஆராய்ந்தறிவதற்காகவும், உனக்கு இந்தப் போக்கினால் இரகசியங்களை உணரும் வாசல் கதவு திறவுபடியாவதற்காகவும் இதோ சொல்கிறேன்.

கவனித்துக் கேள்! ஆலமுல் மலகூத்தில் உயர்வான சிறப்பான, ஒளிகளாலான சில ஆதார பொருள்களிருக்கின்றன. அவர்களுக்கு மலாயிகத்துகள் என்று சொல்லப்படுகிறது. அவர்களிலிருந்து மனித ஆத்மாக்களுக்கு ஒளிகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இதனாலேயே (இப்படி அவர்களிலிருந்து ஒளிப்பிரகாசம் மனித ஆன்மாக்களுக்கு ஒலித்து பாய்ந்து கொண்டிருப்பதனாலேயே) அவர்களுக்கு அர்பாபு (மனித ஆன்மாக்களை வளர்க்கக் கூடியவர்கள்) என்று சொல்லப்படும். எனவே, இதனாலேயேதான் (அந்த மலாயிகத்துகளுக்கு ஒளிப்பிரகாசம் அல்லாஹ்வில் நின்றும் வருவதனாலேயேதான்) அல்லாஹ் றப்புல் அர்பாபு (வளர்க்கிறவர்களையும் வளர்ப்பவன்) ஆக ஆகிறான். அந்த மலாயிகத்துகளுக்கு அவர்களின் ஒளிப்பிரகாசத்தில் பல விதற்பமான பதவிகளுண்டு. ஆகவே, அவர்களுக்குக் காட்சியுலகில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உவமானமாக இருப்பதற்கு மிகப் பொருத்தம். இறைவழி நடப்பவன் முதலாவது நட்சத்திரங்களின் பதவிக்கு உபமேயமான பதவியையுடையவர் (மலக்கு) அளவில் ஏற்றம் பெறுவான். இவனுக்கு அவரது ஒளிப்பிரகாசம் தெளிவாக வெளிச்சமாகி கீழ் உலகம் பூராவும் அவரின் ஒளிப்பிரகாசத்தின் கீழாலும், அவரின் ஆட்சிக்குள்ளாலுமிருப்பதாகவும் தென்படும். அவரின் உணர் பதவியையும், அழகையும் பார்த்துவிட்டு ஹாதா றப்பீ (இவர்தான் என்னை வளர்ப்பவர்) என்று சொல்லி அழைப்பான். பின்னர் இவனுக்கு அவருக்கும் மேலால் சந்திரனுடைய பதவிக்கொத்த உபமேயமானவராகியவர் (மலக்கு) வெளியானதும் இவரளவில் சேர்த்துப் பார்க்கும் போது இவரின் ஒளிச் சுடரில் முந்தியவர் மறைந்த போவதாக பார்த்ததும் நான் மறைந்து போகிறவர்களை நேசிக்க மாட்டேன் என்பார். இப்படியே மேலே ஏறிக்கொண்டே போய் கடைசியாக சூரிய உவமானத்திற்கு உபமேயமாக இருக்கக் கூடிய மலக்களவில் போய் அவரை

மிகப் பெரியவராகவும், உயர்ந்தவராகவும் தன்னோடு அவருக்குள்ள ஒருவித சம்பந்தத்தைக் கொண்டு இவரையே உபமானத்துக்குடையவராகவும் பார்ப்பான். ஏன்? குறைந்தவர்களோடு சம்பந்தம் குறைவுதானே! மேலும் நான் சொல்கிறேன், இங்கிருந்து 'நான், வானம் பூமியைப் படைத்தானே அத்தகைய அவன் பக்கம் என் முகத்தைத் திருப்பி விட்டேன். நான் இணை வைக்கிறவர்களுடன் சேர்ந்தவனல்லன்' (6:77, 80) என்று சொல்கிறவர்களுமுண்டு.

மேற்கண்ட இறைமறைவாக்கில் 'அல்லதீ' (அத்தகைய அவன்) என்று சொன்னதன் கருத்தாவது: ஒப்பு, உவமானம் மூடலான (இல்லாத) ஒருவனைப் பற்றிய சயிக்கினையாகும். ஏனென்றால் 'அல்லதீ' என்றதால் கருதப்பட்டதற்கு உவமானம் என்னவென்று கேள்கிறவன் கேட்டால் அதற்கு பதில் சொல்ல முடியாது. ஆகவே எவ்விதமான ஒப்பு, உவமை சம்பந்தங்களை விட்டும் பரிசுத்தமானவன் மெய்ப்பொருளான அல்லாஹ்தஆலாவே ஆகும். இதனாலேயே ஒரு சமயம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு கிராமத்துப்புற அரபி வந்து – '(ஒரு வஸ்துவைக் கொண்டு ஒப்பிட்டுச் சொல்லிக் காட்ட) வஸ்துவோடு அல்லாஹ்வுக்குள்ள சம்பந்தம் என்ன?' என்று கேட்ட போது அதற்கு உத்தாரமாக 'குல்ஹுவல்லாஹு அஹது – சொல்லும் அவன்-அல்லாஹ்-ஏகன் - அல்லாஹ் யாரளவிலும் எவ்வித தேவையும் அற்று எல்லாம் அவனளவில் தேவைப்பட்டனவாகும். அவன் யாரையும் பெறவுமில்லை. அவனுக்கு யாரும் ஒப்புவமை நிகருமில்லை' என்ற (112: 1,4) திருவசனம் இறங்கிற்று.

கருத்தாவது:- எவ்விதமான சம்பந்தங்களை விட்டும் அல்லாஹ் பரிசுத்தமானவன் என்பதாகும்.

இதனாலேயே, நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் பிர்அவ்ன் அல்லாஹ்வின் மாஹிய்யத்தை (எதார்த்த சுய ரூபத்தை)ப் பற்றிக் கேட்பது போல், 'உலகத்தை எல்லாம் போஷpத்து வளர்க்கிற நாயன் யார்? (அவனது சுய ரூபம் என்ன?)' என்று வினவிபோது, அவனுக்கு அல்லாஹ்வின் செயல்களைக் கொண்டேயல்லாது பதில் சொல்லவில்லை ஏன்? செயல்கள் தானே வினவியவனிடத்தில் மிகவும் விளக்கமானதாகும்.

எனவே, 'வானங்களையும், பூமியையும் வளர்க்கிறவன்' என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பதில் சொன்னார்கள்.

பிர்அவ்ன், தான் அல்லாஹ்வின் சுயவடிவத்தைப் பற்றிக் கேட்க நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதற்குப் பதில் சொல்வதை விடுத்து வேறு வகையில் திரும்பிப் பதில் சொல்வதைப் பற்றி அவர்களை மறுதளித்தவனைப் போல் தனது சபையினரை நோக்கி, 'நீங்கள் கேட்டீர்களா?' என்று சொன்னான். பின்னர் மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'உங்களை வளர்ப்பவனும், உங்களது முன்னோர்களான தந்தையர்களை வளர்த்தவனும்' என்று சொன்னார்கள்.

அப்போது பிர்அவ்ன், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஜுனூன் (புத்திக் கோளாறு) பக்கம் சேர்த்து ஏன், அவன் தேடியது சுய ரூபமும், அவனுக்கு ஒப்புவமையுமாகும். இவர்களோ, அல்லாஹ்வின் செயலைப் பற்றி செயலைக் கொண்டே பதில் சொன்னார்கள். அதனால் பிர்

அவ்ன் (தனது அவையினரைப் பார்த்து) 'உங்கள் அளவில் அனுப்பப்பட்ட உங்கள் தூதர் நிச்சயமாகப் பித்தம் பிடித்தவராகும்' (26:23, 27) என்றான்.

இப்போது நாம் மாதிரியைப் பற்றிய விஷயத்திற்கே மீளுவோம். சொல்வதைக் கவனித்துக் கேள்!

கனவின் தாத்பரியங்களைப் பற்றி சொல்லக் கூடிய சாஸ்திரம் உவமானம் சொல்லப்படுவதன் அளவை உனக்கெடுத்துரைக்கிறது. ஏன்? கனவு தீர்க்கதரிசனத்தின் நின்றுமுள்ள ஒரு பாகமன்றோ?

நீ பார்க்கவில்லையா? கனவில் சூரியனைக் கண்டால் அதற்கு அரசன் என்று பொருளாகும். ஏன்? அவ்விருவருக்குமிடையில் ஆன்மாவாகிய கருத்தில் ஒரு வகையான கூட்டும், பொருத்தமும் இருக்கின்றது. அதாவது, எல்லாவற்றிலும், ஒளிப்பிரகாசத்தையும் குணபாட்டையும் வருஷpப்பதோடு எல்லாவற்றின் பேரிலும் உயர்வாகவும் இருப்பதாகும்.

சந்திரனோ, அதற்குரிய தாத்பரியம் மந்திரி என்பதாகும். ஏன்? அரசன், தனது சமூகத்தை விட்டுத் தூரமான பிரஜைகளிடத்தில் மந்திரி மூலம் தனது கட்டளைகளைச் செலுத்துவது போல் சூரியனும் தான் மறைந்தவிடத்தில் சந்திரன் மூலமாகத் தனது ஒளிப்பிரகாசத்தை உலகில் பரப்புகிறது.

மேலும் ஒரு மனிதன் தனது கையில் ஒரு மோதிரம் இருப்பதாகவும், அதைக்கொண்டு ஜனங்களுடைய வாய்களையும், மர்மஸ்தானங்களையும் முத்திரையிடுவது போலும் கனவு கண்டால் அதற்கு தாத்பரியம்:- அவன் ரமலான் மாதத்தில் ஸுபுஹுக்கு முன் பாங்கு (அதான்) சொல்லுவான் என்பதாகும்.

மேலும், ஒருவன் எண்ணெய்யை எண்ணை தரக்கூடிய (ஜைத்தூன்) மரத்தில் ஊற்றக் கண்டால், அதற்குத் தாத்பரியம்:- அவனிடத்தில் ஓர் அடிமைப் பெண்ணிருக்கிறது. அவள் அவனுக்குத் தாய். ஆனால், இவன் அவளை இன்னாளென்று அறியவில்லை என்பதாகும்.

இம்மாதிரியான உனவு உவமானங்களின் தாத்பரிய பாடங்களை எல்லாம் பூரணமாகச் சூழ்ந்தறிவது அசாத்தியமாகும். எனவே, அவைகளை எண்ணிக் காட்டிக் கொண்டிருக்கவும் இயலாது. எனினும் சொல்கிறேன்.

உயர்த்தியான ஆன்ம சிருஷ்டிகளில் அவர்களுக்கு சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைக் கொண்டு உவமானம் சொல்லக் கூடியவர்கள் இருப்பது போலவே அவர்களின் பிரகாசிக்கும் இலட்சணமல்லாது வேறு இலட்சணங்களைக் கவனித்து அவர்களுக்கு வேறு உவமானங்களுள்ளவர்களும் இருக்கிறார்கள். எனவே, அந்தச் சிருஷ்டிகளில் எப்பொழுதும் பேதகப்படாது அப்படியே தரிபாடாக இருக்கக் கூடியதாகவும், சிறியதாகாமல் எப்பொழுதும் பெரிதாகவே இருக்கக் கூடியதாகவும், அதிலிருந்து மனித இருதயங்களெனும் பள்ளத்தாக்குகளில் ஞானமெனும் நீரூற்றும், அபூர்வமான காட்சிகளும் ஒலித்தோடக் கூடியதாகவும் ஒன்றிருக்கிறதென்றால் அதற்கு (ஸ்தூல உலகில்) உவமானம் தூறுஸீனா

மலை ஆகும். இன்னும், இந்த அபூர்வக் காட்சிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சிருஷ்டிகளில் சிலவற்றை விட சில மேலானதாக இருக்கிறதென்றால் அதற்கு உவமானம் வாதீ (பள்ளத்தாக்கு) ஆகும். அந்த அபூர்வக் காட்சிகளெல்லாம் மனித இருதயங்களில் ஒன்று சேர்ந்த பின்னர், ஓரிதயத்திலிருந்து மற்ற இதயத்திற்கு ஓடுகிறதென்றிருந்தால் அந்த இருதயங்கள் அவ்தியத்து (பள்ளத்தாக்குகள்) ஆகும்.

இந்தப் பள்ளத்தாக்குகளின் ஆரம்பப் பள்ளத்தாக்குகள் நபிமார்கள், அவுலியாக்கள், உலமாக்களுடைய இருதயங்களாகும். பின்னர் அவர்களுக்கு அடுத்துள்ளவர்களின் இருதயங்களாகும். இவைகள் முதலாம் பள்ளத்தாக்குக்கு தாழ்ந்ததாகவும், அதிலிருந்தே தனக்கு நீர் எடுத்துக் கொண்டும், முதலாம் பள்ளத்தாக்கு விசாலமாகவும், ஆழமானதாகவும் இருப்பதனால் முதலாம் பள்ளத்தாக்கு வாதில் ஐமன் (பறக்கத்தான பள்ளத்தாக்கு) என்பதற்குத் தகுமானதாகும்.

நபியவர்களின் ஆன்மா பிரகாசிக்கும் தீபமாகவும், மேலும் அல்லாஹ்வின் திருமறையில் 'நாம் உம்மளவில் நம்முடைய அம்றில் நின்றும் ரூஹை வஹியறிவித்தோம்' என்று (42: 52) சொன்னதுபோல் அது வஹியின் மூலம் பிரகாசத்தைப் பொருத்திக் கொண்டதென்றால், எதிலிருந்து பொருத்தப்பட்டதோ அதற்கு உவமானம் நெருப்பாகும்.

நபிமார்களிலிருந்து ஒளியை எடுத்துக் கொண்டவர்களில் சிலர் நபிமார்கள் சொன்னதைக் கேட்டுப் பின்பற்றுவதோடு மட்டுமுள்ளவர்களும், சிலர் அத்தோடு அகக் கண்ணின் நற்பேற்றில் உள்ளவர்களுமிருக்கிறார்கள். அகக் கண் திறவாது (நபியை) தொடர்ந்ததோடு மட்டுமுள்ளவர்களுக்கு உவமானம் தீக்கங்கு, தீப்பொறி, எரிநட்சத்திரமாகும். (அகக் கண் திறந்த) அனுபோகத்துடையவரோ சில நிலைமைகளில் நபியோடு கூட்டானவராகும். அப்படிக் கூட்டாயிருப்பதற்கு உவமானம் நெருப்பில் வேகுவதாகும். எவனுடன் நெருப்பு இருக்கிறதோ அவனே நெருப்பில் வேகுவானேயல்லாது நெருப்பு என்பதைக் கேள்விப்பட்டவன் அல்ல.

நபிமார்களின் முதல் தங்குமிடமே (மன்ஸிலே) புலன்கள். கற்பனைகளின் கலக்கத்தை விட்டும் பரிசுத்தமான ஆலத்தளவில் ஏறுவதாக ஆனபோது அந்த மன்ஸிலுக்கு உவமை வாதில் முகத்தஸ் (பரிசுத்தப் பள்ளத்தாக்கு) ஆகும்.

மேலும், அந்தப் பரிசுத்தப் பள்ளத்தாக்கைப் போய் மிதிப்பது துன்யா, ஆகிரத்து (இம்மை, மறுமை) ஆகிய ஈருலகையும் (புறம்பாக) வீசி விடுவதைக் கொண்டும், மெய்ப் பொருளான ஏக நாயனளவில் முகம் நோக்குவதைக் கொண்டுமேயல்லாது சாத்தியப்படாததாகவும், துனியாவும் ஆகிரத்தும் ஒன்றோடொன்று நேருக்கு நேரானதாகவும் அவை இரண்டும் மனித ஜோதியான ஆதாரப் பொருளை அண்டிய ஆதேயப் பொருளாகவும், ஒரு சமயம் அவையிரண்டையும் தூக்கித் தூர வீசி விடுவதும், ஒரு சமயம் அவைகளைப் பூண்டு அணிந்து கொள்வதும் சாத்தியமானதாகவும் ஆனபோது அவையிரண்டையும் தூக்கித் தூர வீசி விடுவதற்கு உவமானம்:- ஹஜ்ஜுக்காக இஹ்றாம் கட்டி பரிசுத்த கஃபத்துல்லாஹ் அளவில் முன்னோக்கும் போது இரு பாத ரட்சைகளையும் கழட்டி விடுவதாகும்.

மேலும், நாம் இன்னொரு முறை தெய்வ சன்னதியளவில் ஏறி (அது பற்றி) பேசுவோம். அந்தச் சன்னதியில் அதற்கு நேர்பட்ட (மனித ஆன்மாக்களாகிய) ஆதாரப் பொருட்களில் எதன் பொருட்டால் ஞானங்கள் வகுப்பாக பதிகிறதோ அதற்கு உவமானம், கலம் (எழுது கோல்) ஆகும். இன்னும் அந்த ஆதாரப் பொருள்களில் (சன்னிதி)க்கு நேர்பட்டு ஞான சித்திரங்களை (தன்னுள்) ஏற்றுக் கொண்;டதற்கு உவமானம்:- லவ்ஹு, கிதாபு, ரக்குன் மன்ஸூர் (பலகை, புத்தகம், பரப்பப்பட்ட ஏடுகள்) ஆகியனவாம்.

அவ்விதமான ஞான சித்திரங்களை எழுதக் கூடியதற்கு (கலத்திற்கு) மேலாலுள்ளதும், இது வசப்பட்டதாகவும் இருக்கக் கூடியதற்கு உவமானம்: யது (கை) ஆகும். இந்தக் கை, பலகை, எழுதுகோல், புத்தகம் இவைகளெல்லாம் உள்ள அந்தச் சன்னிதானத்தில் இவைகள் யாவும் வரிசைக் கிரமமாக சேர்ந்திருப்பதற்கு உவமானம் ஸூரத்து (கோலம்) ஆகும்.

மனித கோலத்திலும் இம்மாதிரி ஒருங்கே சேர்ந்தமைந்திருப்பதைக் காணும் போது அது றஹ்மானுடைய ஸூறத்தின் பேரிலேயே இருக்கிறது.

றஹ்மானுடைய ஸூறத்தில் என்று சொல்வதற்கும், அல்லாஹ்வுடைய ஸூறத்தில் என்று சொல்வதற்கும் இடையில் வித்தியாசமிருக்கிறது. ஏனென்றால், தெய்வ சன்னிதானத்தில் இந்த கோலமாக (அதாவது எது, லவ்ஹு, கிதாபு இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து அமைந்திருக்கும் கோலமாக) அமைந்திருப்பது தானே றஹ்மத்து இலாஹிய்யா (தெய்வ கருணை) ஆகும். பின்பு, மனிதனுக்கு அல்லாஹ் உபகாரம் செய்து அவனுக்கு அவனே முழு உலகமாக இருக்கிறான் அல்லது முழு உலகிலிருந்தும் சுருக்கி எடுக்கப்பட்ட ஒரு நமூனாவாக இருக்கிறான் என்ற விதத்தில் முழு உலகிலுள்ள பல்வேறு வகைப் பொருள்களின் உருவங்களை எல்லாம் (தன்னுள்) சேர்த்துக் கொண்டதான சிறியதோர் உருவத்தைக் கொடுத்தான்.

மனித உருவமாகிறது – அதாவது இந்த உருவமாகிறது அல்லாஹ்வின் எழுத்தால் வரையப்பட்டதாகும். அதுவோ அட்சரத்தைக் கொண்ட எழுத்தல்லாத தெய்வீக எழுத்தாகும். ஏன்? அவனின் வார்த்தை எப்படி தொனி அட்சரங்களாலாவதை விட்டும், அவனது எழுதுகோல் கம்பு, இரும்புகளாலாவதை விட்டும், அவனது கரம், தசை எலும்புகளாலாவதை விட்டும் எப்படி பரிசுத்தமானதாக இருக்கிறதோ அதேபோல் அவனின் எழுத்தும் அட்சரங்களை விட்டும் பரிசுத்தமானதேயாகும்.

இந்தக் கிருபை இல்லையேயானால், மனிதன் தனது றப்பை (தன்னை போஷpப்பவனை) அறிய முடியாது. ஏனென்றால் தன்னை அறிந்தவரேயல்லாது (வேறு யாரும்) தனது றப்பை அறிய மாட்டாரே. இது றஹ்மத்து (கிருபை) உடைய குணபாடுகளில் நின்றுமுள்ளதாகையால் அவன் (மனிதன்) றஹ்மானின் ஸூரத்தில் (கிருபையாளனது உருவத்தில்) ஆனான். அல்லாஹ்வின் ஸூரத்தில் அல்ல. (வணக்கத்திற்குரியவனது உருவத்தில் அல்ல).

எனவே ஹளரத்துல் இலாஹிய்யா (தெய்வீக சமூகம்) ஆனது ஹளரத்து ரஹ்மானுக்கும் (கிருபையாளனது சமூகத்திற்கும்) வேறாகும். ஹளரத்துல் மலிக்குக்கும் (அரச சமூகத்திற்கும்) வேறாகும். ஹளரத்துர்ருபூபிய்யத்திற்கும் (போஷகனது சமூகத்திற்கும்) வேறாகும்.

இதனாலேயே, இந்த எல்லாச் சமூகங்களைக் கொண்டும் காவல் தேடும்படி கட்டளையிட்டுச் சொல்லியுள்ளான்.

'மனிதர்களது றப்பை (போஷகனை)க் கொண்டும் மனிதர்களின் மலிக்கை (அரசனை)க் கொண்டும், மனிதர்களது இலாஹை (நாயனைக்) கொண்டும் காவல் தேடுகிறேன் என்று சொல்வீர்களாக!' – (114: 1, 3)

இந்தக் கருத்து இல்லையென்றால், 'நிச்சயமாக அல்லாஹ் ஆதமை றஹ்மானின் ஸூரத்தில் படைத்தான்' என்ற சொல் பத இசைப்பு சரியில்லாததாக ஆகும். மேலும் -(' இன்னல்லாஹ கலக ஆதம அலா ஸூரத்திர் ரஹ்மான்' என்றில்லாமல்) 'இன்னல்லாஹ கலக ஆதம அலா ஸூரதிஹி' (அல்லாஹ் ஆதமை அவனுடைய ஸூரத்தில் படைத்தான்) என்று சொல்லியிருக்க வேண்டும்.

ஸஹீஹான ஹதீதில் வந்த பதம் 'அலா ஸூரத்திர் ரஹ்மானி' (ரஹ்மானின் ஸூரத்தில்) என்பதுவேயாகும். ஹளரத்துல் மலிக்கை ஹளரதுர் ருபூபிய்யத்தை விட்டு பிரத்தியோகமாக – அலாதியாகக் காட்டுவதற்கு நீண்ட வியாக்கியானம் செய்ய வேண்டியிருப்பதனால் அதனை நாம் விட்டு விடுகிறோம். உனக்கு இந்த நமூனாவிலிருந்து இந்த அளவிற்குப் போதும். அதுவோ கரை காணாச் சமுத்திரமாகும்.

இப்போது சொல்லி வந்த இவ்வுவமானங்களில் உன் மனதிற்கு திருப்திக் குறைவு உண்டானால், (பின்வரும்) அல்லாஹ்வின் திருவசனத்தைக் கொண்டாவது திருப்தி பெறுவாயாக.

'(அவன்) வானத்திலிருந்து தண்ணீரை இறக்கினான். பள்ளத்தாக்குகள் அதனதன் அளவுக்குத் தக்கபடி (அத் தண்ணீரால்) பாய்ந்தோடின.' (13:17)

இதில் தண்ணீர் என்பது மஃரிபா (மெய்ஞ்ஞானம்) எனவும், பள்ளத்தாக்குகள் என்பது இருதயங்கள் எனவும் தப்ஸீரில் கருத்துத் தரப்பட்டுள்ளது.

**இறுதியுரையும், மன்னிப்புக் கோருவதும்.**

இப்படி நமூனாவென்று சொல்வதனாலும், உவமானங்கள் சொல்லிக் காட்டுவதனாலும் நான் வெளிரங்க (கரு)த்தை தூர வீசி எறிந்து விட்டதாகவும், அது (வெளிரங்கக் கருத்து) சரியல்ல என்று நான் முடிவு கொண்டிருப்பதாகவும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் பாதரட்சை இருக்கவில்லை, அல்லாஹு தஆலா அவர்களை நோக்கி, உமது இரு பாதரட்சைகளையும் கழற்றி விடுவீராக' என்று சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்று நான் சொல்வதாகவம் எண்ணிக் கொள்ளாதே. (அம் மாதிரிக் கொள்கைகளை விட்டு நம்மனைவரையம்) அல்லாஹ் காப்பானாக.

அந்தரங்க (கரு)த்தை மறுப்பது 'ஹஷவிய்யாக்களின்' கொள்கையாக இருப்பது போல் வெளிரங்க (கரு)த்தை மறுப்பது 'பாத்தினிய்யாக்களின்' கொள்கையாகும். இவர்கள் மாலைக்

கண்ணைக் கொண்டு இரு உலகங்களில் ஒன்றையே பார்க்கிறார்கள். இரு உலகுக்குமிடையில் நேர்பாடிருப்பதையும் அறியார்கள். நேர்பாட்டின் விதத்தையும் விளங்க மாட்டார்கள்.

ஆகவே, வெளிரங்கத்தை மட்டும் தனிமையாகக் கொள்பவர்கள் ஹஷவிய்யாக்கள். அந்தரங்கத்தை மட்டும் தனியாகக் கொள்பவர்கள் பாத்தினிய்யாக்கள். இரண்டுக்கும் இடையில் சேகரமாகின்றவனே காமில் (சம்பூரணமானவன்) ஆகும். இதனாலேயே 'குர்ஆனுக்கு வெளிரங்கமும், உள்ரங்கமும், ஹத்தும், மத்லஉம் இருக்கிறது' என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இந்த ஹதீது அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களோடு நின்றுவிட்டது (அவர்களுக்கு மேல் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதாக வரவில்லை) என்றும் சொல்லப்படுகிறது.

நான் சொல்கிறேன்:- நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இரு பாதரட்சைகளையும் கழற்றி விடும்படி சொன்னதைக் கொண்டு இரு உலகத்தையும் வீசி விடுமாறு கட்டளையிட்டதாகவும் விளங்கினார்கள். ஆகவே, அவர்கள் வெளிரங்கத்தில், இரு பாதரட்சைகளையும் கழற்றச் சொன்னதற்கும் அந்தரங்கத்தில் இரு உலகங்களையும் களையும்படி சொன்ன கட்டளைக்கும் வழிபட்டார்கள். இதுதான் இஃதிபார் அதாவது, ஒன்றிலிருந்து வேறொன்றுக்குக் கடப்பதுவாகும். வெளிரங்கத்திலிருந்து உள்ரங்கத்ததுக்குக் கடப்பதுவாகும்.

'நாயும், உருவமும் இருக்கக் கூடிய இல்லத்தில் மலக்குகள் புகுத மாட்டார்கள்' என்ற நாயக வாக்கியத்தைக் கேட்டும் வீட்டில் நாய் வளர்க்கிறான். இந்த ஹதீதுக்கு வெளிரங்கப் பொருள் கருத்தல்ல. இருதயம் என்ற இல்லத்தை கோபம் என்ற நாயை விட்டும் நீக்கி வைத்தல் என்பதாகும். ஏனென்றால், அது மலக்குகளை, ஒளிப்பிரகாசமாகிய ஞானத்தை (வரவிடாமல்) தடுத்து விடும். கோபமாகிறது புத்தியை அடர்ந்தேறி அதை நாசப்படுத்தி விடுகிறது என்று சொல்கிறவனுக்கும், ஹதீதில் கூறப்பட்ட பிரகாரம் வெளிரங்கத்திலும் வழிபட்டு பின்னர் 'நாய் அதன் உருவத்தைக் கொண்டல்ல. என்கிலும் அதன் தத்துவப் பொருளைக் கொண்டேயாகும். அதாவது துஷ;ட மிருகக் குணம், தங்கடம் விளைவிக்கும் குணமாகும். இந்தத் தூலமும், திரேகமும் தங்குமிடமான வீட்டை நாயின் உருவத்தை விட்டும் காப்பாற்றுவது அவசியம்' என்றால், எதார்த்தப் பொருளான ஆன்மா தங்குமிடமான இருதயத்தை நாயின் தத்துவத்தை விட்டும் காப்பாற்றுவது மிகவும் அவசியமாகும் என்று சொல்கிறானே அவனுக்குமிடையில் மிகவும் வித்தியாசமிருக்கிறது. ஏனென்றால், வெளிரங்கம், உள்ரங்கமிரண்டுக்குமிடையில் சேகரமாக்கியவனே காமிலாவான். இதுதான் அவர்கள் (மகான்கள்) 'காமில் உடைய ஞானவொளி அவனின் பேணுதலுடைய ஒளியை அணைத்து விடாது' என்று கூறுவதன் கருத்தாகும்.

இப்படித்தான் காமிலானவரை, அவரது அகக் கண் வெளிச்சம் பூரணமாக இருப்பதோடு ஷரஃ உடைய கட்டளைகளில் ஒரு கட்டளையையேனும் விட்டுவிட தன் மனதிற்கு லேசுபடுத்திக் கொடுக்காதவராக (இளக்கணம் கொடுத்து கவனமின்மை கொண்டிராதவராக)வே பார்ப்பாய். இஃது ஒரு கால் சறுகுமிடமாகும். இங்கிருந்தேதான் இறைவழி நடப்பவர்களில் சிலருக்கு,

ஷரீஅத்தின் சட்டதிட்டங்களான விரிப்பை அப்படியே சுருட்டி வைத்து விடுவது ஆகுமெனத் தோன்றியது. அப்படிப்பட்டவர்களில் சிலர் தொழுகையையே விட்டுப் போட்டு தாங்கள் தங்களது இருதயங்களில் எப்பொழுதும் (உள்ரங்கமாக) தொழுது கொண்டிருப்பதாகவே நினைக்கிறார்கள். இது, வழிகேட்டில் சிக்குண்ட 'இபாஹிய்யா' (வரம்பை மீறி மனம்போன போக்கில் எப்படியும் நடப்பது ஆகுமானதே என்று சொல்லக் கூடிய) சர்வ முட்டாள்களின் பெரியதொரு வழி சறுகுதலாகும். இவர்களில் ஒருவன், 'அல்லாஹு தஆலா நமது வணக்கத்தை விட்டும் தேவையற்றவன். (ஏன், அவன் சகலவற்றை விட்டும் தேவையற்றவனல்லவா?)' என்று சொல்கிறான்.

இன்னொருவன் 'அகம் கெடுதல்களால் நிரம்பிக் கிடக்கின்றது. அவைகளை விட்டும் அதை சுத்தமாக்கவே முடியாதே.' என்றும் 'கோபத்தையும் ஆசையையும் அடர்ந்தேற விட்டுவிடும்படியாகவே ஏவப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டு அவையிரண்டையும் அடக்க முடியும் என்ற ஆதரவுக்கே இடமில்லை' என்றும் சொல்கிறான்.

இவைகளெல்லாம் பற்பல வகையான மடமைகளாகும். ஆனால், நாம் (மேலே) கூறிவந்தது, ஒரு பந்தயக் குதிரை கால்மடிந்து விழுவது போலவும், இறைவழி நடப்பவன் அடிபிசகுதல் போலவுமாகும். ¡ஷத்தான் அவனைத் தடுத்து மருட்சியெனும் கயிற்றால் கட்டி வழிகேட்டில் தூக்கிப் போட்டு ஆழ்த்துகிறான்.

பாதரட்சைகளைப் பற்றிய பேச்சளவில் மீளுகிறேன். இரு பாதரட்சைகளையும் களட்டுவது என்ற வெளிப்படை இரு உலகங்களையும் விடுமாறு எச்சரிப்பதாகவே உள்ளது. எனவே, வெளிரங்கத்தில் இந்த உவமானம் ஹக்கு (உண்மை) ஆகும். இதை அந்தரங்கத்தின் பேரில் நடத்தாட்டுவது ஹகீகத்து (எதார்த்தம்) ஆகும். ஒவ்வொரு ஹக்குக்கும் ஹகீகத்து இருக்கவே செய்கிறது. இந்தப் பதவியுடையவர்கள், பின்னால் பளிங்கியின் பொருள் வருவது போல், பளிங்கியின் படித்தரத்தை எட்டியவராவர்.

ஏனென்றால், உவமானங்களை வார்க்கப்படும் களிமண்ணாகிய கற்பனையாகிறது அழுத்தமானதாகவும், திண்ணமானதாகவும் இருக்கிறது. அது இரகசியங்களை மறைக்கும், உனக்கும் (இரகசியமான) ஒளிகளுக்கும் இடையே திரையாகும். ஆனால் அது தெளிவாகுமானால் பளிங்குக் கண்ணாடிக்கொப்பாகும். ஒளிகளை மறைக்காது, ஒளிகளை எடுத்துக் காட்டக்கூடியதாகவும், கடூரக் காற்றினால் அணைந்து போகாமல் ஒளியைப் பாதுகாக்கக் கூடியதுமாகும். கண்ணாடி பற்றிய செய்தி பின்னால் உனக்கு சொல்லித் தரப்படும். எனவே, தாழ்ந்த தடிப்பமான கற்பனையென்னும் உலகம் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாம் உடைய விஷயத்தில் கண்ணாடியாகவும், ஒளிகளுக்குப் பளிங்கிக் கண்ணாடியாகவும் இரகசியங்களைத் தெளிவுபடுத்தித் தரக்கூடியதாகவும் மேலுலகங்களில் ஏறுவதற்கு ஏணியாகவும் ஆகிவிட்டதென்று அறிந்து கொள்! இப்படி அறிவதனால் தான் இந்த வெளிரங்க உண்மையென அறியப்படுகிறது. இதற்குப் பின்னாலேயே இருக்கிறது இரகசியம். இப்படியே பிரகாசம், பகல் மற்றவைகளையும் ஒழுங்குப் படுத்திக் கொள்.

**நுட்பம்**

'நான் அப்துர் ரஹ்மானிப்னு அவுபை தவழ்ந்தவராக சுவர்க்கத்தில் நுழையக் கண்டேன்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதும், அவர்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வெளிக்கண்ணால் அப்படிப் பார்க்கவில்லை என நினைத்து விடாதே. என்கிலும், நிச்சயமாக அப்துர் ரஹ்மான் இப்னு அவுபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது தூலத்தோடு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போதிலும் அவர்களை, உறங்கக் கூடிய ஒருவன் தனது தூக்கத்தில் (கனவில்) காண்பது போன்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது விழிப்பிலேயே பார்த்தார்கள்.

ஏனென்றால், தூக்கம் இதுபோன்ற காட்சிகளை உண்டாக்குவதெல்லாம் அது புலன்களை அவையின் ஆதிக்கம் தெய்வீக அகமியமான ஆன்மாக்களின் பேரில் செல்லுபடியாக விடாமல் அடக்கிக் கொள்வதனாலேயேயாகும். ஏன்? புலன்கள் ஆன்மாவைப் பராக்கிலாக்கி அதை புலனுலகின் பக்கம் இழுக்கக் கூடியதும் மறைவான தெய்வீக உலகை விட்டும் அதன் முகத்தைத் திருப்பக் கூடியதுமாகும்.

அந்த் தெய்வீக ஒளிகளான நபிமார்களின் ஆன்மாக்களோ நல்ல தெளிவாகவும், அதைப் புலன்கள் தமது உலகங்களுக்கு இழுக்கவோ அதைப் பராக்காக்கவோ முடியாத விதத்தில் அந்த ஆன்மாக்கள் அடர்ந்தேறி இருக்கும். ஆகவே, அவைகள், மற்றவர்கள் கனவில் காணக் கூடியதை விழிப்பில் பார்க்கும்.

மேலும் அவை தீர்ச்சையான சம்பூரணத்திலிருப்பதனால் அவை எற்றிக் கொள்வது பார்க்கப்பட்ட உருவத்தோடு மட்டும் கட்டுண்டதாக இல்லாமல் அதன் அகமியத்தளவிலும் சென்று விடுகிறது. ஆகையினால் அவர்களுக்கு வெளியாகிறது.

ஈமான், சுவர்க்கமென்று சொல்லக் கூடிய மேலுலகுக்கு (மனிதனை) இழுப்பதாகவும், வாழ்வும் சீமான் தனமும் இப்போதைய ஜீவியத்தளவில், அதாவது தாழ்ந்த கீழுலகு அளவில் இழுப்பதாகவும், துன்யாவின் பராக்களவில் இழுக்கக் கூடியது, ஆகிரத்தின் பக்கம் இழுக்கக் கூடியதை (முற்றாக) தடுத்து விடக் கூடிய விதத்தில் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தால் சுவர்க்கம் போவதை விட்டும் தடுத்தே விடுவதாகவும், ஈமான் உடைய இழுப்பும் பலமுள்ளதாகவே இருந்தால் (சுவர்க்கம் போவதற்கு) கொஞ்சம் சிரமத்தையும், தாமதத்தையும் உண்டாக்குவதாகவும் உள்ளன. இதற்கு, (இப்படித் தாமதமாகப் போவதற்கு) இந்தக் காட்சியுலகில் உவமானம் தவழ்வதாகும். இப்படியே (நபிமார்களுக்கு) கற்பனை (உலகென்னும்) கண்ணாடிக்குப் பின்னாலிருந்தும் பல இரகசியங்களும் வெளியாகும். இவ்விஷயம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துர் ரஹ்மானிப்னு அவுபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடைய விஷயத்தில் கூறியதோடு மட்டும் கட்டுப்பட்டு விடாது. அவர்கள் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பு ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மட்டும் பார்த்திருந்த போதிலும் சரியே.

என்கிலும், எவர்களின் அகப்பார்வை சக்தி வாய்ந்ததாகவும், ஈமான் பலமுள்ளதாகவும் இருப்பதோடு, செல்வமும் அதிமாக இருப்பது ஈமானோடு போட்டியிடவும், ஈமானின் பலம் அதிகமாக இருப்பதனால் ஈமானை மிகைக்க முடியாத அளவில் செல்வமுள்ளவர்கள் அத்தனை பேர்களின் விஷயத்திலும் இப்படியே தான் தீர்ப்பு கூறப்படும்.

இப்போது சொல்லப்பட்ட சம்பவம் நபிமார்கள் உருவங்களைப் பார்க்கும் விதத்தையும், உருவங்களுக்கப்பால் தத்துவங்களைக் காட்சி காணும் விதத்தையும் உனக்கு அறிவித்துத் தருகிறது. பெரும்பாலும் கருத்து அகக் காட்சியளவிலேயே முதலாவதாக வரும். பின்னர் அதிலிருந்து கற்பனா சக்திக்கு வந்து அதில் கருத்துக்கு நேர்பாடானதும், கருத்தை எழுத்து இயம்பக் கூடியதுமான உருவத்தில் அது படிகின்றது. வஹ்யில் நின்று இந்தப் பாகமே கனவில் 'த:பீர்' (வேறு பொருளில் கடப்பது) அளவில் தேவைப்படுகிறது போன்று விழிப்பில் 'த:வீல்' (வலிந்துரை) அளவில் தேவைப்படுகிறது. அதிலிருந்து கனவிலுண்டானதற்கு நபிமார்களின் விசேஷ தத்துவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் சம்பந்தம் ஒன்றுக்கு நாற்பத்தாறோடு உள்ள சம்பந்தமாகும். (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து இருபத்து மூன்று ஆண்டுகாலம். அதற்குமுன் ஆறுமாத காலமாக நல்ல கனவுகள் வந்து கொண்டிருந்தன. அந்தக் காலத்திற்கு நுபுவ்வத்தின் காலத்தோடு ஒன்றுக்கு நாற்பத்தாறோடு உள்ள சம்பந்தமாகும்.) அதிலிருந்து விழிப்பிலுண்டானதோ அதன் சம்பந்தம் இதைவிடவும் வலுப்பமானதாகும்.

நான் நம்புகிறேன். அதன் சம்பந்தம் ஒன்றுக்கு மூன்றோடுள்ள சம்பந்தமாகும். ஏனென்றால், நமக்கு வெளியானதன்படி நபிமார்களின் விசேஷத்துவம் மூன்று இனங்களில் அதன் பனர்கள் மட்டறுகின்றன. இது (விழிப்பில் காணுகிறது) அந்த மூன்றினங்களில் ஒன்றாகும்.

**இரண்டாவது அச்சாணி**

இரண்டாவது அச்சாணி பிரகாசமான மனித ஆன்மாக்களின் படித்தரங்களைப் பற்றி விவரிப்பதாகும். ஏன்? அதைத் தெரிவதனால் தான் குர்ஆனில் கூறப்பட்ட உவமைளை அறிய முடிகிறது. அதில்:-

1. **றூஹுல் ஹஸ்ஸாஸு (உணரும் சக்தி)**:- இது புலன்கள் கொண்டு வருபவற்றை வாங்கிக் கொள்ளும். இதுான் றூஹுல் ஹைவானி (ஜீவசக்தி) க்கு துவக்கமாகும், அஸ்திவாரமாகும். இதனாலேயே ஜீவராசிகள் ஜீவனுள்ளனவாக இருக்கின்றன. இது சிறு மதளைக்குமுண்டு.

2. **றூஹுல் கியாலீ (கற்பனா சக்தி)**:- இது புலன்கள் கொண்டு வருவதை எழுதி வைத்துத் தன்னிடம் பாதுகாத்துத் தங்கரியமாக வைத்து இதற்கு மேலுள்ள றூஹுல் அக்லிக்கு (புத்திக்கு) தேவைப்படும் சமயம் அதை எடுத்துக் காட்டும். மதளைக்கு இது ஆரம்பத்தில் இல்லை. இதனாலேயே ஒரு பொருளை எடுப்பதற்கு அது ஆசைப்பட்டு விரும்புகிறது. அந்தப் பொருளை அதை விட்டும் மறைக்கப்பட்டால் அதை மறந்து விடுகிறது. அதனளவில் அதன் மனம் முறண்டுகிறதில்லை. இந்நிலை அது கொஞ்சம் பெரிதாகிள வரையில். அப்பால், அந்தப்

பொருளை அதை விட்டும் மறைக்கப்பட்டால் அழுது அதைத் தேடுகிறது ஏன்? அந்தப் பொருளின் உருவம் அதன் கற்பனா சக்தியில் பாதுகாக்கப்பட்டிருக்கிறதனால்.

மிருகங்களில் ஒரு சிலவற்றிற்கு இது இல்லை. எனினும் வேறு சிலவற்றிற்கு இருக்கவே செய்கிறது.

நெருப்பில் விழும் ஈசல் (விட்டில்) களுக்கு இது இல்லை. ஏனென்றால், அது பகலின் ஒளியின் பேரில் ஆசை பூண்டு நெருப்பை விரும்புகிறது. விளக்கானது அந்த ஒளியிருக்குமிடத்திற்குப் போவதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் வாசல் என்று அது நினைத்துக் கொள்கிறது. அதனால் அதில் தன் உயிரை மாய்த்து வேதனைப்படுகிறது. அனால், அதை விட்டும் கடந்து இருளுக்கு வந்துவிட்டால் திரும்பத் திரும்ப விளக்கின் பக்கமே பாய்ந்தோடுகிறது. அதனிடம் தான் அனுபவித்த வேதனையைப் புலன் எடுத்துக் கொடுத்ததைப் பாதுகாத்துத் தரிபாடாக வைத்திருக்கக் கூடிய கற்பனா சக்தி இருந்திருக்குமானால் மறுதடவை விளக்கின் பக்கம் போகவே செய்யாது.

நாயோ அதை ஒரு கம்பால் ஒரு விடுத்தம் அடிக்கப்பட்டால் அதன்பின் கம்பைக் கண்டதுமே எடுக்கும் ஓட்டம்;.

3. **றூஹுல் அக்லி:-** இது புலன், கற்பனா சக்திழ இவைகளுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களை அறியக் கூடிய புத்தியாகும். இது மனிதனுக்கே சொந்தமான அபூர்வ சக்தியாகும். மிருகங்களிடத்திலும் சிறு பிள்ளைகளிடத்திலும் இது காணப்படுவதில்லை. இதனால் எட்டிக் கொள்ளப்படுவதானது, அவசியமான (அதாவது, சிந்தனை செய்யாமலே விளங்கக் கூடிய) பொது அறிவுகளாம், நாம் இது பற்றி கண்ணின் ஒளியை விடவும் புத்தியின் ஒளியை மேம்படுத்திக் கூறிய இடத்தில் விளக்கியது போல்.

4. **றூஹுல் பிக்ரு (சிந்தனா சக்தி):-** இது புத்தியினால் அறியப்பட்டவைகளை மட்டும் எடுத்து அவைகளுக்கிடையில் இணைத்து ஜோடி சேர்த்து அதனால் பல அற்புத அறிவுகளையும் எடுக்கும். பின்னர், உதாரணமாக மறுமுறையும் அதிலிருந்து பிரதிபலித்துண்டான இரண்டு அறிவுகளுக்கிடையில் இணைத்து அதிலிருந்தும் வேறொரு அறிவை எடுக்கும். இப்படியே முடிவில்லாது அறிவுகளை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

5. **றூஹுல் குதுஸின்னபவிய்யி (பரிசுத்த நபித்துவ சக்தி):-** இது, நபிமார்களுக்கும், ஒரு சில அவுலியாக்களுக்கும் சொந்தமாக்கப்பட்டது. இதில் மறைவான (உலகின்) தோற்றங்களும், வானம் பூமியின் மலக்கூத்துடைய அறிவுகளில் அநேகமும், புத்திக்கும் சிந்தனா சக்திக்கும் எட்டாத தெய்வீக அறிவுகளும் வெளியாகும்.

இதனளவில்தான், 'நாம் உம்மளவில் நமது அம்ரில் நின்றும் ஒரு றூஹை (ஒரு மலக்கின் மூலமாக) வஹீயறிவித்தோம். நீர் வேதம் இன்னதென்றும், ஈமான் (ஷரீஅத்தின் சட்டதிட்டம்) இன்னதென்றும் தெரிந்திருக்கவில்லை. என்கிலும், நாம் அதை (குர்ஆனை) ஒளியாக ஆக்கினோம். அதைக் கொண்டு நம்முடைய அடியார்களில் நாம் நாடினவர்களை நேர்வழி

காட்டுவோம். நிச்சயமாக, நீர் செவ்வையான நேரிய பாதையளவில் நேர்வழி காட்டுவீர்' என்று அல்லாஹுத் தஆலாவின் (42:52) திருவசனத்தைக் கொண்டுள்ள சயிக்கினையாகும்.

எனவே, புத்தியின் உலகில் தரிபட்டிருப்பவனே! புலனுணர்;ச்சி, விபர உணர்ச்சிக்கப்பால் புலனுணர்வாலும், விபர உணர்வாலும் அறிந்துகொள்ள முடியாத விஷயங்கள் வெளியாகக் கூடியதான புத்தியின் உலகம் ஒன்றிருப்பது தூரமாகாதது போன்று, புத்திக்கும் வெளியாகாத விஷயங்கள் வெளியாகக் கூடிய புத்திக்கு அப்பாற்பட்டதோர் உலகமும் இருக்கிறது என்பதுவும் தூரமில்லை.

ஆனவே, உனது முடிவான சம்பூரணம் உன் நபுஸாகிய புத்தியுலகிலேயே தரிபட்டிருப்பது என்றே வைத்துக் கொள்ளாதே. சில மனிதர்களுக்கு மட்டும் சொந்தமாக உள்ளவற்றில் நீ புரிந்து கொள்ளக் கூடிய ஓர் உவமானத்தை நீ விரும்புவாயானால் இதோ கவியின் ரசிகத் தன்மையைப் பார். எப்படி அது மனிதர்களில் ஒரு சாராருக்கு மட்டுமே சொந்தமானதாக இருக்கிறது.

அது ஒரு வகையான உணர்ச்சி. இதை விட்டும் சிலர் பேறு கெட்டிருக்கிறார்கள். எதுவரையிலுமென்றால்,, அவர்களிடத்தில் பல மெட்டுக்களான இராகங்களும், இசைப்புகளும் மெட்டுக்களில்லாத சப்தங்களை விட்டும் வேறாக தோன்றுவதே இல்லை. இந்த இராக உணர்வு சக்தியின் வலுப்பத்தை மற்றவர்களில் கவனித்துப்பார்! அவர்கள் அதிலிருந்து சங்கீதங்களையும், தாளங்களையும், மெட்டுக்களையும் உண்டாக்கி எடுத்துக் கொள்கிறார்கள். அவற்றில் சில கவலையை உண்டு பண்ணுகின்றன. சில சந்தோஷத்தை உண்டாக்குகின்றன. ஒரு சில அழ வைக்கின்றன, வேறு சில பயித்தியமாக்குகின்றன மற்றும் சில சாகடித்து விடுகின்றன. இந்தக் குணபாடுகளையெல்லாம் ராகத்தை கிரகித்து அனுபவிக்கக் கூடிய அனுபவம் எவரிலுண்டோ அவரிலேயே தான் உண்டாகும்.

எவன் இந்த அனுபவ சக்தியை இழந்திருக்கிறானோ அவன் சப்தத்தைக் கேட்பதில் கூட்டானாலும் அவனில் இந்தக் குணங்களெல்லாம் பலஹீனமாகவே இருக்கும். அவன் சங்கீதத்தினால் பரவசமடைந்தவனையும், உணர்ச்சிவசமாகி போதத்தை இழந்தவனையும் கண்டு ஆச்சரியப்படுவான். சங்கீத ரசிகர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தாலும் இவனுக்கு சங்கீத இன்ப அனுபவத்தை விளக்கி வைக்க அவர்களால் முடியாது. இது ஓர் அற்ப சமாச்சாரத்தின் உதாரணமேயாகும். ஏனெனில், இதுவே உனது விளக்கத்திற்கு ஏற்றதாகும். இதைக் கொண்டு நபிமார்களுக்குச் சொந்தமான அனுபவத்தைச் சீர்பிடித்துப் பார்த்துக்கொள். இந்தத் தத்துவத்தில் ஒரு சிலவற்றைக் கொண்டாவது அனுபவம் பெறக்கூடியவர்களில் நீயும் ஒருவனாக முயற்சி எடுத்துக் கொள்.

அவுலியாக்களுக்கு இதில் பெரும் பங்குண்டு. அதற்கு நீ சக்தியற்றவனாக இருந்தால் நாம் மேலே சொல்லி வந்த ஒழுங்குகளைக் கொண்டும் சயிக்கினையாகக் காட்டக் கூடிய உவமானங்களைக் கொண்டும் அதையறிந்த கூட்டத்திலாகவாவது ஆக முயற்சி மேற்கொள். அதற்கும் இயலாது போனால் அதை நம்பியவர்களுக்கும் தாழ்ந்தவனாயாகாதே.

'உங்களில் நின்றும் நன்நம்பிக்கை (ஈமான்) கொண்டவர்களையும், ஞான அறிவைக் கொடுக்கப்பட்டவர்களையும் அல்லாஹ் பற்பல பதவிகளிலும் உயர்த்தியாக்கி வைக்கின்றான்' – (58:11)

ஞானம் ஈமானுக்கு (நம்பிக்கைக்கு) மேம்பட்டதாகும். அனுபவம் ஞானத்திற்கும் மேம்பட்டதாகும். அனுபவம் கண்காட்சியாகும். அறிவு ஒன்றோடொன்றை ஒழுங்கு பிடித்து எடுப்பதாகும். ஈமான் அனுபோகக்காரர் பேரில் அல்லது அறிந்தவர்கள் பேரில் நல்லெண்ணத்தோடு அவர்களைத் துயர்வது மட்டுமேயாகும்.

இப்போது சொல்லப்பட்ட ஐந்து றூஹு (தத்துவம்)களையும் தெரிந்து கொண்டாயானால் அறிந்து கொள்! இவைகள் அத்தனையும் ஒளிகளாகும். ஏனென்றால் இவைகளினால் பல வகையான சிருஷ;டிப் பொருட்களும் வெளியாகின்றன. இவற்றில் நின்றும் புலனுணர்வும், கற்பனா சக்தியும் அதன் இனத்தில் மிருகங்களும் கூட்டான போதிலும் அதிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கக் கூடியது வேறுவிதமானதும், உயர்வானதும், மேலானதுமாகும். இவ்விரண்டையும் மனிதனில் அழகான, உயர்வான வேறொரு கருத்துக்காக படைக்கப்பட்டுள்ளன. ஆனால், மிருகங்களோ அவைகளில் இவ்விரண்டையும் உணவு தேட ஆயுதமாகவும், மனிதனுக்கு வசப்பட்டு நடப்பதற்காகவுமேயல்லாது படைக்கப்படவில்லை. மனிதனுக்கு அவைகளை படைக்கப்பட்டதெல்லாம் அதைக் கொண்டு மனிதன் தாழ்ந்த உலகத்தின் திசையிலிருந்து சிறப்பான, மார்க்க சம்பந்தமான ஆரம்ப அறிவுகளை வேட்டையாடிப் பிடித்துக் கொள்வதற்கு வலையாக ஆகுவதற்கே தான். ஏனென்றால், மனிதன் புலனைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட மனிதனை எட்டிக் கொள்வானேயானால் அவன் புத்தியைக் கொண்டு பொதுவான-குறிப்பில்லாத ஒரு கருத்தை எடுத்துக் கொள்வான், நாம் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் உவமானத்தில் கூறிவந்தது போல்.

நீ இந்த ஐந்து றூஹுகளையும் தெரிந்து கொண்ட பின் நாம் உவமானங்களை எடுத்துக் காட்டுவதன் பக்கம் திரும்புகிறோம்.

**இந்த ஆயத்தின் உவமானங்கள் பற்றிய விபரம்**

அறிந்து கொள்! இந்த ஐந்து றூஹுகளும், மாடக்குளி, பளிங்கி விளக்கு, மரம், எண்ணெய் இவைகளுக்கு ஒப்பாகியிருப்பதை பற்றி பேசுவதென்றால் பேச்சை விரிவாக்கிக் கொண்டு போக முடியும். ஆனால், நான் வட்டுறுக்கமாக அதன் வழியின் பேரில் உணர்த்துவதோடு சுருக்கி சொல்கிறேன்.

அறிந்து கொள்! புலனுணர்வு சக்தியாகிறது, அதன் அமைப்பைப் பார்த்தால் அதன் ஒளிகள் இரு கண்கள், இரு நாசித் துவாங்கள் மற்றும் பல துவாரங்களின் வழியாகப் புறப்படுகிறது. வெளியுலகில் அதற்கு நேர்பாடான உவமானம் மிஷ்காத்து (மாடக்குழி) ஆகும்.

கற்பனா சக்தியோ அதில் நீ மூன்று அமைப்புகளைக் காண்பாய்.

1. அது திண்ணமான தாழ்ந்த உலகின் களி மண்ணிலுள்ளது. ஏனென்றால், கற்பனா சக்தியால் கற்பிதமான பொருள். அளவையும் கோலத்தையும் உடையதாகவும் கற்பனை செய்கிறவனோடு தூரம், சமீபம் என்ற சம்பந்தத்தோடும் இருக்கிறது. சடலங்களின் லட்சணங்களைப் பூண்ட இந்தத் திண்ணமான பொருள் திசை, அளவு, சமீபம், தூரம் என்ற லட்சணங்களை விட்டு பரிசுத்தமான புத்தியால் உணரக் கூடிய கலப்பற்ற ஒளிப் பிரகாசங்களை விட்டும் திரையாக மறைக்கத்தான் செய்யும்.

2. இந்தத் திண்ணமான கற்பனா சக்தி தெளிவாகி, இலேசாகி, பழக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு விட்டால் இது புத்தியைக் கொண்டறியப்பட்ட கருத்துகளுக்கு நேரானதாகவும், அதிலிருந்து ஒளி பிரகாசிக்க திரையாகாமலுமிருக்கும்.

3. புத்தியைக் கொண்டு உணரக்கூடிய அறிவுகள் கட்டுப்பாட்டில் அமைவதற்காக ஆரம்பத்தில் கற்பனா சக்தி அவசியம் தேவைப்பட்டதாகவே இருக்கிறது. அப்போது தான் அவை துளும்பாமலும், அசையாமலும், கட்டுப்பாட்டைத் தாண்டி ஒரேடியாகப் பறந்து போகாமலுமிருக்கும். ஏனென்றால், கற்பனை உவமானங்கள் புத்தியால் அறியப்படும் அறிவுகளை ஒன்றாக சேகரம் செய்கின்றனவே.

இந்த மூன்று அமைப்புகளையும் வெளியுலகில் கண்பார்வையால் பார்க்கப்படக் கூடியதில் ஜுஜாஜது (பளிங்குக் கிளாஸி)லேயேயல்லாது பெற்றுக் கொள்ள மாட்டாய். இது ஆரம்பத்தில் ஒரு கனமான பொருளினால் உண்டானதாகும். ஆனால், இது தெளிவாகி லேசாகியிருக்கிறது. எதுமட்டுமென்றால், இது விளக்கின் ஒளிக்குத் திரையாக ஆவதில்லை. எனினும் இது தன் பக்கத்திலிருந்து ஒளியை எடுத்துக் கொடுக்கிறது. பின்னர், இது விளக்கை கடுமையான காற்றை விட்டும், இலேசாக அசைவதை விட்டும் காப்பாற்றிக் கொள்கிறது. ஆகையால், இதுவே அதற்கு (கற்பனா சக்திக்கு) உவமானமாகப் பொருத்தமுடையதாகும்.

மூன்றாவதான றூஹுல் அக்லியோ (புத்தியோ) அதைக் கொண்டு தான் சிறப்பான தெய்வீக இரகசியங்களை அறியப்படுகிறது. அதற்கு உவமானமாக ஆகிறவற்றைப் பற்றிய வகை விபரம் உனக்குத் தெரியாமல் போகாது. மேலே நபிமார்கள் பிரகாசிக்கும் தீபமாக ஆனதன் பொருளைப் பற்றி விபரித்து வந்ததிலிருந்து இதை நீ அறிவாய்.

நான்காவதான றூஹுல் பிக்ரி (சிந்தனா சக்தி)யோ அதன் அமைப்பிலுள்ளது. அது ஒரு அசலிலிருந்து (அடி மூட்டிலிருந்து) ஆரம்பமாகும். பின்னர் இரு பனர்களாய் பிரியும். அப்பால் ஒவ்வொரு பனரும் இரண்டு பனர்களாக இப்படியே புத்தியால் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டவைகளைக் கொண்டு மிகுந்த பனர்களாகப் போகும். பின்னர் இறுதியாகச் சில பயன்கள் அளவில் கொண்டுவிடும். அவைகள் அவை போன்றவைகளுக்கு விதைகளாய் ஆகி விடும். ஏன்? திரும்பவும் அதில் சிலதை சிலதோடு சேர்த்து இப்படியே எடுக்க முடியும்தானே.

ஆகவே அதற்கு இந்த உலகில் உவமானம் மரமாகும். அதன் பிரயோசனமான பழங்கள் - அறிவுகள் பன்மடங்கு இரட்டிப்பாகவும், ஸ்திரமாகவும், தரிபாடாகவும் இருக்க அது மூலாதரமாக ஆகிறபோது அதற்கு ஆரஞ்சு, ஆப்பிள், மாதுளை இவை போன்ற ஏனைய மரங்களைக் கொண்டு

உவமானம் சொல்லப்படாமல் ஜைத்தூன் மரத்தைக் கொண்டு குறிப்பாக உவமானம் சொல்லப்படுவது அவசியமாயிற்று. ஏனெனில், அதின் விதையினுடைய சத்தானது விளக்கிற்கு மூலாதரமான எண்ணெய்யாகும். அத்தோடு அது மற்ற எண்ணெய்களை விட அதிகப் பிரகாசம் கொடுப்பது கொண்டு குறிப்பானதாகும். பழம் அதிகமான மரத்திற்கு பறக்கத்து செய்யப்பட்ட மரம் எனச் சொல்லப்படும் போது, எது ஒரு குறிப்பான எண்ணிக்கையின் வரம்பில் கட்டுப்படாமல் அபரிமிதமாகப் பழம் தரக் கூடியதோ அதற்கு பறக்கத்துச் செய்யப்பட்ட மரம் என்று அவசியம் சொல்ல வேண்டும்.

புத்தியால் அறியப்பட்டு சிந்தனா சக்திக்குள்ளானவைகளின் பனர்கள் திசைகள் அளவிலும், சமீபம் தூரத்தளவிலும் சேர்த்துச் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமல் நீங்கி இருக்கிறபோது அவை உதயகிரியைச் சேர்ந்தனவாகவோ அல்லதுஅஸ்தகிரியைச் சேர்ந்தனவாகவோ அல்லாமலிருக்கத் தகுமானவையாகும்.

5. றூஹூல் குதுஸியாகிய நபிமார்கள், ஒலிமார்கள்களின் பரிசுத்த ஆன்மாக்கள் தெளிவிலும், பிரகாசத்திலும் உச்சஸ்தானத்திலானதாகவும் இன்னும் சிந்தனா சக்தியில் சிலது மஃரிபத்தின் வகைகளில் ஸ்திரமாக தரிப்பட்டிருப்பதற்குத் தனக்குக் கற்றுக் கொடுக்கவும், உணர்ச்சியூட்டவும் வெளியிலிருந்து உதவியளவில் தேவையானதாகவும், சிலது தான் அதிகத் தெளிவாக இருப்பதனால் வெளியுதவியில்லாமல் தன்னாலேயே உணர்ச்சி பெறக்கூடியதாகவும் (இருவகையாக) பிரிந்திரிக்கும் போது அதிக சக்தி வாய்ந்த தெளிவில் உச்சஸ்தானத்திலுள்ளதை 'அதன் எண்ணெய் நெருப்பு தொடாது போனாலும் பிரகாசிக்கும்' என்று சொல்ல ரொம்பத் தகுமானதாகும்.

ஏனெனில், ஒலிமார்களில் சிலர் நபிமார்களின் உதவியில்லாமலே அவர்களது பிரகாசிக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். நபிமார்களிலும் சிலர் மலாயிகத்துடைய உதவியை விட்டும் தேவையற்றவர்களுமிருக்கிறார்கள். ஆகவே, இந்த வகைக்கு இந்த உவமானம் நேர்மையானதாகும். இந்தப் பிரகாசங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக்கப்பட்டிருக்கிறது. புலனுணர்வே முதலாவதாயிருக்கிறது. இது கற்பனா சக்திக்கு அடிப்படையும், ஆயத்தமும் போலிருக்கிறது. ஏனென்றால், கற்பனா சக்தி இதற்குப் பின்னாலேயே வைக்கப்பட்டதாகவேயல்லாமல் ரூபகரமாகாது. சிந்தனா சக்தியும், புத்தியும் அவை இரண்டிற்கும் பின்னாலேயே இருக்கிறது.

எனவே, கண்ணாடி விளக்குக்கு இடம் போலவும், மாடக்குளி கண்ணாடிக்கு இடம் போலவுமாகிறது. அப்போது விளக்கு கண்ணாடியிலும், கண்ணாடி மாடக்குளியிலுமிருக்கிறது. இவைகளெல்லாம் ஒளிகளாகவும், ஒன்றுக்கு மேலொன்றாகவும் இருப்பதனால் இஃது ஒளிக்கு மேல் ஒளியாக இருக்கிறது என்பது பொருத்தமாகும். (ஆகவே இவற்றை நன்கு) உணர்ந்து கொள்! அல்லாஹ்வே நல்லுதவியாளன்.

**முடிவுரை**

இந்த உவமானம் முஃமின்களுடைய இருதயங்கள் அல்லது நபிமார்கள், அவுலியாக்களுடைய இருதயங்களுக்கேதான் பொருந்தும். காபிரீன்களுடைய இருதயங்களுக்கல்ல. ஏனெனில், ஒளி என்பது கொண்டு நேர்வழியைத் தான் கருதப்படுகிறது. எது நேர்பாதையை விட்டும் திருப்பப்பட்டதாகக் கிடக்கிறதோ அது, அசத்தியமும் இருளுமாகும். இருளை விடவும் கடினமாகும். ஏனெனில் இருள் சத்தியத்தினளவில் வழி காட்டாததே போன்று அசத்தியத்தினளவிலும் வழி காட்டாது. காபிரீன்களின் புத்திகள் தலைகீழாகக் கிடக்கின்றன. அப்படியே அவர்களது ஏணைய அறிவுகளும், மேலும் அவை அவர்களது விஷயத்தில் வழிகேட்டிற்கு உதவியாகவும் இருக்கின்றன.

எனவே அவர்களுக்கு உவமானம் ஆழிய சமுத்திரத்தில் கிடக்கும் மனிதன் போன்றாகும். அதை அலை மூடியிருக்கிறது. அதற்குமேல் அலை, அதற்கு மேல் மேகம். இப்படியாக ஒன்றன் மேலொன்றாக அந்தகார இருள் மயமே என்பதாகும்.

ஆழிய சமுத்திரம் என்பது பலவகையான ஆபத்துகளும், கெடுதல்களும், கண்ணைக் குருடாக்கும் கலக்கமும், மிகுந்த துன்பங்களும் நிறைந்த துனியாவாகும். முதல் அலை மிருக லட்சணங்கள் அளவிலும், புலனுணர்வு இன்பத்தின் பராக்களவிலும், உலக தேட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதளவிலும் எழுப்பக் கூடிய ஆசையெனும் அலையாகும். அவர்கள் அதிலேயே மூழ்கி மிருகங்களைப் போல் உண்டு, தின்று, சுகித்துக் கொண்டே இருப்பார்கள். நரகமே அவர்களின் ஒதுங்கும் தலமாகும். ஆகவே இந்த அலைக்கும் இருள் எனச் சொல்வது தகுமாகும்.

ஏனென்றால், ஒரு வஸ்துவை நேசிப்பதானது (மற்றவைகளைப் பார்க்க, கேட்க விடாது) குருடாகவும், செவிடாகவும் செய்யும்.

இரண்டாவது அலை, கோபம், பகைமை, துவேஷம், பொறாமை, கெடும்பு, சுயப் பிரஸ்தாபம், பெருமை, அதிக ஐஸுவரியத் தேட்டம் போன்றவற்றில் இழுத்துவிடக் கூடிய துஷ்ட மிருக லட்சணமெனும் அலையாகும். இவைகளும் இருளாகத் தகுமானவையே. ஏனெனில், கோபமோ புத்தியை மிகைத்துவிடும். மேலும், இது மேலேயுள்ள அலை என்பதற்கும் தகுமாகும். ஏனென்றால், கோபமாகிறது மிகுதமான ஜனங்களில் இச்சையை மிகைத்து விடுகிறது. கோபம் பொங்கி விட்டதென்றால் இச்சைகளையும், இன்பங்களையும் மறக்க வைத்து விடுகிறது. இச்சைக்குக் கோபத்தோடு அறவே தாக்குப் பிடிக்க முடியாது.

கார்மேகம் என்பதாகிறது, கெட்ட கொள்கைகளும் தப்பெண்ணங்களும், கற்பனைகளுமாம். இது காபிருக்கிடையிலும், ஈமானுக்கும், சத்தியத்தை அறிவதற்கும் இன்னும் திருகுர்ஆன், புத்தியெனும் சூரிய ஒளியைக் கொண்டு பிரகாசம் பெறுவதற்கிடையிலும் திரையாக இருக்கிறது. ஏன்? மேகத்தின் இயல்பு சூரிய ஒளிப்பிரகாசத்தை மறைப்பது தானே!

இவை யாவுமே இருள்களேயாகும் போது இவை ஒன்றன் மேலொன்றான இருள் என்பதற்குத் தகும். இந்த இருள்களெல்லாம் சமீபமான பொருள்களையும் தெரிந்து கொள்ள முடியாமல் மறைத்து விடுகின்றன. இதனாலேயே காபிரீன்கள் நபிமார்களுடன் கிட்ட நெருங்கி பழகிக்

கொண்டிருந்தும், இலேசாகக் கவனித்தாலுங் கூட விளங்கக் கூடிய அந்த நபிமார்களின் அற்புத நிகழ்ச்சிகளைக் கண்டு உணர முடியாது. அவர்களுக்குத் திரையாகிவிட்டன. ஆகையால், கையை நீட்டினால் அதையும் கண்டு கொள்ள முடியாது என்று சொல்வது பொருத்தமாகும்.

எல்லா ஒளிகளின் உற்பத்தித் தலம் முன் சொல்லப்பட்டதுபோல் ஆதி ஒளியாகிய ஹக்குத்தஆலாவில் நின்றுமுள்ளதாகுமென்னும் போது, 'எவனுக்கு அல்லாஹ் ஒளிப் பிரகாசத்தை ஆக்கிக் கொடுக்கவில்லையோ அவனுக்கு எந்த ஒளியுமில்லை' என்பதாக முவஹ்ஹிது (அத்துவைதி ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்வது அவசியம். இந்த ஆயத்தின் இரகசியத்தைப் பற்றிய இவ்வளவு விளக்கம் உனக்குப் போதும் எனத் திருப்தியடைவாயாக.

**மூன்றாவது அத்தியாயம்**

'அல்லாஹுத் தஆலாவுக்கு ஒளியாலும், இருளாலும் எழுபது திரைகள் உண்டு. அவற்றை அவன் நீக்குவானேயானால், அவனது திருமுகத்தின் ஜொலிப்பு, எவர்களின் பார்வை அவனைப் பார்த்ததோ அவர்களையெல்லாம் கரித்து விடும்' என்று. இன்னொரு ரிவாயத்தின்படி எழுநூறு திரைகளென்றும், மற்றொரு ரிவாயத்தின்படி எழுபதுணாயிரம் திரைகளென்றும் வந்துள்ள நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய திருமொழியின் கருத்து பற்றி விளக்குவதிலாம். சொல்கிறேன், கேள்!

அல்லாஹுத்தஆலா தனது தாத்துக்கு தனது தாத்தினாலேயே தன் தாத்திலேயே வெளியாகியே இருக்கிறான். திரையாவது எல்லாம் திரையிடப்பட்டவர்களைப் பொறுத்தே உள்ளது. மனிதர்களில் திரையிடப்பட்டவர்கள் மூன்று பிரிவினராக உள்ளனர். இருளைக் கொண்டு மட்டும் திரையிடப்பட்டவர்களும், ஒளியைக் கொண்டு மட்டும் திரையிடப்பட்டவர்களுமாக இருக்கிறார்கள். இப்பிரிவினர்களில் அனந்த வகையினர்கள் இருக்கிறார்கள். சிரமம் எடுத்து அவர்களையெல்லாம் கணக்கெடுத்து இத்தனை வகையினர் என்று என்னால் மட்டிட்டுச் சொல்ல முடியும். ஆனால், எனக்கு வெளியாகும் அந்த மட்டு திட்டத்தின் மீது நான் உறுதி கொள்ள மாட்டேன். ஏனென்றால், ஹதீது ஷரீபில் வந்தது கொண்டு அந்த குறிப்பான எண்ணிக்கைதான் கருத்தா, அல்லவா? என்பதும் தெரியாது. ஆனால், எழுநூறு அல்லது எழுபதினாயிரம் என்று மட்டுப்படுத்துவது நபித்துவ சக்திக்கு மட்டுமேயல்லாது வேறு யாருக்கும் சாத்தியப்படாது.

அத்தோடு எனது பகிரங்கமான எண்ணமும் இந்த எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்காக கூறப்பட்டதல்ல என்பதாகும். ஏனென்றால், பழக்க வழக்கத்தில் ஓர் எண்ணிக்கையைச் சொல்லி அதைக் கொண்டு அந்தக் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கருதாது அது கொண்டு மிகுந்த எண்ணம் என்பதையும் கருதப்படுகிறது. இதன் உண்மையை அல்லாஹ் மிக அறிந்தவன். இது மனித சக்திக்குப் புறம்பானது.

ஆனால், இப்போது என்னால் முடியுமானது உனக்கு அந்தக் கூட்டங்களையும், அவற்றின் சில வகைகளையும் விளக்கித் தருவதேதான். எனவே சொல்கிறேன் கவனமாகக் கேள்!

**முதலாவது பிரிவினர்**

இவர்கள் வெறும் இருளைக் கொண்டு மட்டும் திரையிடப்பட்டவர்கள். இவர்கள் முல்ஹிதுகள் (மறுக்கின்றவர்கள்-நாஸ்திகர்கள்). இவர்கள் அல்லாஹ்வைக் கொண்டும் இறுதி நாளைக் கொண்டும் நம்பிக்கைக் கொள்ள மாட்டார்கள். மறுமை வாழ்வை அடியோடு நம்பாததால் இவ்வுலக வாழ்க்கையையே பெரிதெனத் தெரிந்து கொள்வார்கள். இவர்களில் பல வகையினர் உண்டு.

1. அவர்களில் ஒரு வகையினருக்கு இவ்வுலகம் உண்டாகக் காரணம் என்ன என்பதனைத் தெரிந்து கொள்ள ஆசை உண்டாகும். ஆனாலும், அந்த எண்ணத்தை சுபாவ குணம் (தபீஅத்து) மாற்றிவிடும். இந்தக் குணம் சடலத்தில் அமைக்கப்பட்ட ஓர் இலட்சணம். அதிலேயே இது தங்கி நிற்கும். இது இருள்மயமானது. ஒருவித ஞானமும், அறிவும் இதற்குக் கிடையாது. இதற்குத் தன்னையும் தெரியாது. வெளிப்பார்வையால் தெரிந்து கொள்ளவும் இதில் பிரகாசமில்லை.

2. அவர்களில் இரண்டாவது வகையினர், தங்கள் நபுஸைக் கொண்டே பராக்காக்கிக் கிடக்கின்றனர். உலக உற்பத்தியின் காரணத்தைப் பற்றித் தேட அவர்களுக்கு ஓய்வே இல்லை. மிருகங்களைப் போன்றே சீவிக்கிறார்கள். இவர்களின் திரை இவர்களில் அமைக்கப்பட்ட நப்ஸும், இருளான இச்சையுமேயாகும். இவ்விரண்டையும் விடக் கடுமையான இருள் வேறொன்றுமில்லை. இதனாலேயே, 'தனது இச்சையை நாயனாக ஆக்கிக் கொண்டவனைப் பார்த்தீரா?' ( 25:43) என்று அல்லாஹ் வினவியுள்ளான்.

'மன இச்சையானது வணங்கப்படக் கூடிய நாயன்களிலெல்லாம் அல்லாஹ்விடத்தில் மிகவும் வெறுக்கப்பட்டதாகும்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாகியுள்ளார்கள்.

இவ்வகையினரும் பல இனங்களாக உள்ளனர். இவைகளில் ஒரு இனத்தினர் தேவைகளை முடித்துக் கொள்வதும், இச்சைகளைப் பெற்றுக் கொள்வதும், காம இச்சை, ஊண், தீன், உடை அலங்காரப் பிரியம் போன்ற கேவலமான ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதும்தான் உலகத்தில் பிரதான இலட்சியமெனக் கருதுகிறார்கள். இவர்கள் சுக போக இச்சையின் அடிமைகள். அதையே விரும்பி வணங்குகிறார்கள். (அதற்கே வழிபட்டு நடக்கிறார்கள்) அதையடைவது தான் முடிவான சீர்வதித்தனம் என்பதாகவும் நம்பியிருக்கிறார்கள். தாங்கள் மிருக அந்தஸ்திலிருப்பதைக் கொண்டே திருப்தியடைகின்றனர். மேலும், மக்கள் அவர்களைக் குறைவான கண்கொண்டு பாராமலிருக்கவே (இப்படி) செய்கிறார்கள். இந்த வகையினர்கள் மட்டிட முடியாத அளவில் அநேகமாக இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் அல்லாஹ்வை விட்டும் கலப்பற்ற இருளைக் கொண்டே திரையிடப்பட்டிருக்கிறார்கள். அது இவர்களின் இருளான நபுஸுகளேயாகும். இவர்களின் இனங்களைப் பற்றி உணர்த்திய பின்னர் இனத்தில் ஒவ்வொருவரைப் பற்றியும் கூறிக் கொண்டே போவதில் அர்த்தமில்லை. நாவினால் மட்டும் 'லாஇலாஹ இல்லல்லாஹு' என்று சொல்பவர்களும் இக்கூட்டத்தில்

சேர்;ந்தவர்கள்தான். இவர்கள் இப்படி (மனமொப்பாமல் வாயால் மாத்திரம்) கலிமாச் சொன்னதானது பயத்திற்காகவோ, முஸ்லிம்களிடம் தங்களையும் முஸ்லிம்கள் என்று வெளிக்குக் காண்பித்துக் கொள்வதற்காகவோ, அவர்களிடம் மதிப்புப் பெற்றுக் கொள்வதற்காகவோ, அவர்களில் நின்றும் பொருள் உதவி பெறுவதற்காகவோ, மூதாதைகளின் கொள்கைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்திற்காகவோ இப்படிச் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் நாவினால் சொன்னதானது அமல் செய்வதன் பேரில் இவர்களை இழுத்துவிடவில்லையானால் இவர்களை இருளை விட்டும் ஒளியளவில் அப்புறப்படுத்தி வைக்காது. என்கிலும், இவர்களுக்குக் காரிய கர்த்தாக்கள் தாகூத்து (ஷைத்தான்)களாகும். அந்த ஷைத்தான்கள் இவர்களை ஒளியிலிருந்து இருள் அளவில் அப்புறப்படுத்துவார்கள்.

ஆனால், எவர்களுக்குத் தங்களது தீய செயல்கள் வெறுப்பையும், நற்செயல்கள் சந்தோஷத்தையும் உண்டுபண்ணக் கூடிய விதத்தில் அவர்களில் கலிமா குணபாடு செய்து விட்டதோ, அவர்கள் கலப்பற்ற இருளை விட்டும் புறப்பட்டுவிட்டார்கள். அவர்கள் மிகுதியான பாவங்களையுடையவர்களானாலும் சரியே.

**இரண்டாவது பிரிவினர்.**

இவர்கள் இருளோடு சேர்ந்த ஒளியைக் கொண்டு திரையிடப்பட்டவர்கள். இவர்கள் மூன்று வகையாக உள்ளனர்.

அ) முதல் வகையினர் - இவர்களுக்கு இருளுண்டானது புலனறிவிலிருந்தேயாகும்.

ஆ) இரண்டாவது வகையினர் - இவர்களுக்கு இருளுண்டானது கற்பனா சக்தியிலிருந்தேயாகும்.

இ) மூன்றாவது வகையினர் - இவர்களுக்கு இருளுண்டானது கெட்ட கணிப்புகளிலிருந்தே ஆகும்.

அ) முதல் வகையினரான, புலனறிவால் இருளைக் கொண்டு திரையிடப்பட்டவர்கள் பல படித்தரத்தினராவார்கள். இவர்களில் ஒருவருமே தங்கள் நபுஸளவில் திரும்பிப் பார்ப்பதை விட்டும் இன்னும் தங்கள் நாயனை அறிய வேண்டுமென்ற ஆர்வம், ஆசையை விட்டும் (முற்றாக) ஒளியமாட்டார்கள். இவர்களில் முதல் படித்தரத்தார்கள் விக்கிரத் தொழும்பர்கள். இவர்களில் கடைசி படித்தரத்தையுடையவர்கள் தனவிய்யா (இரு தெய்வ வணங்கிகள்) இவ்விருவர்களுக்கு மத்தியில் பல படித்தரத்திலுள்ளவர்கள் இருக்கிறார்கள்.

1. முதலாம் படித்தரத்தினர்களான விக்கிரகத் தொழும்பர்கள் பொதுவாகத் தங்களுக்கு ஒரு நாயன் (படைத்துப் பரிபாலிப்பவன்) இருக்கிறான் என்றும், அவனைத் தங்களின் இருளான நபுஸைக்காண பெரியவனாகத் தெரிந்து மதிப்பது அவசியம் எனவும் நம்புகிறார்கள். ஆனால், புலனினுள் அவர்களைப் புலனுணர்வுக்குட்டவைகளை விட்டும் கடக்க விடாது திரை போட்டுக் கொண்டது. ஆகவே, இவர்கள் தங்கம், வெள்ளி, மாணிக்கம் போன்ற அபூர்வப் பொருள்களிலிருந்து சில சடங்களை அழகிய உருவத்தில் சித்தரித்து அதையே நாயனாக (தெய்வமாக) ஆக்கிக் கொண்டார்கள். இவர்கள் அல்லாஹ்வின் அழகு, மகிமை எனும்

லட்சணம் கொண்டு திரையிடப்பட்டவராவர். ஆனாலும், அதை (அழகு, மகிமையை) இவர்கள் புலன்களால் அறியப்பட்ட தூலங்களுடன் சேர்க்கிறார்கள். இவர்களை இந்தப் புலனிறுள் அந்தப் பேரழகை விட்டும் தடுத்து விடுகிறது.

2. இரண்டாவது படித்தரத்தார்கள்- துருக்கி தேசத்தில் கடைசி எல்லையிலிருக்கிற கூட்டத்தினாராவர். இவர்களுக்கு எவ்வித மார்க்கமுமில்லை. வரம்புமில்லை. இவர்கள் தங்களுக்கு நாயன் இருக்கிறான், அவன் எல்லா வஸ்துக்களிலும் அழகானவன் என்று நம்புகிறார்கள். இவர்கள் யாராவது ஒரு மனிதனையோ அல்லது மரம் அல்லது குதிரை மற்றவைகளையோ மிக அழகுள்ளவனாகக் காண்பார்களேயானால் அதற்குச் சாஷ;டாங்கம் செய்து, 'இது எங்கள் நாயன்' என்கிறார்கள். இவர்கள் புலனிறுளோடு அழகொளியைக் கொண்டு திரை போடப்பட்டவர்களாவர். இவர்கள் ஒளியைக் கவனிப்பதில் விக்கிரகத் தொழும்பர்களை விடவும் ஆழ்ந்தவர்கள். ஏனென்றால், இவர்கள் ஒரு குறிப்பான வஸ்துவில் அல்லாது பொதுவான அழகை வணங்குகிறார்கள். இன்னும் இவர்கள், அதை எல்லா பொருளிலும் விட்டுவிட்டு ஒரு குறிப்பான பொருளில் மட்டும் கட்டுப்படுத்துகிறார்களுமில்லை. மேலும் தங்கள் புறத்தாலும் தங்கள் கரங்களினாலும் செய்யப்பட்டதை விடுத்து இயற்கையான அழகையே வணங்குகிறார்கள்.

3. மூன்றாவது படித்தரத்தார்கள்- இவர்கள் தங்கள் நாயன் தன்னிலேயே ஒளியானவனாகவும், உருவத்தில் அழகானவனாகவும், அதிகாரத்தை உடையவனாகவும் அவன் சமூகத்தில் யாரும் கிட்டவே நெருங்க அச்சப்படக் கூடியவனாகவும் இருக்க வேண்டியது அவசியம். ஆனாலும், அவன் புலனுக்குத் தென்பட்டவனாகவே இருக்க வேண்டும் என்றும் சொல்வார்கள். ஏன்? இவர்களிடத்தில் புலனறிவுக்கு அப்பாற்பட்டது என்பதற்கு அர்த்தமே இல்லையே. பின்னர் இவர்கள் இந்த லட்சணங்களோடு நெருப்பைக் கண்டதும் அதை வணங்கவும், அதையே தெய்வமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். இவர்கள் அழகு அதிகாரம் எனும் ஒளியினால் திரையிடப்பட்டவர்களாவர். இவை (இந்த அழகு ஆட்சியின் ஒளி)க்கோ அல்லாஹ்வின் ஒளிகளில் நின்றுமுள்ளதாகவேயிருக்கிறது.

4. நான்காவது படித்தரத்தார்கள் - இவர்கள் நெருப்பானது அதைப் பொருத்தி வைப்பது கொண்டும் அதை அணைத்து விடுவது கொண்டும் அதன் பேரில் நாம் அதிகாரம் செய்கிறோம். அது நமது அதிகாரத்தின் கீழிருக்கிறது. ஆகவே, இது தெய்வமாக இலாயக்கில்லை. என்கிலும், எது இந்த இலட்சணத்துடன் (அழகதிகாரத்துடன்) இருந்து அதன் ஆட்சியின் கீழ் நாமும் இருக்கிறமோ, மேலும் மேலாம்பரமான உயர்த்தியை உடையதாகவுமிருக்கிறதோ அதுவே (தெய்வீகத்துக்கு லாயக்கானதாக) ஆகும் என்று நினைக்கிறார்கள்.

பின்னர், நட்சத்திரக் கணித கலையும், உலகில் நடக்கும் குணபாடுகள் அத்தனையும் அவைகளைப் பொறுத்தே தான் என்பதும் பிரஸ்தாபமாக இருக்கவே (குணபாடுகளெல்லாம் நட்சத்திரங்களினாலேயே ஆகின்றன என்ற இவர்களது நம்பிக்கைக்கு ஒப்ப) இவர்களில் 'ஷp;ஃறா' வெனும் நட்சத்திரத்தை வணங்குபவர்களும், இவையன்றி வேறு நட்சத்திரங்களை வணங்குபவர்களும் உண்டானார்கள். இவர்கள் அறிவின் ஒளியினாலும், பிரகாசத்தின்

ஒளியினாலும், அடர்ந்தேறுதலின் ஒளியினாலும் திரை போடப்பட்டவர்களாவர். இவைகளும் அல்லாஹ்வின் ஒளிகளில் நின்றுமுள்ளனவே.

5. ஐந்தாவது படித்தரத்தார்கள் - இவர்கள், ஆதாரம் கண்டெடுக்குமிடத்தில் அவர்களுக்கு ஒத்தாசையாகவே இருக்கிறார்கள். என்கிலும், இவர்கள் எங்கள் நாயன் இந்த ஒளிப் பொருள்களளவில் சேர்த்துப் பார்த்து (ஒன்றைவிட) சின்னது, (மற்றொன்றை விட) பெரியது, என்று சொல்வதற்கில்லாமல் அவை (அத்தனை)களை விடவும் பெரிதாக இருக்க வேண்டுமென்று சூரியனே எல்லாவற்றையும் விடப் பெரியதாக இருக்கிறது என்று சொல்லி அதையே வணங்குகிறார்கள். இவர்கள் எல்லா ஒளிகளையும் பார்க்க மேலாம்பரமென்னும் ஒளியைக் கொண்டு புலனிறுளோடும் சேர்ந்தறணையாக திரை போடப்பட்டவர்கள்.

6. ஆறாவது படித்தரத்தார்கள் - இவர்கள் அவர்களை விட மேலே போய் ஒளி என்பது எல்லாமுமே (யாவுமே) தான். சூரியன் மாத்திரம் ஒளியைக் கொண்டு சொந்தமல்ல. அதனல்லாதவைக்கும் ஒளிகளுண்டு. நாயனுக்கு அவனுடைய ஒளியில் கூட்டு இருப்பது தகாது என்று சொல்லி எல்லா ஒளிகளையுமே சேர்த்துக் கொள்ளக் கூடியதான பொது ஒளியை வணங்குகிறார்கள். மேலும், அதுவே உலகை போஷpத்து வளர்க்கக் கூடியது, நன்மைகள் அத்தனையும் அதனளவிலேயே சேர்ந்துள்ளன என்றும் நம்புகிறார்கள். பின்னர் உலகில் தீமைகளும் நடப்பதைப் பார்த்து அவைகளை விட்டும் தங்கள் நாயனைப் பரிசுத்தப்படுத்துவான் வேண்டி அதளவில் (அவர்களின் நாயனான பொது ஒளியளவில்) அவைகளை சேர்ப்பதை சரி காணாது அவனுக்கும் இருளுக்குமிடையில் (எப்போதும்) பிணக்கு இருந்து கொண்டிருப்பதாகவே ஆக்கிக் கொண்டு உலகத்தை ஒளி, இருள் இரண்டளவிலும் பிரித்தார்கள். சில சமயம் அவ்விரண்டிற்கும் 'எஜ்தான் அஹ்றமன்' எனப் பெயர் சொல்லுவார்கள். (எஜ்தான் அஹ்றமன் என்பது பாரிஸி பதங்கள். எஜ்தான் என்பதற்கு அல்லாஹ் என்றும் அஹ்றமன் என்பதற்கு ஷைத்தான் என்றும் பொருள் கொள்கிறார்கள் இரு தெய்வக் கொள்கைக்காரர்கள்). இந்த வகையினரின் கூட்டத்தார்கள் இன்னும் அனேகர் உண்டு. இந்த அளவு சுட்டிக் காட்டியது உனக்குப் போதும்.

ஆ) இரண்டாவது வகையினர்:-

கற்பனை எனும் இருளோடு சேர்ந்தறணையாகச் சில ஒளிகளைக் கொண்டு திரை போடப்பட்டவர்களாவர். இவர்கள் புலனைக் கடந்து புலன்களால் அறியப்பட்டவைகளுக்கு அப்பால் ஒன்றிருப்பதாக தரிபடுத்துகிறார்கள். ஆனாலும், கற்பனையைக் கடக்க அவர்களால் முடிகிறதில்லை. ஆகவே, அர்ஷpன் பேரில் உட்கார்ந்திருக்கக் கூடியதான ஒரு மவ்ஜூதை (பொருளை) வணங்குகிறார்கள். இவர்களில் தரத்தால் மிகக் குறைந்தவர்கள் முஜஸ்ஸமிய்யாக்கள்.(சடவாதிகள் அதாவது ஆண்டவனுக்குச் சடமிருப்பதாகச் சொல்பவர்கள்) பின்னர், கர்ராமியாக்களின் வகைகள் அத்தனையும். எனக்கு அவர்களின் எல்லோர்களின் வார்த்தைகளையும், அவர்களது கொள்கைகளையும் பற்றி விவரிக்க அவகாசமில்லை. மிகுதியாகப் பேசிக் கொண்டு போவதில் பயனுமில்லை. என்கிலும் அவர்களில் உயர்ந்த வகுப்பார் (ஆண்டவனுக்கு) ஸ்தூலத்தையும் அதன் பண்பு(களான திசை)களில் குறிப்பாக மேல்

திசையை தவிர மற்றெல்லாவற்றையும் மறுக்கிறவர்களுமாவர். ஏனென்றால், ஒரு திசையளவிலும் சேர்க்கப்படாததும் ஆலத்திற்குப் புறம்பாலுள்ளது என்றோ அல்லது உள்ளாலே உள்ளது என்றோ வர்ணிக்கப்படாததுமான ஒரு பொருள் அவர்களிடத்தில் மவ்ஜூதாகவே (உளதாகவே) இருக்காது என்பதாகும். ஏன், அப்படியொன்று கற்பனை செய்யப்பட்டதாக ஆகாதே!

மஃகூலாத்தின் (புத்தியால் அறியப்பட்டவற்றின்) முதல் படித்தரமானது திசைகள், தலங்கள் அளவில் சேர்ப்பதை விட்டும் அப்பாற்பட்டது என்பதை இவர்கள் அறியார்கள்.

இ) மூன்றாவது வகையினர்கள்:-

இவர்கள் புத்தியின் கெட்;ட கணிப்புகளான இருளோடு சேர்ந்தறணையாக தெய்வீக ஒளிகளைக் கொண்டு திரையிடப்பட்டவர்களாவர். இவர்கள் கேட்கக் கூடிய, பார்க்கக் கூடிய, அறிவையுடைய, தத்துவமுடைய, நாட்டத்தையுடைய, அறிவையுடைய, உயிரையுடைய, திசைகளத்தனைகளை விட்டும் பரிசுத்தமான நாயன் ஒருவனையே தான் வணங்குகிறார்கள். ஆனாலும், அவனுக்குள்ள இந்த லட்சணங்களையெல்லாம் தங்களுக்குள்ள லட்சணங்களைப் போன்றதாகவே கருதுகிறார்கள். ஒரு சமயம் அவர்களில் ஒருவர், அவனுடைய (அல்லாஹ்வுடைய) பேச்சு நம்முடைய பேச்சைப் போன்றே அச்சரம், தொனிகளாலானது என்று பகிரங்கமாகவே சொல்கிறார்கள். இன்னொருவர், இன்னும் மேலே சென்று அது (அவனுடைய கலாம்) அப்படியல்ல, எனினும் நம்முடைய மனப் பேச்சைப் போல் அச்சரமும், தொனியும் இல்லாததாகும் என்கிறார். மேலும் கேள்வி, பார்வை, சீவன் இவைகளின் எதார்த்தத்தைப் பற்றி அவர்களிடம் கேட்கப்பட்டாலும், வார்த்தைகளால் தஷ;பீஹை (ஒப்பாக்கி வைப்பதை) விட்டும் மறுத்த போதிலும் கருத்தில் அதனளவிலேயே மீளுகிறார்கள். ஏனெனில், அல்லாஹ்வின் ஹக்கில் இம்மாதிரியான பதப் பிரயோகங்களுக்குரிய கருத்துக்களை இவர்கள் அறவே விளங்க மாட்டார்களே. இதனாலேயே அல்லாஹ்வின் இறாதத்து (நாட்டம்) பற்றியும் அது நம்முடைய நாட்டத்தைப் போன்றே புதிதானதும், நாம் (ஒரு வஸ்துவை) விரும்புவதும், தேடுவதும் போலவே அதுவும் தேடுதலும் விரும்புதலுமாகும் என்றும் சொல்கிறார்கள். இவை பிரசித்தமான கொள்கைகளாகும். இதுபற்றி விவரிக்கத் தேவையில்லை. இவர்கள் புத்தியின் கெட்ட கணிப்பான இருளுடன் ஒளிகளின் தொகுப்பைக் கொண்டு திரை போடப்பட்டவர்களாவர். இவர்களெல்லோரும் இருளோடு சேர்ந்த ஒளியைக் கொண்டு திரை போடப்பட்டவர்களாகிய இரண்டாம் பிரிவினர்களின் வகையினர்களாவார்கள்.

**மூன்றாவது பிரிவினர்கள்.**

இவர்கள் கலப்பட்ட ஒளியைக் கொண்டு திரையிடப்பட்டவர்கள். இவர்களும் பலவகையாவார்கள். இவர்களை மட்டிட்டுச் சொல்ல முடியாது. இவர்களில் நின்றும் மூன்று வகையினர்கள் அளவிலேயே சயிக்கினையாகச் சொல்கிறேன்.

அ) முதல் வகை:- இவர்கள், அல்லாஹ்வின் லட்சணங்களைப் பற்றிய கருத்தை நன்கறிவார்கள். மேலும், அவனது லட்சணங்களின் பேரில் கலாம், இறாதத்து, குத்றத்து, இல்மு (பேச்சு, நாட்டம், தத்துவம், அறிவு) இன்னும் இவைகளல்லாத வேறு பதங்களையும் சொல்வதானது மனித

லட்சணங்களின் பேரில் இவைகளைச் சொல்வது போன்றதல்லவென்றும் அறிவார்கள். எனவேதான், (அவனைப் பற்றி விளக்கி வைக்கும்போது மக்கள் அவனது லட்சணத்தின் எதார்த்தக் கருத்தை விளங்கிக் கொள்ளாமல் அது மனிதர்களுடைய லட்சணங்களைப் போன்றதே எனக் கருதி விடுவார்களோ என்று அஞ்சி) அவனை இலட்சணங்களைக் கொண்டு சுட்டிக் காட்டாது சிருஷ;டிகளுடன் (உள்ள அவனது தொழில்களுடன்) சேர்த்து சுட்டிக் காட்டுவார்கள்.

(நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) 'பிரபஞ்சங்களுடைய இறைவன் எத்தகையவன்' என்று பிர்அவ்ன் கேட்டதற்கு பதில் சொல்லியதில் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் சுட்டிக் காட்டியது போல். எனவே, 'நிச்சயமாக மனிதர்களின் இந்த லட்சணங்களின் கருத்துக்களை விட்டும் பரிசுத்தமான நாயன் வானங்களையெல்லாம் ஆட்டி அசைத்து அதைப் பரிபாலிப்பவன்' என்று சொல்வார்கள்.

ஆ) இரண்டாவது வகை:- இவர்கள் முதல் வகையினரை விட மேலே போய்விட்டார்கள். இவர்களுக்கு வானங்கள் பல உள்ளதென்றும், ஒவ்வொரு வானத்தையும் குறிப்பாக அசைத்தாட்டக் கூடிய இன்னொரு பொருள் உள்ளதென்றும், அவருக்கு மலக்கு என்று சொல்லப்படுமென்றும், அந்த மலக்குகளிலும் அனந்தம் உண்டு என்றும், இன்னும் இவர்களுக்குத் தெய்வீக ஒளிகளோடுள்ள சம்பந்தமாகிறது புலன்களுக்குத் தென்படக் கூடிய (தீபங்களைப் போன்ற) ஒளியான பொருள்களுக்கும் நட்சத்திரங்களுக்குமுள்ள சம்பந்தமாகுமென்றும் இவர்களுக்கு விளங்கும்.

இந்த வானங்களெல்லாம் வேறொரு வானத்திற்குள்ளடங்கிக் கிடக்கின்றன. அது ஓரிரவு பகலுக்கொரு விடுத்தம் அசைகிறது, அதன் அசைவைக் கொண்டு இவையெல்லாமுமே அசைகின்றன என்றும் இவர்களுக்கு வெளியாகிறது. ஆகவே, இந்த எல்லா வானங்களையும் பொதிந்த தீட்சையாகிய அந்தக் கண்டிப்பான பொருளை ஆட்டி அசைக்கிறவனே நாயனாக இருக்கும். அவன் பலவாக இருக்க முடியாது. (ஒருவனேயாகும்) என்றும் கருதுகிறார்கள்.

இ) மூன்றாவது வகை:- இவர்கள் இரண்டாவது வகையினரை விட மேலே போய்விட்டார்கள். இவர்கள் அந்த (வானங்களென்னும்) சடங்கள் நெருங்கிச் சுழன்று கொண்டிருப்பதானது பிரபஞ்சத்தின் நாயனுக்கு அவை தொண்டு செய்வதும், வணங்குவதுமாகும் என்றும், புலன்களினால் அறியப்பட்ட ஒளிகளுக்குச் சந்திரனோடுள்ள சம்பந்தம் போன்று தெய்வீக ஒளிகளோடு சம்பந்தத்தையுடைய அவனது அடியார்களில் ஒருவரான மலக்கிற்கு அவை கட்டுப்பட்டு நடப்பதுமாகும் என்றும், சொல்கிறார்கள். எனவே, அந்த ஆட்டி அசைக்கிறவரின் (மலக்கின்) மூலமாக வழிப்படப்பட்ட (வணங்கப்பட்ட)வரே நாயன் என்று நம்புகிறார்கள்.

ஆகையால், வஸ்துக்கள் ஒன்றையொன்று நெருங்கும் விதத்தினாலல்லாமல் கட்டளையிட்டு ஏவல் செய்யும் முறைப்படி எல்லாவற்றையும் ஆட்டி அசைக்கக் கூடியவரை அல்லாஹுத் தஆலா நியமித்து வைத்திருக்கிறான். (என்று கருதுகிறார்கள்). பின்னர் அவ்விதமான கட்டளையைப் பற்றியும், அதன் எதார்த்தத்தை விளக்கி வைப்பதிலும் மிகவும் ஆழ்ந்த

பேச்சுண்டு. பெரும்பாலாரின் விளக்கம் அதற்கு மாட்டாங்காகியாகிவிடும். இந்த நூலும் அதற்கிடங் கொடாது. (சொல்லப்பட்ட) இவர்கள் பலவகையினர்களாவார்கள். இவர்கஎல்லோருமே கலப்பட்ட ஒளியினால் திரைபோடப்பட்டவர்களாவார். எனினும், வாஸிலானவர்கள் (ஹக்கின் சமூகம் சேர்ந்தவர்கள்) நான்காவது கூட்டத்தினரேயாவார்கள். இந்த நான்காவது கூட்டத்தவர்களுக்கும் அந்த வழிப்படப்பட்ட நாயன் கலப்பற்ற வஹ்தானியத்திற்கும் (ஏகத்துவத்திற்கும்) முடிவான சம்பூரணத்திற்கும் மாறான லட்சணத்தைப் பூண்டவன் என்றேதான் வெளியாகிறது. இதுவும் ஓர் இரகசியத்தினால் தான் அதைப் பற்றி விவரிக்க இந்நூல் இடம் தராது.

இன்னமும் அந்த வழிப்படப்பட்ட நாயனுக்கும், சத்திய மெய்ப்பொருளான ஹக்குதஆலாவுக்குமள்ள சம்பந்தமாகிறது சூரியனுக்குக் கலப்பற்ற ஒளியோடு உள்ள சம்பந்தம், அல்லது நெருப்பு கங்கிற்கு கலப்பற்ற நெருப்போடு உள்ள சம்பந்தமாகும். (என்றும் அவர்களுக்கு வெளியானது) ஆகவே, அவர்கள் வானங்களை எல்லாம் அசைத்தாட்டுகின்றவன் யார்? அவைகளை அசைத்தாட்டும்படி கட்டளையிடுபவன் யார்? என்று (அறிவதற்காக) கவனத்தைத் திருப்பியபோது பார்க்கிறவர்கள். ஒருவருடைய கண் பார்வைகளும் அவர்களின் அகப்பார்வைகளும் எட்டிக் கொள்வதை விட்டும் பரிசுத்தமான ஓர் உண்மைப் பொருளிலேயே போய்ச் சேர்ந்தார்கள். ஏன்? நாம், முன்பு வர்ணித்து வந்த எல்லாவற்றையும் விட்டும் அவனைப் பரிசுத்தமானவனாகவே பெற்றுக் கொண்டார்களே. பின்னர், இவர்களும் பலவகையினராகப் பிரிந்தார்கள். இவர்களில் ஒரு வகையார் அவனில் நின்றும் அவர் பார்வை எட்;;டக் கூடியது அத்தனையும் கரிந்தழிந்து இல்லாமலாகி, எங்கிலும் அவர் மட்டும் பரிசுத்தப் பேரழகைப் பார்த்தவராகவும், இன்னும் அந்த் தெய்வீக சமூகத்தில் சேர்ந்ததனால் கிடைத்த பேரழகிலே தனது தாத்தையும் காண்பவராகவும் எஞ்சி தரிபட்டிருக்கிறார். இதில் காண்பனையன்றி காணப்பட்ட பொருளத்தனையும் அழிந்து விட்டது. அவர்களில் சிலர் மிக்கவும் விசேஷமானவர்கள். (இவர்கள்) அவர்களையும் தாண்டி விட்டவர்கள். இவர்களை அது (ஹக்கு தஆலாவின் பரிசுத்த தாத்தின் திருமுகம்) கரிந்து விட்டது. அவனின் ஜலால் (ஆங்கார லட்சணம்) உடைய அதிகாரம் இவர்களை மூடிவிட்டது. இவர்கள் அழிந்து தங்கள் தாத்தே இல்லாமற் போனார்கள். தங்களை விட்டுங்கூட அழிந்து நாஸ்தியாகி விட்டதனால் இவர்களுக்குத் தங்கள் கவனமும் எஞ்சியிருக்கவில்லை. ஒருவனான மெய்ப் பொருள் ஒன்றேயல்லாது வேறொன்றும் மிச்சமில்லை.

'எல்லா வஸ்துக்களும் அழிந்தவையே, அவனது வஜ்ஹைத் தவிர' (28:88) என்ற (திருமறை வசனத்தின்) பொருள் இவர்களுக்கு அனுபவ ரீதியாகி விட்டது. இதுபற்றி நாம் முந்திய அத்தியாயத்தில் சயிக்கினை செய்துள்ளோம். இன்னும் இவர்கள் இத்திஹாது (ஒன்று சேர்தல்) என்ற பதத்தை எப்படிச் சொன்னார்கள்? அதைக் கொண்டு என்ன கருதிக் கொண்டார்கள்? என்பதனையும் கூறியுள்ளோம். இது தான் வாஸிலீன்களின் தீர்ச்சையான முடிவாகும்.

இன்னும், அவர்களில் சிலர் ஏற்றத்திலும் உயர்விலும் (மேலே) நாம் சொல்லிவந்தபடி, படிப்படியாக ஏறாமலும், அவர்களின் ஏற்றத்தில் தாமதமில்லாமலும் முதலாம் ஏற்றத்திலேயே

பரிசுத்தத்தை அறிவதளவிலும், நாயகத் தனத்தை எதைஎதை எல்லாம் விட்டு பரிசுத்தப் படுத்துவது அவசியமோ அவைகளை எல்லாம் விட்டும் தூய்மைப்படுத்துவதளவிலும் முந்தி விட்டார்கள். மற்றவர்கள் பேரில் கடைசியாக மிகைக்கக் கூடியது இவர்கள் பேரில் துவர்க்கத்திலேயே மிகைத்து இவர்கள் பேரில் (ஹக்கின்) தஜல்லி (காட்சி) ஒரேடியாக வந்து வேகமாய் அடர்ந்தேறி அவனது திருமுகத்தின் ஜுவாலை புலன் பார்வையோ அல்லது அகப்பார்வையோ எட்டிக் கொள்ள சாத்தியமானவையடங்கலையும் கரித்து விட்டது. முந்தியது நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் கலீலுல்லாஹி அவர்களது வழிக்கும், பிந்தியது நபி முஹம்மது முஸ்தபா ஹபீபுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வழிக்கும் ஒப்பாகும். (முந்தியது ஸுலூக்கின் வழியும், பிந்தியது ஜதுபின் வழியுமாகும். 'அல்லாஹ் தான் நாடியவர்களை தன்னளவில் தெரிந்தெடுத்துக் கொள்வான். இன்னும் அவனளவில் மீளுகிறவர்களுக்கு வழியும் காட்டுவான்') அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் அவ்விருவர் பேரிலும் உண்டாவதாக.

இவ்விருவரது பாதங்களின் இரகசியங்களைப் பற்றியும், இவ்விருவரது மகாம்களின் ஒளிப்பிரகாசங்களைப் பற்றியும் அல்லாஹ் நன்கறிந்தவன். இதுதான் திரையிடப்பட்டவர்களின் பிரிவினர்களைப் பற்றியள சயிக்கினையாகும்.

மகாமத்து (தங்குமிடம்)களை வகுத்துப் பார்க்கப்படுமானால், இன்னும் இறைவழி நடப்பவர்களின் திரைகளை ஆராய்ந்து பார்க்கப்படுமானால் அவர்களின் எண்ணிக்கை எழுபது ஆயிரத்தை எட்டுவது தூரமல்ல. ஆனால், அவர்களில் ஒவ்வொருவரைப் பற்றியும் துருவிப் பார்த்தால் நாம் சொல்லிவந்த கூட்டங்களை விட்டும் அப்புறப்பட மாட்டார்கள். ஏனென்றால், அவர்களைத் திரையிடப்படுவதெல்லாம் ஒன்று, அவர்களின் மனித லட்சணப் பண்புகளைக் கொண்டாகும். அல்லது புலனைக் கொண்டு அல்லது கற்பனையைக் கொண்டு அல்லது புத்தியின் கணிப்புகளைக் கொண்டு அல்லது முன் சொல்லப்பட்டது போல் கலப்பற்ற ஒளியைக் கொண்டேயாகும். இதுதான் இந்த வினாக்களின் விடைகளில் என் முன்னால் வந்ததாகும். வினாவோ என்னை வந்து மோதுகிறது. (ஏன்) சிந்தனையோ பலவாறாகப் பிரிந்து கிடக்கிறது. கவனம் இந்தப் போக்கிலல்லாத வேறொன்றில் சென்று கொண்டிருக்கிறது. ஆதலால், நான் Nவுண்டிச் சொல்வதாகிறது, எனக்கு எனது எழுதுகோல் வரம்பு கடந்து போவதிலும், பாதம் சறுகிப் போவதிலும் என்னை மன்னிக்கும்படி துஆ கேட்பதாகும்.

தெய்வீக இரகசியத்தின் ஆழத்தில் மூழ்குவது பெரும் சங்கடமானதாகும். திரைக்கப்பாலுள்ள உயர்வான ஒளிப்பிரகசாத்தை வெளியாக்குவது இலேசானதல்ல.

சர்வ புகழும் உலக இரட்சகனான நாயனாகிய அல்லாஹ்வுக்கே. கிருபையாளனாகிய அல்லாஹ் எங்கள் பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது பரிசுத்த சகாக்கள் மீதும், கிளைஞர் மீதும் ஸலவாத்தும் (ஸலாமும்) சொல்லியருள்வானாக! ஆமீன்.

*முற்றும்.*